
# கண்ணின் மணி போன்றவளே

ரமணிசந்திரன்



# கண்ணின் மணி போன்றவளே

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை :: சென்னை-600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| புத்தகத்தின் பெயர் | : கண்ணின் மணி போன்றவளே |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஜூன், 2001 |
| இரண்டாம் பதிப்பு | : டிசம்பர், 2003 |
| மூன்றாம் பதிப்பு | : ஜூன், 2005 |
| நான்காம் பதிப்பு | : மார்ச், 2007 |
| ஐந்தாம் பதிப்பு | : ஜூலை, 2008 |
| ஆறாம் பதிப்பு | : பிப்ரவரி, 2010 |
| ஏழாம் பதிப்பு | : ஜூலை, 2011 |
| எட்டாம் பதிப்பு | : பிப்ரவரி, 2013 |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 200 |
| கட்டமைப்பு | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# கண்ணின் மணி
# போன்றவளே

# கண்ணின் மணி போன்றவளே

## 1

அன்றைக்கென்னவோ நிகிலாவுக்கு, அவளுடைய தாயின் நினைவு அதிகமாக வந்தது. அவள் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் லீவு நாளும் அதுவுமாக அருமைச் சின்ன மகள், இப்படித் தனியே மொட்டு மொட்டு என்று உட்கார்ந்திருக்க விட்டிருப்பாளா?

மகளின் முகம் வாடினால், பொறுக்க மாட்டாளே!

அருகில் வந்து அமர்ந்து வேடிக்கையும் விளையாட்டு மாக ஏதாவது கதை பேசுவாள், அல்லது செஸ், சைனீஸ் செக்கர்ஸ், தாயக்கட்டம், சீட்டு... என்று ஏதோ ஒரு விளையாட்டு, மகளோடு சேர்ந்து விளையாடுவாளே!

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் இறந்து போன, தந்தையின் நினைவில், மகள் ஏங்கிவிடக் கூடாதாம்! 'குழந்தை வருந்தும்படி விட்டுவிடாதே' என்று அப்பா சொல்லியிருக்காராம்!

நோய் குணமாகாது என்று தெரிந்தும், அவளோடு வைத்துக் கொள்ளும்படித் தமக்கையிடம், அன்னை

சொன்னதன் காரணம் கூடத் தனிமைத் துயர் அவளைத் தாக்கிவிடக் கூடாது, என்பதற்காகத்தான் இருக்க வேண்டும். மற்றபடி, வேலை பார்க்கும் பெண்களுக்காக எத்தனையோ விடுதிகள் இல்லையா?

ஒரு தலைவலி, காய்ச்சல் என்றால் கூடப் பிறந்தவள் கருத்தாகப் பராமரிப்பாள் என்றும் அம்மா எண்ணி யிருக்கலாம். மறைந்து விடப் போகும், தன் நினைவு வந்தாலும், தன் வயிற்றில் பிறந்த மூத்தவள், இன்னொரு தாயாக அன்பு காட்டி, அந்த வருத்தத்தைப் போக்குவாள் என்றும் கூட நினைத்திருக்கலாம்...

ஆனால், அது எந்த அளவு சரி என்பதுதான், இப்போது நிகிலாவுக்குப் புலப்படாத புதிராக இருந்தது.

அன்றைக்கு, நிகிலாவுக்கு தலைவலி. அதற்காக, முன்கூட்டியே திட்டமிட்டிருந்த எம்ஜியெம் உல்லாசப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, அக்கா அவளுக்கு தலை பிடித்து விட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று ஒன்றும் ஆசைப்படவில்லை ஆனால்....

நீலாவும், அடியோடு அக்கறை இல்லாதவள் போலவும் தோன்றவில்லை.

கன அக்கறையாகத் தலைவலித் தைலத்தைத் தேடி எடுத்துக் கொடுத்து நன்றாகத் தேய்த்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து கொள்ளுமாறு, கரிசனத்தோடு கூறத்தான் செய்தாள்!

அத்தோடு நின்றிருந்தால்கூட, நிகிலாவுக்கு எவ்வளவோ பரவாயில்லாமல் இருந்திருக்கும். வலியோடு தனியாகக் கிடப்பது தவிர, வேறு சஞ்சலம் இல்லாது போயிருக்கும்!

ஆனால், நீலா சேர்த்துச் சொன்ன சில வார்த்தைகள்தான், நிகிலாவை உறுத்தின. "வலிக்கு சுகமாக இருக்கும் என்று, நீ பாட்டில் போய்ப் படுத்துக் கொண்டு விடாதே நிக்கிம்மா. அப்புறம், தூக்கம் கீக்கம் வந்து தொலைக்கப் போகிறது! நீ தூங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான், உனக்கு நான் தலைவலி மாத்திரைகூடத் தரவில்லை. சற்றுப் பொறுத்து வேலைக்காரி வருவாள். அவளுக்குக் கதவைத் திறந்து விட்டால் மட்டும் போதாது. அவள் வேலை முடித்துப் போகிற வரை, அவளை கண்காணித்தபடி, அவள் பின்னாலேயே சுற்ற வேண்டும். இல்லாவிட்டால் வேலை சுத்தமாக இராது. கையும், நீளக்கூடும். அதனால், கவனமாக இரு. ஆறு மணிக்குப் போல, எல்லோருக்குமாக இட்டிலி அவித்து, ஒரு சட்டினியும் அரைத்து விடு. 'மிக்ஸி' தானே அப்படி ஒன்றும் சிரமமாக இராது..."

யோசித்துப் பார்த்தால், பெரிதாக ஒன்றும் இல்லை. வீட்டிலிருக்கும் ஒரு தங்கையிடம், ஒரு தமக்கை, எதிர்பார்க்கக் கூடியதுதான்... ஆனாலும், நிகிலாவுக்கு மனதை உறுத்தியது.

அவளது வலியைவிட அக்காவுக்கு அவளது வேலையும், பொருளும்தான் பெரிதா? என்று உள்ளூரப் பொருமினாள்.

அதிலும், வனிக்குட்டி, "சித்தியும் வரணும்" என்று சிணுங்க, "பாட்டி செத்து அதற்குள், சித்தி இப்படியெல்லாம் ஜாலியாகச் சுற்ற வரமாட்டாள்" என்று சொல்லிச் சிறுமியை இழுத்துப் போனதுதான், உறுத்தலை ரொம்பவும் மிகுதியாக்கி விட்டது.

'சித்தி வரமாட்டாள்' என்றால் இவள் மட்டும் போகலாமா? இவளையும் அம்மாதானே பெற்றார்கள்?

'பாட்டி செத்து' என்று எவ்வளவு சாதாரணமாகச் சொல்லுகிறாள்! 'அம்மா இல்லாமல் போய்' என்பதற்கு மேல், இந்த மாதிரி வார்த்தைகளை, அன்னையோடு சேர்த்து நினைக்கக்கூட, நிகிலாவால் முடியவில்லையே!

பொருமியபடியே உட்கார்ந்திருந்தவளுக்குத் தலைவலி அதிகமாகி விடவே, வேலைக்காரி வந்ததும், அவளிடம் பணம் கொடுத்து மாத்திரை வாங்கிவரச் சொன்னாள். அதை விழுங்குமுன், வயிற்றுக்குள் எதையாவது போட்டுக் கொள்ள எண்ணிச் சாப்பாட்டு மேஜையைப் பார்த்தால், அங்கே ஒன்றும் இல்லை. சமையல் அறையில், பாத்திரங்களை ஆராய்ந்த போதும், கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாதம், கொஞ்சம் தயிர் சாதம் தவிர, எதுவுமே இல்லை.

ஊறுகாய் பாட்டிலின் அடியில் கிடந்த, கொஞ்சம் மசாலா தவிர.

சித்ரான்னமாகச் சாப்பிட அவர்கள் எடுத்துப் போனதில், நிகிலாவுக்கும் சிறிதளவு வைத்துவிட்டுப் போயிருக்கிறார் கள்.

யோசித்துப் பார்த்தால், அதில் தப்பு சொல்ல ஒன்றுமில்லை. இரு சாதத்திலும், ஒர் அரைக் கரண்டி அதிகம் வைத்துவிட்டுப் போயிருந்தால் அவளுக்கும் வயிறு நிறைந்துவிடக் கூடிய அளவுதான்.

கூடவே தொட்டுக் கொள்ளவும், ஏதேனும் வேண்டாமா? அவளுக்கென்று இல்லை அவர்களுக்கும்தான்! வேண்டும் தானே?

செய்து, அவளுக்கு வைக்காமல், அவர்களுக்கு மட்டுமாக, முழுவதையும் எடுத்துப் போய் விட்டார்களா?

என்ன அநியாயம் என்று, ஆத்திரப்படும்போதே, வழியில் சிப்ஸ் வாங்கிக் கொள்ளலாம் என்ற மாதிரிப் பேச்சு ஏதோ காதில் விழுந்த நினைவு வந்தது.

சே! வரவர மூளையே சரியில்லை! வழியில் சிப்ஸ் வாங்கு கிறவர்கள், அவளுக்கு எப்படி வைத்துவிட்டுப் போக முடியும்? அதற்குள் அநியாயம் என்று நினைத்து, கோபப்பட்டு... மடத்தனம்!

கூடப்பிறந்த அக்கா தங்கைக்குக் கொடுக்கக்கூடாது என்று எண்ணுவாளா? அவ்வளவு யோசிக்கத் தெரிய வில்லையே!

காலை உணவு வைக்காதது கூடத் தலைவலியினால் அவதிப்படுகிறவள், உண்ணப் பிடிக்காமல் வீணாக்கிவிடக் கூடாதே, என்ற எண்ணத்தினால்தான் இருக்கும்.

இப்போது, வேலைக்காரியை மீண்டும் அனுப்பி, மெயின் ரோடில் இருக்கும் ஹோட்டலில், இடியாப்பம் மாதிரி ஏதாவது வாங்கிவரச் சொல்லி, அதனோடு மாத்திரையை விழுங்க வேண்டியதுதான்! இன்னொரு தரம் கடைக்கா, என்று வேலைக்காரி முகத்தைத் தூக்குவாள். 'உனக்கும் ஒரு செட் வாங்கிக் கொள்ளடி' என்றால், சந்தோஷமாகப் போவாள்!

முடிவு செய்துவிட்டு, கைப்பையைத் திறந்தவளுக்கு, மீண்டும் எரிச்சல் வந்தது.

பையில், மிகக் கொஞ்சப் பணம் தான் இருந்தது. இரண்டு பேருக்கு, நன்றாக எதுவும் வாங்கப் பற்றாது.

சுருசுருவென்று, மறுபடியும் எரிச்சல் பெருகியது.

இந்த வீட்டுக்கு வந்து, இது ஓர் அசட்டுத்தனம். சம்பளத்தை, அக்காவிடம் கொடுத்துவிட்டு, அன்றாடச் செலவுக்கு, அக்காவிடம் கையேந்துவது!

காரணம் இந்தப் பக்கம் 'பிக்'பாக்கெட்டுகள் அதிகமாம்.

அக்கா கணவன் கணபதி, அன்று, அவன் பையில் வைத்திருந்த நூறே ரூபாயைக் கூடப் பறி கொடுத்துவிட்டு வந்து நின்ற பிறகு, நிகிலாவுக்கே, பயம் வந்துவிட்டது.

மாதம் முழுவதும் உழைத்துச் சம்பாதிக்கும் காசு ஒரு வினாடியில் பறி கொடுப்பது என்றால், எவ்வளவு துன்பம்?

அவளது பெட்டியில் வைத்தால், வேலைக்காரி லோகு திருடி விடுவாளோ என்று அதற்கும் பயமாக இருக்கவே, நிகிலாவும், அவளது சம்பளத்தை, நீலாவிடமே கொடுத்து வைக்கத் தொடங்கினாள்.

அம்மா இருக்கும்போதும், அவளது வருமானத்தை தாயாரிடம் கொடுப்பது பழக்கம்தான். ஆனால், அந்தப் பணத்தை, சுவாமி படத்தின் முன் வைத்துக் கும்பிட்டு எடுத்து, அலமாரியில் வைப்பார்கள். அதன் பின், எப்போது வேண்டுமானாலும், அலமாரியைத் திறந்து, தேவைப் படுவதை நிகிலா எடுத்துக் கொள்வாள். என்ன, எதற்காக என்று, பாக்கியம் கணக்குக் கேட்பது கிடையாது. நிகிலா சொன்னதும் இல்லை. சொல்லும்படியாக, நிகிலா அதிகச் செலவு செய்வதும் இல்லை. அடுத்த மாதச் சம்பளம் வரும்போது, முன்மாதம் மீந்தது, பாங்க் சேமிப்புக் கணக்கில் சேரும்.

ஆனால், இங்கே அப்படியிருக்கவில்லை.

வேலைக்காரிக்குப் பயந்தோ, என்னவோ, நீலா அவளது பீரோவைப் பூட்டியே வைத்திருந்தாள். அதன் சாவி, அவள் இடுப்பிலேதான் தொங்கும்.

எனவே, பணம் ஏதும் வேண்டுமானால், அவளிடம் கேட்டுத்தான் வாங்க வேண்டும். அவளும், சும்மா கொடுத்து

விட மாட்டாள். என்ன செலவுக்கு என்று கேட்பதோடு இப்போது இந்த செலவுக்கு என்ன அவசியம் என்றும் கேட்பாள். கூடவே, சிக்கனத்தின் உயர்வு பற்றி, ஒரு சொற்பொழிவு நடக்கும்.

சில சமயங்களில், கணபதியும் அதில் சேர்ந்து கொள்வான். ஏன் கேட்டோம் என்று ஆகிவிடும், நிகிலாவுக்கு.

பல நேரங்களில் பணத்தை வாங்காமல் சும்மாவே இருந்துவிடுவாள்.

சிக்கனம் வாழ்க்கைக்குத் தேவைதான். ஆனால், எப்போதாவது, ஓர் ஐஸ்க்ரீம், சினேகிதி பிறந்த நாளைக்கு ஒரு 'பொக்கே', உடம்பு அலுத்திருக்கும்போது, பஸ்சை விடுத்து ஓர் ஆட்டோ பயணம்... இதெல்லாம் ஊதாரித்தனம் ஆகிவிடுமா என்ன?

ஒவ்வொரு வேளைகளில், முதுகு ஒடிய உழைத்துச் சம்பாதிப்பவள் நான். அப்படிச் சம்பாதித்த பணத்தைத்தானே கேட்கிறேன் என்று தோன்றிப் பிடிவாதமாகப் பணத்தை வாங்கிச் செலவு செய்வதும் உண்டு.

அது மிக அபூர்வம்!

பொதுவாகத் தகராறுக்கு ஒதுங்குகிற தன்மை உடையவள் நிகிலா. ஓரளவு பொறுத்துப் போகிறவளும் கூட அதனால், ஆசையை அடக்கிக்கொண்டு, அம்மா இருந்திருந் தால்.... என்று வருத்தப் பட்டுக்கொண்டு, சும்மா இருந்து விடுவாள்.

ஆயினும், இப்படி ஒரு சில சந்தர்ப்பங்களில், நிகிலாவின் பொறுமை, மிகவும் சோதிக்கப்பட்டுப் போவதுண்டு. அப்போதெல்லாம் தப்பாக எதையும் பேசிவிடக் கூடாது.

வார்த்தைகளைக் கொட்டிவிட்டால், அள்ள முடியாது. அப்புறம், அக்கா முகம் பார்த்துப் பேச முடியாமல் போய் விடும் என்று மிகவும் பிரயாசைப்பட்டு, நிகிலா தன்னை அடக்கிக் கொள்வாள்.

இப்போதும், இந்த மாதிரி நிலைமைதான். தலைவலி யோடு பசியும் சேர்ந்து கொள்ள, பசி, வலியை அதிகமாக்கி விட, கிட்டத்தட்ட கொதிநிலைதான்.

நீலா மட்டும் இங்கே இருந்திருந்தால், என்னவாவாது பொரிந்து கொட்டியிருப்பாள். அவள் இல்லாது போகவே, செய்கையற்ற கோபத்தில் திணறிக் கொண்டிருந்தாள்.

தலையைப் பிடித்துக் கொண்டு, நிகிலா அமர்ந்திருப் பதைப் பார்த்துவிட்டு, லோகு அவளிடம் என்னவென்று கேட்டாள்.

சும்மா என்றால், சொல்லிருப்பாளோ, என்னவோ? அன்றையத் தனிமையும், தலைவலியும் தாக்க உள்ள நிலமையை நிகிலா அவளிடம் சொல்லிவிட்டாள்.

ஆனால், "ஐயே, உங்க அக்காதானே? செய்யும். எச்சிக் கையாலே காக்கா ஓட்டாதே. உனக்கு மட்டும் வைக்கவா போவுது? நான் வேணா, என் காசைப் போட்டு வாங்கியாரேன், நீ மொள்ளமாக் குடு" என்று அவள் கூறவும் ஒரு மாதிரியாகி விட்டது.

"சேசே! அதெல்லாம் வேண்டாம். ஒருவேளை பட்டினி கிடந்தால் நல்லது என்று அக்கா அப்படிப் போயிருப்பாள். ஒருவேளை, அதுதான் நல்லதோ, என்னவோ? வேலை முடித்துவிட்டால் கிளம்பு. நான் கதவைப் பூட்டிக் கொள்கிறேன்." என்று சமாளித்தாள்.

''என் வேலை, இப்ப எங்கம்மா, முடியும்? அதான் ஒரு மூட்டை துணி கிடக்குதே. இப்ப நீ வெத்து வயித்தோடக் கெடக்காதே. இத, வாரேன்.'' என்று வெளியே சென்றாள்.

அவள் திரும்பி வரும்போது, அவள் கையில் இரண்டு பன்னும் ஒரு பொறையும் இருந்தன.

''இந்தா, இத்தச் சாப்பிட்டு, அப்ப வாங்கியாந்த மாத்திரையை முளுங்கு'' என்றாள்.

அடுப்பங்கரையை உருட்டி டீயும் போட்டுக் கொண்டு வந்தாள்.

ஏதோ, அவள் அறிந்த வைத்தியம்!

என்னவோ அந்த டீயும் பன்னும் அமிர்தமாய் ருசித்தது நிகிலாவுக்கு. யாராயினும், அவளிடம் அக்கறை கொண்டு செய்தார்கள் என்பதே, சுவையை அளித்ததோ, என்னவோ?

லோகு வாங்கி வந்ததற்கான பணமும் அவளிடம் இருக்கவே, சற்றுக் கூடுதலாகவே எடுத்துக் கொடுத்துவிட்டு, ''பொறையை, நீயே சாப்பிட்டுவிடு லோகு. இது எனக்குப் போதும்'' என்று சொல்லிப் பொறையையும், மீதமிருந்த டீயையும் அவளிடம் கொடுத்தாள்.

லோகுவுக்கும், மிகவும் சந்தோஷம்.

டீயை மட்டும் குடித்துவிட்டுப் பொறையைப் பத்திரப் படுத்திக் கொண்டாள். ''புள்ளைக்கும்மா. பொறையின்னா அதுக்கு ரொம்ப இஷ்டம்.'' என்று மகிழ்ந்தவள் அத்தோடு நிற்கவில்லை.

சோபாவில் சாய்ந்திருந்த நிகிலாவின் அருகே தரையில் அமர்ந்து, ''இத்த கொஞ்சம் கவனமாக் கேட்டுக்கோ, தங்கச்சிப் பாப்பா. நீ உஷாரா இல்லாட்டி, உன் அக்கா,

உன்னை மொட்டை அடிச்சிடும். அது புத்தியே வேற. விட்டுக்கினே இருந்தியானா, அப்பறமா, உனுக்கு ஒண்ணும் மிஞ்சாது. சொல்லிபுட்டேன்.'' என்று, இலவச ஆலோசனை வழங்கிவிட்டு, தன் வேலையைப் பார்க்க எழுந்து சென்றாள்.

கொஞ்சம் இடம் கொடுத்தால் போதுமே, இவர்களுக் கெல்லாம்! ஒன்ன இரண்டாக்கி, இரண்டை நாலாக்கி விடுவார்களே! என்று உள்ளூரச் சற்று ஏளனமாக எண்ணிய போதும், புன்னகையுடனேயே கண்களை மூடிக் கொண்டாள், நிகிலா.

அப்போதைக்கு லோகுவின் பேச்சை ஏளனமாக எண்ணி, அலட்சியப் படுத்திய போதும், அதன் பின் நிகிலாவின் மனதுள், ஒரு சிறு உறுத்தல், அவ்வப்போது தோன்றி, நமநமக்கத் தொடங்கியது.

அன்னை இறந்தபின், அடுத்த துணை என்று எண்ணி, இங்கே வந்தது தப்போ என்று அவளுக்குத் தோன்றத் தொடங்கியது!

## 2

நிகிலாவுடைய தாயார் பாக்கியம், தன் சின்ன மகளுக்காகப் பார்த்திருந்த மாப்பிள்ளை, சுகேசன்.

உரம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் ஓரளவு நல்ல வேலையில் இருந்தான். மகளுக்குத் திருமணம் செய்ய விரும்புவதாக பாக்கியம் ஒரு சினேகிதியிடம் சொல்ல, அந்த சினேகிதி செய்த ஏற்பாடு.

பையனின் தோற்றம், குடும்பம், வருமானம் முதலியவை பாக்கியத்துக்குப் பிடித்துப் போயின.

தாயார் தனக்கு நல்லதுதான் செய்வாள் என்பதில் நிகிலாவுக்கு முழு நம்பிக்கை உண்டு.

நிகிலாவின் தோற்றம், வருமானம் எல்லாம் சுகேசனுக்கும் மிகவும் பிடித்தமாய் இருக்கவே, மேற்கொண்டு, பெண்ணிடம் மனம் விட்டுப் பேசினான்.

வீடு, வீட்டில் ஃபிரிஜ், பெரிய டீவி, என்று தன் கனவுகளை அவன் அவளிடம் சொன்னான். இருவருமாகச் சேமித்து அவற்றையெல்லாம் வாங்கவேண்டும் என்றான்.

அதில் தப்பேதும் இருப்பதாக, நிகிலாவுக்குத் தோன்றவில்லை. மாறாக, அவனது வெளிப்படையான பேச்சே, அவளைக் கவர்ந்தது எனலாம்.

அக்கா நீலாவுடைய கணவனைப் போல, ஜாடை மாடையாக, 'மிக்ஸி பழுது பார்க்க முடியாத அளவுக்கு ரிப்பேர். பாவம், உங்கள் மகள், இனி அம்மியில்தான் அரைக்க வேண்டும். நல்லவேளையாக, வீட்டுக்காரன் வீட்டில் ஓர் அம்மியும் பதித்து வைத்திருக்கிறான்' என்று மிக்ஸிக்கு அடி போடாமல், இருவருமாகப் பணம் சேர்த்து வாங்கவேண்டும் என்கிறானே!

அவள் விவரத்தைத் தாயிடம், சொன்னபோது, இவளது அபிப்பிராயத்தையே தான், அவளும் எதிரொலித்தாள்.

"உனக்கென்னம்மா, வயது? இருபத்தொன்றுதானே? இரண்டு ஆண்டுகள், இருவருமாகச் சேமியுங்கள். கடவுள் தயவில், வருகிற பென்ஷன், நம் இருவர் செலவுக்கும் போதும், சின்ன மாப்பிள்ளை சொல்லுவது போல, இருவரும், முடிந்த அளவு சேமியுங்கள். பிறகு கல்யாணத்தைப் பணணிக் கொள்ளுங்கள்" என்று ஆசீர்வதித்தாள்.

வேலை உயர்வில், சுகேசன் திருநெல்வேலிக்குப் போக நேர்ந்தபோது, சொல்லிக்கொள்ள வந்தான். "வேலை உயர்வு. சம்பளம், ஆயிரம் ரூபாய் கூட வருகிறது. அந்தப் பக்கம் செலவும் குறைவு. நிறையவே சேமிக்கலாம் என்று இருக்கிறேன். கண்காணிக்க ஆள் இல்லை என்று, கண்டபடி செலவு பண்ணாமல், நீயும் பணத்தைச் சேர்த்துக் கொண்டுவா." என்று அவன் சொன்னபோது, திருமணம் சீக்கிரம் நடைபெற வேண்டும் என்பதற்காக அல்லவா சொல்லுகிறான் என்று ஆனந்தமாகத்தான் இருந்தது.

சின்ன மகளைப் பொறுத்தவரையில் பாக்கியம் வெறும் முகம் பார்க்கும் கண்ணாடிதான்.

இவள் சிரித்தால் அவளும் சிரிப்பாள். இவள் அழுதால், அவளும் அதையேதான், பிரதிபலிப்பாள்.

ஆயினும் அவளை நோய் தாக்கத் தொடங்கியருந்ததன் பாதிப்போ, என்னவோ, "எதற்கும் திருமணத்தைக் கொஞ்சம் சீக்கிரமாகவே வைத்துக் கொள்ளச் சொல்லும்மா. நானும் நல்லபடியாகப் பார்க்க வேண்டும் அல்லவா?" என்று கேட்டாள்.

'என்னைச் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்' என்று வெட்கத்தை விட்டு, ஒருவனிடம் எப்படிக் கேட்பது? அத்தோடு இன்னும் இரண்டு ஆண்டுகள் அம்மாவோடு ஜாலியாக இருப்பதை விட்டு, அதற்குள் என்ன திருமணம்?

"போங்கம்மா! என்ன அவசரம்?" என்று அப்போதைக்கு முடித்துவிட்டாள், மகள்.

ஆனால், திடுமெனத் தாயின் உடல்நிலை சீர்கேடுற்று, பிழைப்பதே கடினம் என்று ஆனபோது, ரொம்பவும் கலங்கிப்

போய் தமக்கைக்குத் தகவல் தெரிவித்ததோடு, சுகேசனையும் வரவழைத்தாள்.

அப்போதும், அவள் தன் கொள்கைப்படிதான் திருமணம் என்றபோது, நிகிலாவுக்கு வருத்தம்தான். பாக்கியத்துக்கும் ஏக்கமே!

ஆனால், அவன் பொறுமையாக விளக்கினான்.

நிகிலா வேலை செய்த நிறுவனத்துக்கு திருநெல்வேலிப் பக்கம் கிளைகள் கிடையாது. இப்போது, திருமணம் செய்தால், ஒன்று, அவள் வேலையை விடவேண்டும். எனவே, அவளது வருமானம் நின்று போகும். அல்லது அவள் இங்கே தனியே வாழவேண்டும். ஒருவரை ஒருவர் பார்க்க வேண்டும் என்றால், போக்குவரத்துச் செலவு மட்டும் எவ்வளவு ஆகும் தெரியுமா? அவளது சம்பளத்தில், அதற்குமேல், சாப்பாட்டுச் செலவு வேறு அவளதாகிவிடும். அம்மாவுக்குப் பிறகு அவளது பென்ஷன் வராதில்லையா?

'அம்மாவுக்குப் பிறகு' என்று அவன் சொன்னபோது நிகிலாவுக்கு பகீர் என்றது.

தவிப்புடன் அவன் நோக்கியபோது, பாக்கியமே சமாதானம் சொன்னாள். ''யதார்த்தம் அதுதானடா? நடப்பு இதுதான் என்றால், அதற்காக வருத்தப் படக்கூடாது'' என்றவள், சுகேசனிடம் திரும்பி, ''நீங்கள் சொல்வது சரிதான், மாப்பிள்ளை. ஆனால் கல்யாணம் ஆகமால், நிகிலா தனியாக இருந்தாலும் இதே நிலைமைதானே?'' என்று கேட்டாள்.

''இருக்கலாம். ஆனால் போக்குவரத்துச் செலவாவது, மிஞ்சும்தானே? ஏதாவது சாதாரண விடுதியில் தங்கி, சிக்கனமாகச் செலவு செய்தால்... அல்லது, சென்னைக்கு மாற்றல் வாங்கி, அவள் அக்கா வீட்டில் தங்கிக்

கொள்ளலாமே! கூடப்பிறந்த தங்கையின் சாப்பாட்டிற்குக் கூடப் பணம் கேட்பார்களா என்ன? இலகுவாக, நிறையச் சேமிக்கலாம்!''

''நீலா வீட்டிலா?'' என்று பாக்கியம் இழுத்ததோடு அப்போதைய பேச்சு முடிந்தது.

அக்கா வீட்டுக்குச் செல்லும்படி, நிகிலாவிடம், நேராக பாக்கியம் எதுவும் சொல்லாதபோதும், அன்று வந்து சேர்ந்த மூத்த மகளிடம், அது பற்றிப் பேசியிருக்க வேண்டும்.

வேலையைச் சென்னைக்கு மாற்றி, உன் வீட்டில் தங்கையை வைத்துக் கொள்ளம்மா. இனி, அவளுக்கு, நீதான் அடைக்கலம். மாப்பிள்ளையிடம் பக்குவமாகப் பேசி ஏற்பாடு செய்யம்மா என்று என்னிடம் அம்மா கெஞ்சினார் கள் நிக்கிம்மா. அது பற்றிக் கேட்டதற்கு, 'சின்னப். பெண். நம்மோடுதான் இருக்க வேண்டும். அவள் எனக்கும் தங்கைதான்' என்று விட்டார் அத்தான்.'' என்று தமக்கை கூறவும், பெரும் பாரம் இறங்கியது போல இருந்தது நிகிலாவுக்கு.

அக்கா வீட்டில், ஓசியில் சாப்பிட வேண்டும் என்று நிகிலா நினைக்கவில்லை. அந்த மாதிரி, சுகேசன் பேசியதுகூட அவளுக்கு பிடிக்கவில்லைதான். திருமணம் விரைவாக நடக்கத் தேவையான பொருள் சீக்கிரம் சேரும் என்று, அப்படிப் பேசிவிட்டான் என்று, தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள் அவள். அத்தோடு அக்காவுக்கு நல்லபடியாக ஏதாவது, வாங்கிக் கொடுத்து விட்டால், அது போதும் என்று நினைத்தாள்.

எப்படியும் தனியாக வாழ்வதைவிடச் செலவு மிகவும் குறையும்தானே?

அவள் பணி புரிந்த நிறுவனத்திலும், அவளது ஊதியத்தையும் உயர்த்தி, மாற்றலும் கொடுக்கவே, அவளுக்கு உள்ளூர ஓர் ஆறுதல்!

அம்மாவின் விருப்பம் போலவே, அதே சமயம், சுகேசனின் ஆசைப்படியும், குறிப்பிட்ட காலத்தில் திருமணம் நிறைவேறும் என்பது நிச்சயம்!

இந்த நம்பிக்கையோடுதான், நிகிலா, கோவையிலிருந்து சென்னைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு சென்றது.

ஆனால், இப்போது அந்த நம்பிக்கை ஆட்டம் காணத் தொடங்கியிருந்தது. வந்த முதல் மாதம் நிகிலா சம்பளம் வாங்கிக் கொண்டு வந்தபோது மளிகைக் கடைக்காரர் மளிகை பாக்கிக்காக வந்து காத்திருந்தார். உள் அறைக்குள் தங்கையை அழைத்துப் போய், "கொஞ்சம் உன் சம்பளப் பணத்தைக் கொடுக்கிறாயா, நிக்கிம்மா? அப்புறமாக, அத்தானிடம் கேட்டு வாங்கித் தருகிறேன்." என்று, நீலா கெஞ்சுதலாகக் கேட்கவும், சம்பளப் பணம் முழுவதையும் அப்படியே தூக்கிக் கொடுத்துவிட்டாள் தங்கை.

அந்தப் பணத்தை, நீலா திருப்பிக் கொடுத்துவிடத்தான் செய்தாள். இரண்டு தவணைகளாக.

அடுத்த மாதமும், அதுவேதான் நடந்தது. ஆனால் கொடுத்த பணத்தில் ஒரு சிறு பகுதி, திரும்பி வராமலே போயிற்று.

அதற்கடுத்த மாதம், கணபதி, நிகிலாவின் அலுவலகத் துக்கே வந்து, பணம் வாங்கிப்போனான்.

என்னவென்று கேட்ட. தங்கையிடம், "ஊரில் அத்தானுடைய அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று,

கையில் இருந்த பணம் எல்லாம் செலவாகி விட்டது கண்ணு. அதனால்தான் இரண்டு மாதங்களாகக் கொஞ்சம் கஷ்டம். எல்லாமே சீக்கிரம் சரியாகிவிடும். உன் பணம் பத்திரமாக இருக்கும். கவலைப் படாதே'' என்றாள் தமக்கை.

''அய்யோ! என் பணத்துக்காக சொல்லவில்லை, அக்கா. என்னவோ, உனக்குச் சங்கடம் போலத் தெரிகிறதே. என்று கேட்டேன். மற்றபடி, என் பணம் என்று நான் வேறாக நினைப்பேனா? தேவைப்படும்போது கேள். தருகிறேன்.'' என்று தானாகவே உதவ முன் வந்து மொழிந்தாள், தங்கை.

அதன் பிறகு, நிகிலாவின் சம்பளப் பணம், எல்லாவற்றுக்குமே, ஏதாவது செலவு வந்து நின்றது. திருப்பித் தருகிற பேச்சும் குறைந்தது.

பிக்பாக்கெட் பயத்தில் சம்பளக் கவர் அப்படியே, நீலாவின் கைக்குப் போன பிறகு, அது நிகிலாவின் சம்பாத்தியம் என்கிற எண்ணமே மற்றவர்களுக்கு மறந்துவிட்டாற்போல ஒரு பிரமை, நிகிலாவுக்கு, அடிக்கடி உண்டாயிற்று.

இப்படியே போனால், சுகேசன் விரும்பிய பணம் எப்போது எப்படிச் சேரும்?

சுகேசன் பற்றி, நீலாவிடம், நிகிலா பேச முயன்றபோது அவள் அதைக் காதுகொடுத்துக் கேட்பதாகவே இல்லை.

''அதெல்லாம் நடக்கிற நேரம் பார்த்துக் கொள்ளலாம், நிக்கி. இப்போதே. அதைப் பற்றியெல்லாம் நினைத்துக் கொண்டிராதே. அப்புறம்முகம் முதிர்ந்து போகும்.'' என்று மூத்தவள் சொன்னபோது, நிகிலா, கொஞ்சம் அசூசையாக உணர்ந்தாள்.

அவள் என்ன, கணவன் கனவா கண்டுகொண்டிருக்கிறாள், முகம் முதிர்வதற்கு? இப்படி என்று, ஒரு திட்டம் இருப்பதைச் சொல்வதற்குள், என்ன பேச்சு இது?

அவளது முகமாறுதலைப் பார்த்துவிட்டோ, என்னவோ கை நீட்டி தங்கையின் முகத்தைத் தொட்டு, "ரோஜாப்பூ மாதிரி இருக்கிறது உன் முகம்! இந்த அழகு கெட்டுவிடக் கூடாதே என்றுதான் சொன்னேனடி, தப்பாக எடுத்துக் கொள்ளாதே." என்று நீலா சொன்னபோது அடுத்தவள் மனம் சமாதானமும் ஆகிவிட்டது!

பாசத்தில் அவளுக்காகவென்று சொல்வதைத் தப்பாக நினைக்கலாமா?

அப்போதைக்கு, எல்லாம் சரியாகிப் போயிற்று.

ஆனால் பணம் பற்றிய பிரச்சினை தொடர்ந்தது.

சின்னச் சின்ன ஆசைகளை, அடக்கிக் கொள்ளும்படி பாக்கியம் மகளைக் கட்டாயப்படுத்தியது கிடையாது. அந்த மாதிரி ஆசைகள் நிறைவேறும்போது, மனமும், உடலும் இளமையாக இருக்கும் என்பது, அந்தத் தாயின் கருத்து எனவே, நிகிலாவுக்கு அப்படி அடக்கிப் பழக்கமும் கிடையாது.

இங்கே, அக்கா வீட்டில், அது முடியவில்லை.

ஒரு சம்பள தினத்தன்று, வழியில் ஷோ கேசில் பார்த்தது, அதிக விலைகூட கிடையாது. மனதுக்குப் பிடித்துப்போய், ஒரு சுரிதார் செட்டை வாங்கி வந்துவிட்டாள்.

அதற்காக கணபதி பேசிய பேச்சு, கத்திய கத்தலில் நிகிலாவுக்கு மிகவும் அவமானமாகிவிட்டது.

இந்த மாதிரி தான்தோன்றித் தனமாக நடப்பவர்கள் தங்குவதற்கான இடம், அவன் வீடு அல்லவாம்.

''ஒரு சுரிதார் செட் வாங்கியதில் என்னக்கா தப்பு?'' என்று தமக்கையிடம் கேட்டாள். நிகிலா. 'அதுவும் என் வருமானத்தில்' என்ற சொற்கள் அவள் தொண்டைக்குள் துடித்தன.

கணபதியிடம் நேரடியாகப் பேச், அவளுக்கு விருப்பம் இல்லை.

''தப்புதான்'' என்றாள் தமக்கையும். ''இந்த வீட்டில் இருக்கிறாய். உன் நல்லது கெட்டதிற்கு நாங்கள் பொறுப்பு இல்லையா? ஊர் உலகத்தில், என்னனென்னமோ நடக்கிறது. தனியாகப் போகிறஇடத்தில் எதாவது ஆனால் எல்லோரும் எங்களைத்தானே சொல்லுவார்கள்?''

''அப்படிப் பார்த்தால் அலுவலகத்துக்கும், தனியாகத் தானே போய் வருகிறேன்?''

''ஆமாம்மா. அதற்கே பாதி நேரம் நான் செத்துப் பிழைத்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் ஒரு நாளைப் போலப் பதிவாய் ஒரே வழியில் போய், அதே வழியில் திரும்பி வருகிறாய். இந்த வீட்டுப் பெண் என்று வழியில் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஏதோ, தப்புத் தண்டா என்றாலும், உடனே தகவல் கிடைத்துவிடும். நீ கண்டபடி, எங்கெங்கோ சுற்றப் போனால், எப்படித் தெரியும்?''

''தெரியக்கூடாது என்றுதானே, சொல்லாமல் போவதே! இப்படி நாலு இடத்துக்குப் போனால்தானே துட்டுள்ளவன் நாலு பேரைப் பார்க்க முடியும். ஆள் அழகா இருக்கிறாள் என்று பேசுவான்கள்.''

''அக்கா! அத்தானைக் கொஞ்சம் அளவோடு பேசச் சொல்லு!'' என்றாள் நிகிலா ஆத்திரத்துடன். கண நேர

அமைதியில், கணவன் மனைவிக்கிடையே, ஒரு பார்வைப் பரிமாற்றம் நடந்தது. தங்கையின் அருகே வந்து தோளை அணைத்து "பைத்தியம்! அத்தான் உன்னைச் சொல்ல வில்லையடி. ஊர் உலகத்தில் நடப்பதைச் சொல்லுகிறார். காசை வைத்துக் கொண்டு, இந்தப் பசங்கள் அலைகிறார்கள், தெரியுமா? நாளைக்கு உனக்கு ஒன்று என்றால் எங்களால் தாங்க முடியுமா? என்ன பெரிய வேலை? ஒரு துணி வாங்க வேண்டும் என்றால் என்னிடம் கேட்கலாமில்லையா? தனியாக அது போலக் கடைக்கெல்லாம் போவானேன்? அத்தோடு உனக்குச் சுரிதாருக்கு, இப்போது என்ன அவசியம்...?" என்று சொல்லிக் கொண்டே போனாள்.

சட்டென நிகிலாவுக்கு விஷயம் புரிந்தது.

நிகிலா, தனக்கென்று தன் பணத்தில் ஒன்று வாங்கியது, கணவன் மனைவி இருவருக்கும் பிடிக்கவில்லை! அதை நேரடியாகச் சொல்ல முடியாமல் சொன்னால் என் பணத்தில் நான் வாங்குவதை நீ என்ன சொல்வது என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று இப்படிச் சுற்றி வளைத்து மூக்கைத் தொடுகிறார்கள்!

ஒரு முன்னூறு ரூபாய், தனக்கென்று, அவள் எடுத்துக் கொண்டது, அதுவும் அவளது பணத்தில் வாங்கிக் கொண்டது. அவர்களுக்குப் பிடிக்கவில்லை!

என்ன இது?

வேலைக்காரி லோகுவின் பேச்சு மீண்டும் காதில் ஒலிக்க, நிகிலா, வெகுவாகக் கலங்கிப் போனாள்!

# 3

மனதில் சந்தேகம் என்று வந்துவிட்டால் எல்லாவற்றையும் துருவிப் பார்க்கத் தோன்றும்.

நீலாவின் குடும்பம் வாரம் ஒரு முறை சினிமாவுக்குப் போவது இப்போது உறுத்தியது.

குழந்தை வனிக்கு 'பாட்டரி'யில் இயங்கும் பெரிய பெரிய விளையாட்டுச் சாமான்கள் இத்தனை முன்பு கிடையாதே என்பது அவளுக்கு நினைவு வந்தது.

சொல்லப்போனால், அவளிடம் இருந்த இரண்டு, வண்ண விளக்குகளுடன் ஓடும் பஸ் ஒன்று, குட்டிக் கரணம் அடிக்கும் நாய் ஒன்று, இரண்டுமே நிகிலா வாங்கிக் கொடுத்தவைதான். இப்போது தண்டவாளத்தில் ரயில் ஓடியது, பெரிய பொம்மை பேசிச் சிரித்தது. 'பார்பி' பொம்மைகள் வேறு! கண்ணாடி அலமாரி நிரம்பி வழிந்தது!

வனிதா சின்னக்குழந்தை! வீட்டின் முதல் பேத்தி என்று நிகிலாவுக்கு அவள் மீது மிகுந்த பாசம் உண்டு. அதனால்தான் 'இதெல்லாம் இவளுக்கு எதெற்கடி?' என்று தமக்கை தடுத்த போதும், அந்த பஸ், நாய் இரண்டையும் நிகிலா வாங்கியதே.

அதனால், குழந்தைக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கியதை, அவள் தவறாகக் கருதவில்லை. ஆனால், அவைகளுக்காகச் செலவழிக்கப்பட்டது எல்லாமே, அவளது பணம்தானா?

அப்படியிருந்தால் அது அநியாயம் அல்லவா?

அவளிடம் கேள்ாமலே பணத்தை எடுத்தது ஒரு தப்பு. அதை, இப்படிச் செலவு செய்துவிட்டு, பணத்துக்குச்

சொந்தக்காரி, சொந்த உபயோகத்துக்கு, ஒரு சாதாரணச் சுரிதார் வாங்கினால் அதற்கு, இவ்வளவு ஆர்ப்பாட்டமா?

அதுதான் அவளுக்குக் கோபம்!

ஒரு லீவு நாள் விடாமல், மகளைக் கூட்டிக்கொண்டு இருவரும் எங்கேனும் கிளம்பி விடுவார்கள்.

ஒரு மரியாதைக்குக்கூட 'நீயும் வருகிறாயா?' என்று கேட்க மாட்டார்கள்.

சம்பளப் பணத்தைக் கொடுக்காவிட்டால் என்ன என்றுகூட, நிகிலா ஆலோசனை செய்தாள். ஆனால் தைரியம் வரவில்லை.

முன்னூறு ரூபாய்ச் சுரிதாருக்கு இந்தக் கத்து கத்திய கணபதி, அப்புறம், ஊரைக் கூட்டிவிடுவான். கேவலம், அவளுக்கும்தானே?

அத்தோடு இருக்கும் ஓர் உறவும் முறிந்து போய் விட்டால்?

ஆனால் அதற்காக எவ்வளவு பொறுப்பது?

உள்ளூரக் குமுறியவாறு, நிகிலா இருந்தபோது அவள் கழிவிரக்கம் கொள்ளும் விதமாக ஒன்று நடந்தது.

அன்று இதுபோல, ஒரு லீவு நாளன்று, வழக்கம்போல கணபதியுடைய குடும்பம் வெளியே கிளம்பிவிட்டது.

தனிமைத் துயர் தாக்க, சில துளிக் கண்ணீரைச் சொரிந்துவிட்டு, தன்னிரக்கம் தவறு என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டு, அலுவலகத்துக்கு அணியும் நல்ல சுரிதார் செட்டுகளைத் தானே அலசிக் காயப்போட்டு குளிப்பையும் முடித்துவிட்டு வந்து டீவி முன் நிகிலா உட்கார்ந்தபோது அந்த ஆள் வந்தான்.

ஒரு பெரிய சீட்டுக் கம்பெனி ஆள் மாதாந்திர நிலுவைக்காக வந்திருந்தான்.

எவ்வளவு என்று அவன் சொன்னபோது நிகிலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இரண்டு லட்ச ரூபாய்ச் சீட்டு! மாதத் தவணை ஐந்தாயிரம் ரூபாய்! சீட்டுத் தொடங்கிச் சில மாதங்களே ஆகியிருந்தன.

திடீரென்று இவ்வளவு எப்படி... என்று யோசிக்கும் போதே, அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

நிகிலாவின் சம்பளப் பணத்தில்தான் இது கட்டப் படுகிறது. அதனால்தான் அந்தப் பணத்தைத் தொட்டால் அக்காவுக்கும் அத்தானுக்கும் அவ்வளவு கோபம் வருகிறது!

இந்தப் பணத்தைக் கூட அவளுக்காகத்தான் கட்டுகிறார் களோ, என்னவோ?

இந்த நல்லவர்களைப் பற்றி என்னவெல்லாம் நினைத்து விட்டாள்?

எல்லாம் இந்த வேலைக்காரி கிளப்பிவிட்டது! அவளது பேச்சைக் காதில் போட்டுக் கொண்டது அவளது முட்டாள் தனம்!

நிலுவைக் குறிப்பைக் கையில் வைத்துக் கொண்டு அவள் யோசனையில் ஆழவும், "சீட்டை இவ்வளவு சீக்கிரமாக, தொடங்கி நாலே மாதத்தில் எடுத்தால், நிறையத் தள்ளுபடி போய்விடும் என்று சொல்லியும் கேட்கவில்லை யம்மா, பரவாயில்லை என்று எடுத்துவிட்டார்கள். சீக்கிரமாய் பணம் கைக்கு வரவேண்டுமானால், 'செக்யூரிட்டி'க்கு ஏற்பாடு பண்ணச் சொல்லுங்கள். அத்தோடு, இதையும் சொல்லுங்கள். சீட்டை எடுத்து விட்டதால் சீட்டுப் பணத்தைத்

தள்ளிப் போடாமல், அடுத்த ஏலத் தேதிக்கு முன்னாலேயே கட்டிவிடச் சொல்லுங்கள். வசூலில் எங்கள் ஆட்கள் கொஞ்சம் கறாராக இருப்பார்கள். பாக்கி வைத்தால் மோசமாக நடந்து கொள்வார்கள். தவணைப் பணத்துக்கு, நான் இன்னொரு நாளைக்கு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான். சீட்டுக் கம்பெனிக்காரன்.

சீட்டை எடுத்திருந்தார்கள் என்பது, சற்றுக் குழப்பம் தந்த போதும், ஏன் என்று யோசிக்கவும், எல்லாம் தெளிவாகிவிட்டது.

கல்யாணக் கனவுகள் கண்டு தங்கை தன் அழகைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக, சுகேசனைப் பற்றிய பேச்சை நீலா தவிர்த்திருக்கிறாள்.

ஆனால் அதே சமயம், அவனது ஆணைப்படி வீடு, பெரிய சாமான்கள் எல்லாம் வாங்குவதற்காக, தங்கையின் வருமானத்தைச் சேர்க்கிறாள்! இது துளித் துளியாகச் சேர்ந்து, பெரும் தொகையாக எவ்வளவு காலம் ஆகும்? அதனால், சீட்டாகப் போட்டு, அதிகத் தள்ளுபடி போனாலும் பரவாயில்லை என்று சீட்டை எடுத்து பெரும் தொகையைக் கைக்குள் கொணர்ந்து விட்டாள்!

இவ்வளவு திட்டமிட்டுச் செயல்படுவதால்தான் தங்கை தன் ஊதியப்பணத்தில் என்ன செலவு செய்தாலும், ஆத்திரப்படுகிறாள்!

மனைவியின் எண்ணம் தெரிந்ததால்தான், கணபதியும் அப்படிச் சீறி விழுந்திருக்கிறார்!

உண்மை தெரியாமல், இவர்களைப் பற்றி என்னவெல்லாம் எண்ணிவிட்டாள்!

கழிவிரக்கம் மிஞ்ச, தொடர்ந்த சில தினங்கள், நிகிலா தமக்கையிடமும், அவளுடைய கணவரிடமும் மிகவும் பணிவாக நடந்து கொண்டாள்.

புரிந்து கொண்டாற்போல், ஒருவருக்கொருவர் பார்வை பரிமாறியதைக் கண்டு உள்ளூர மகிழ்ந்தாள்.

ஆனால் சுகேசனைப் பற்றிப்பேச, அவள் மீண்டும் முயன்றபோது அப்போதும் நீலா விட்டேற்றியாகப் பேசவும், மறுபடியும் அவள் மனம் துணுக்குற்றது.

தப்பாகக் கற்பனை செய்து விட்டோமோ என்று ஒரு சஞ்சலம் தோன்றி, அவளை அலைக்கழித்தது.

அக்கா வீட்டில் நீண்ட நாள் விருந்தாளியாக இருப்பது பிடிக்காமல், தன் வீடு என்று சுதந்திரமாக வாழும் ஆவலில் அவளிடம் இல்லாத நல்லதையெல்லாம் இருப்பதாக எண்ணிவிட்டாளா?

மற்றபடி சுகேசனைப் பற்றிய பேச்சை அக்கா இன்னமும் ஏன் தவிர்க்க வேண்டும்?

தீவிரமாகச் சிந்தித்தவள், 'கல்யாணக் கனவு'ப் பேச்சு நினைவு வரவும், தலையில் ஓங்கிக் குட்டிக் கொண்டாள்!

அதற்காகத்தான், அக்கா இப்போதும், அந்தப் பேச்சைத் தவிர்க்க வேண்டும்! நல்லதை நினைத்து அக்கா செய்வதைக் கூடச் சட்டெனத் தவறாகவே எடுத்துக் கொள்ளத்தானே தோன்றுகிறது? வரவர மூளையின் போக்கே சரியில்லை! இதற்காகத்தான், திருமணத்தை முடிந்த அளவு, சீக்கிரமாக வைத்து விடும்படி அம்மா சொன்னார்களோ?

வேரற்ற நீர்ப்பாசி போல, அலைபாய்வது மாறி வேரும் விழுதும் ஊன்றிப் பிடிக்க அசைவின்றிக் கம்பீரமாக நிற்கும்,

ஆலமரத்தின் உறுதி தன் வீடு என்பதில் தான் மகளுக்கு வரும் என்று அறிந்து கூறிய வார்த்தைகள்!

அந்த நிலை வந்துவிட்டால், இந்தச் சஞ்சலங்கள் மாறி, மனம் திடப்பட்டுவிடும் என்றேதான் நிகிலாவுக்குத் தோன்றியது.

இதுவரை, அதைத் தள்ளிப் போட்டது சுகேசனின், தேவை அடிப்படையான விருப்பங்கள். இப்போது அதை நிறைவேற்றும் சக்தியாக ஒரு பெரிய தொகை, கைக்கு வரப்போகிறது. ரொம்பப் பெரிய தொகை அல்ல என்றாலும், அந்தப் பணத்தையும் கூடவே, அலுவலகத்தில் கொஞ்சம் முன் பணமும் வாங்கிக் கொண்டால், முதல் தவணையாகப் பெரிய தொகையைக் கட்டிவிடலாம். அப்புறம் வாடகை கொடுக்கிற மாதிரி, மாதாமாதம் கட்டலாம். அல்லது வாடகைக்கு விட்டு, அந்தப் பணத்தையே கட்டலாம்.

கடைசியாகச் சென்ற மாதம் சுகேசன் எழுதிய கடிதத்தில் கூடக் கிட்டத்தட்ட அதுபோன்ற கருத்தைத்தான் தெரிவித் திருந்தான்.

அவன் வேலை பார்க்கும் இடத்தில் வீடு கட்டினால், கட்டிட மதிப்பு ஏறாது, அதனால் சென்னையில் ஃப்ளாட் மாதிரி வாங்க முடிந்தால் அதன் வாடகை மதிப்பே, அதிகம் இருக்கும் என்று எழுதியிருந்தான்.

வீடு வாங்க, அவனும் பணம் போடுவான், மொத்தப் பணமும் கட்டிவிட்டால் வாடகை என்று ஒரு தொகை, அவளது சம்பளத்துக்குப் பதிலாக வரும். எந்தத் தடையும் இல்லாமல், சுகேசனை மணந்துகொண்டு அவன் இருக்கும் இடத்துக்கே வாழப் போய்விடலாம்.

இந்த விருந்தாளி என்ற நிலை மாறி, வீட்டுக்காரியாக உரிமையோடு வாழலாம்!

நினைப்பதற்கே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, நிகிலாவுக்கு. இப்படிப் பத்து ரூபாய் செலவுக்கு எல்லாம் கணக்கு சொல்ல வேண்டியிராது. நல்லதற்காகவே நீலா கேட்டாலும் கூட, இப்படிச் சில்லறைக் கணக்குச் சொல்வது, கடினமாகத்தான் இருந்தது!

உள்ளம் துள்ள நிகிலா வீட்டு வேட்டையில் இறங்கினாள்.

அவள் விரும்பிய விதத்தில், சென்னையை ஒட்டிய புறநகரப் பகுதியில் ஒரு ஃப்ளாட் விலைக்கு வரவே, அவள் வெளிப்படையாகத் துள்ளிக் குதிக்காத குறைதான்! அவ்வளவு சந்தோஷம்.

அந்த மகிழ்ச்சியை வருங்காலக் கணவனுக்கு உடனடியாகத் தெரிவிக்க முடியாதபடி, அவனுக்கு வீட்டில் ஃபோன் இல்லை. அலுவலகத்திற்குச் செய்தாலும், பயன் இராது. உர விற்பனை தொடர்பாக, சுகேசன் எப்போதுமே வெளியேதான் சுற்றிக் கொண்டு இருப்பான். அவனை, நிச்சயமாக அடையும் தொடர்பு கடிதம்தான்.

எனவே ஃப்ளாட் பற்றி, சுகேசனுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டுவிட்டு வீடு திரும்பினாள்.

வெளியே சென்றிருந்த தமக்கை குடும்பத்தின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கலானாள்.

கணபதி தம்பதியினர் வீடு வந்து சேர இரவு வெகு நேரம் ஆயிற்று.

தூங்கிவிட்ட மகளை, உள்ளே கிடத்திவிட்டு வந்தான் கணபதி.

கைநிறையப் பார்சல்களும், முகம் நிறைய மகிழ்ச்சியுமாக, வீட்டினுள் வந்த தமக்கையைப் பார்த்த நிகிலாவுக்கும் சந்தோஷமாகவே இருந்தது.

கழுத்தில், கையில், காதில், எல்லாம் அணிந்திருந்த புதிய நகைகளைக் காட்டி, ''பார்த்தாயா? அத்தானுக்குத் திடீரென்று ஓர் அதிர்ஷ்டப் பரிசு கிடைத்ததென்று எனக்கு வாங்கித் தந்தார்.'' என்று குதூகலத்துடன் நீலா கூறியபோதும், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்ட போதும், அப்படியே!

கடை கண்ணிக்குப் போய்விட்டு, அப்படியே ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, பீடாவைச்சுவைத்தபடி உல்லாசமாகத் திரும்பி வந்திருக்கிறார்கள்!

இன்னும் கொஞ்ச நாளில் சுகேசனும் அவளும் கூட இப்படிக் காதலோடு பார்த்துக் கண் சிமிட்டிச் சிரிக்கக்கூடும்.... கூடும் 'என்ன?,' கட்டாயம் சிரிப்பார்கள்!

மகிழ்ச்சியோடு மகிழ்ச்சியாக தன் சேதியையும் சொல்ல அவள் முயன்றபோதுதான், அவள் சற்றும் எதிர்பாராதவாறு அங்கே பூகம்பம் வெடித்தது.

## 4

நிகிலா தான் பார்த்துவிட்டு வந்த ஃபளாட் பற்றிச் சொல்லத் தொடங்கியதுமே, கணபதியின் சிரிப்பு மறைந்தது. ''ஃப்ளாட்டா? அதற்கு இப்போது என்ன அவசரம்? அப்படி, இங்கே தனிக்குடித்தனம் போக யார் இருக்கிறார்கள்?'' என்று ஒரு மாதிரி ஆட்சேபனைக் குரலில் கேட்டான்.

தமக்கையை பார்த்தாள். நிகிலா. ''அக்கா, நீ அத்தானிடம் சொல்லவில்லையா?'' என்றாள், சிறு குழப்பத்துடன்.

''எல்லாம் சொன்னேன்'' என்று கழுத்தை நொடித்தாள் நீலா. ''ஆனால், அவர் கேட்பது வேறு. இப்போது இங்கே யாருக்கும் திருமணத்துக்கு வழியில்லாதபோது ஃப்ளாட் எதற்காகத் தேடுவது என்று கேட்கிறார்'' என்று விளக்கினாள்.

''எனக்காக, இங்கே ஃப்ளாட் வாங்கி வாடகைக்கு விட்டால்..'' என்று நிகிலா விளக்குமுன் எரிச்சலோடு குறுக்கிட்டு, ''இன்றைய மகிழ்ச்சியான மன நிலையைக் கெடுத்துவிடுவதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறாய் என்று நினைக்கிறேன். வெறும் கையை வீசினால் ஃப்ளாட் வந்துவிடுமா? லட்சக்கணக்கில் பணம் வேண்டும். தாயே! அதற்கு எங்கே போவதாக இருக்கிறாயாம்? கையில் அலுமினிய டப்பாவை எடுத்துக் கொண்டு, தெருத்தெரு வாகத் திரியப் போகிறாயா?'' என்று ஏளனமாக வினவினாள் தமக்கை.

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, மருள விழித்தாள் நிகிலா.

ஏதோ சரியில்லையே!

ஆனால், இதைச்சும்மா விடவும் முடியாது.

தயக்கமும் திகைப்புமாக ''சீ சீட்டு எடுத்த பணம் இருக்குமே...'' என்று அவள் தொடங்கவும், ''சீட்டுப் பணம் பற்றி நீ பேசாதே!'' என்று கிரீச்சிட்டாள் நீலா.

அந்தக் கத்தலை விடவும். கூடப் பிறந்தவளின் கைகளின் செயலே நிகிலாவை அதிகமாகத் திகைக்க வைத்தது. மூத்தவள் தன் ஒரு கையால் அவளது கழுத்தணியையும், மறு கையால் அடுத்த கையில் அடுக்கியிருந்த வளையல் களையும் முடிந்தவரை மூட முயன்று கொண்டிருந்தாள்!

அப்படியானால் சீட்டுப் பணம்தான். இந்த நகைகளாக உருமாறியிருக்கின்றனவா?

அதிர்ஷ்டப் பரிசு என்பது பொய்!

தொடங்கி நாலே மாதத்தில் எடுத்த சீட்டு!

நிகிலாவின் முழுச் சம்பளப் பணத்தையும் நீலா வாங்கிக் கொள்ளத் தொடங்கியும் நாலு மாதங்கள்தான் ஆகின்றன.

ஒரு கணம், சின்னவளின் மனம் ரொம்பவும் சோர்ந்து போயிற்று.

உடன் பிறந்த ஒரு சகோதரி இப்படியா நடப்பது?

ஓடிப்போய் தனியே உட்கார்ந்து அழ வேண்டும் என்று எழுந்த வேகத்தைப் பிடிவாதமாக அடக்கினாள்.

இப்போது சும்மா இருந்தால், வாழ்க்கை முழுவதும், அப்படியே இருந்துவிடும்படியாக நேர்ந்து விடும். அவ்வாறு நேர விடக்கூடாது.

ஆழ்ந்து மூச்செடுத்துக் கொண்டு, ''ஏன் பேசக்கூடாது? அது என் வருமானத்தில் கட்டியதுதானே?'' என்று கேட்டாள்.

பாய்ந்து அருகில் வந்து நின்று, ''அப்படி என்று, எவனடி உன்னிடம் சொன்னான்?'' உரத்த குரலில் கேட்டான் கணபதி. ''இந்த வீட்டில் உன்னைத் தவிர யாரும் சம்பாதிக்கவே இல்லை என்று நினைத்தாயாடீ.''

குரலும், வார்த்தைகளும், வார்த்தைகளைச் சொன்ன விதமும் குளிரூட்டிய போதும், அவளை வாயடைக்கச் செய்வதற்காகவே சொல்லப்பட்டது என்பதை உணர்ந்து ''இந்தச் சீட்டு, நாலு மாதங்களாகக் கட்டுவது நாலு மாதங்களாக என் பணம் தானே, இங்கே அதிகபபடியாக வருகிறது?'' என்று விடாமல் கேட்டாள் நிகிலா.

அவ்வளவுதான். கணபதி, நீலா இருவருமே சேர்ந்து கத்தத் தொடங்கிவிட்டார்கள்.

''அதிகப்படியாகவா? அப்புறம். நீ தின்னுகிற தீனிக்கு, யார் பணம் கொடுப்பது? பெற்றதோடு, கடன் தீர்ந்ததென்று, ஜாலியாக மேலே போய்விட்டானே. அந்த அப்பனா? அல்லது தெற்கே எங்கேயோ போய்விட்டானே, அந்தக் கள்ளக் காதலனா?''

''அவர் ஒன்றும் கள்ளக் காதலன் இல்லை. அம்மா பார்த்து, நிச்சயம் செய்த மாப்பிள்ளை.''

''ஹ! அப்படியென்று நீதானே சொல்லுகிறாய்? சேர்ந்து சுற்றிவிட்டு, கல்யாணப் பேச்சு எடுத்ததும், ஓடிவிட்டான் என்கிறேன் நான். தட்டுக் கெட்டு அலைந்தவளை வீட்டில் வைத்து சோறு போடுவதற்காக நீ என்னிடம் நன்றியோடு இருக்க வேண்டும்! அதை விட்டுக் கேள்வியா கேட்கிறாய்?'' என்று கணபதி நாக்கில் நரம்பில்லாமல் பேசவும், நிகிலாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

''சின்னப் பெண்! அவள் என் தங்கைதான்'' என்றவன் பேசுகிற பேச்சா இது?

''என்னக்கா, கேட்டுக் கொண்டு சும்மா இருக்கிறாயே!'' என்று தமக்கையிடம் அழுதுகொண்டே கேட்டாள்.

''இதில் நான் மட்டும் என்ன சொல்லமுடியும்? எல்லாருமே அதுபோலத்தான் நினைப்பார்கள். அத்தான் எனக் கண்டு எல்லாம் பொறுத்துப் போகிறார். இன்னொருவர் என்றால் ஓங்கி நாலு அறை வைத்திருப்பார்கள். சரி சரி போ. இந்த ஃப்ளாட். அது இதெல்லாம் மனதிலிருந்து அடியோடு ஒதுக்கிவிட்டு, பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து கொள் போ'' என்றாள். அருமைச் சகோதரி.

கூடப்பிறந்தவளாக இருந்தும், கணவனைக் கண்டித்து இவள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே என்று பொருமும் போதே நிகிலாவுக்கு உறுத்தியது.

ஃப்ளாட். அது இதையெல்லாம் மனதிலிருந்து ஒதுக்கிவிடு என்றால் என்ன அர்த்தம்? திருமணத்தையும் மறந்துவிடு என்பதுதானே?

அதாவது, வாங்குகிற சம்பளத்தைக் கையில் கொடுத்துவிட்டு, வைப்பதை வயிற்றில் கொட்டிக் கொண்டு, மற்றபடி வாயைத் திறவாதிருந்தால், நிம்மதியாக இருக்கலாம் என்கிறாள்.

சட்டென விஷயம் விளங்கிவிட்டது அவளுக்கு.

இந்தத் தரக்குறைவான பேச்செல்லாம், சீட்டுப் பணத்தைப் பற்றிய பேச்சை நிறுத்துவதற்காகவே! கேவல மான இந்த வார்த்தைகளில் கூசிப்போய், மைத்துனிவாயை மூடிக்கொண்டு விடுவாள் என்று கணக்கிட்டு, கணபதி கூறியது. அதற்கு ஒத்து ஊதியது உடன் பிறந்தவள்! இதற்குப் பயந்தால், காலம் முழுவதும் இந்த வீட்டுக்குச் சம்பாதித்துப் போடும் மிஷினாக இருக்க வேண்டியதாகிவிடும்!

இனி இதற்கு இடம் கொடுக்கக்கூடாது! அக்காவும், அவள் கணவனும் என்ன சொன்னாலும் பரவாயில்லை!

மனதை திடப்படுத்திக் கொண்டு, "சாப்பாட்டிற்கு வேண்டுமானால் பணம் தந்து விடுகிறேன். மற்றபடி என் சம்பளப் பணம் எனக்கு வேண்டும்" என்று இயன்ற வரை அழுத்தமான குரலில் நிகிலா கூறினாள். நிலைமையை, வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டோம் என்று எண்ணி, அறைக்குள் செல்ல ஓர் எட்டு எடுத்து வைத்திருந்த இருவரும் அதிர்ந்துபோய் திரும்பினர்.

"என்னடீ சொன்னாய்?" என்று ஆத்திரத்துடன் மீண்டும் அவள் அருகே வந்தான் கணபதி. "எங்களை விட்டால், உறவென்று சொல்ல, ஒரு நாதியில்லாத நாய். கழுத்தைப்

பிடித்து வெளியே தள்ளினால், ஒண்ட ஒரு நிழலுக்குக் கதியற்ற கழுதை! நீ எங்களுக்கு நிபந்தனை இடுகிறாயா? திமிராடீ? அந்தத்திமிரை ஒடுக்குகிறேன் பார்!'' நிகிலாவின் கையைப் பற்றித் தரதரவென்று வாயிலை நோக்கி இழுத்துச் சென்றான்.

நிகிலா தன்னை விடுவித்துக் கொள்ளச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

கணபதி என்ன செய்யப் போகி றான் என்று தெரியாவிடினும், வாயில் பக்கம் இழுத்துச் சென்றதால், அக்கம் பக்கத்தார் பார்ப்பார்களே, என்று அவள் கூசிப் போனாள்.

கூடவே, அவன் தொட்டு இழுத்துப் போனது வேறு, அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

எனவே, தமக்கையை அழைத்து, ''அக்கா விடச் சொல்லுக்கா'' என்றாள் தவிப்புடன்.

நீலாவுக்கே, கணவனின் செயல் ஒன்றும் புரிபடவில்லை. ஆயினும் கணபதி செய்வது அவள் குடும்பத்துக்கு நல்லதாகத்தான் இருக்கும் என்பதால் அதைத் தடுக்க முயலவில்லை.

மாறாகத் தங்கையிடம் ''இப்போது என்னிடம் முறையிட்டு என்ன பயன்? அப்போதே நான் சொன்னதைக் கேட்டு, நீ பேசாமல் போயிருக்க வேண்டும்!'' என்றதோடு நிறுத்திக் கொண்டு வேடிக்கை பார்த்தாள்.

வேறு வழியின்றிக் கணபதியிடமே, ''அத்தான், கையை விடுங்கள்!'' என்று கம்மிய குரலில் கேட்டுக் கொண்டாள் நிகிலா.

அதற்குள், கதவைத் திறந்திருந்தான், கணபதி. வாயிலில் அவளை நிறுத்தி, ''விடாமல்? மச்சினியைத் தொடுவதில் இன்பம் காணுகிற ஜாதி நான் இல்லையடி, எனக்கு நீலா மட்டும் போதும்!'' என்று உறுமியவன் சட்டென அவளை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தி உள்ளே தாளிட்டான். ''இரவு முழுவதும் அங்கேயே விழுந்து கிட அப்போதாவது புத்தி வருகிறதா என்று பார்ப்போம்!'' என்றான்.

அதிர்ச்சியில் உறைந்து போனாள் நிகிலா.

அவளை வீட்டை விட்டு ஒருவர் வெளியே தள்ளுவதா?

கற்பனையில் கூட அவள் நினைத்துப் பார்த்திராதது!

வீட்டிற்கு வெளியே நிற்கிறோம் என்பதிலேயே உடல் உதற இதை எத்தனை பேர் வேடிக்கை பார்க்கிறார்களோ என்ற எண்ணம் அவளைக் குன்றிக் குறுகச் செய்தது.

நீலாவின் வீடும் ஓர் அப்பார்ட்மென்ட்தான். பொது நடை வழியின் எதிரேயும், பக்கவாட்டிலுமாக இன்னும் மூன்று வீடுகள். யார் யார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

எதிர்வீட்டு ஜன்னல் திரை ஒருபுறம் லேசாக விலகி இருக்கிறதோ? அதற்கு அடுத்த வீட்டில் ஜன்னலையே திறந்து பார்க்கிறார்களோ?

கூசிக் குன்றி நின்றவளுக்குக் கதவைத் தட்டிக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொல்வது இன்னும் அவமானமாகப் பட்டது.

வெளியே இருந்து கதவைத் தட்டுவதும், அக்கா கணவன் மேலும் உரத்த குரலில் ஏதாவது சொல்வதுமாக, அது எல்லோருக்கும் பறையறிவிப்பது போல ஆகாதா?

இப்போதாவது மணி பத்தரை, பதினொன்றேனும் இருக்கும். ஒரு வேளை மற்றவர்கள் தூங்கி, இந்த நாடகத்தை கவனியாமல் கூட இருக்கக்கூடும். அவர்களை எல்லாம் எழுப்பி விஷயத்தை வெளிச்சம் போட்டு விவரிப்பானேன்?

எப்படியும், இரவு முழுவதும் அவளை இப்படியே வெளியே நிறுத்திவிடப் போவதில்லை! அவ்வளவு குரூரம் இருவருக்குமே இராது. எப்படியும் நீலா அதற்கு விடமாட்டாள்.

அதுவரை, பல்லைக் கடித்து, இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அதன்பிறகு?

அதுவும் மலைப்பாகத்தான் இருந்தது!

அன்னை தந்தை இல்லாத ஓர் இளம் பெண், ஒரே உறவான அக்காவீட்டில் வசிப்பது இயல்பு. நம் சமூகம் ஒத்துக் கொள்கிற நியதியும் கூட. அதனால்தானே தாயாரும், தங்கையைக் கூட வைத்துக் கொள்ளும்படி மூத்த மகளிடம் கூறியிருக்க வேண்டும்?

அல்லது, அப்புடிச் சொல்லவே இல்லையோ?

சுகேசன், அப்படியொரு வழியைச் சொன்னபோது கூட 'நீலா வீட்டிலா?' என்றது தவிர, அவளிடம் பாக்கியம் ஒன்றும் சொல்லவே இல்லையே!

தாய்க்கு ஒளித்தொரு சூலில்லை. மூத்த மகள், அவள் கணவன் குணமறிந்த பாக்கியத்துக்கு நீலாவின் வீட்டிற்குச் சின்ன மகள் போவது பிடித்தம் இல்லாமல் அதனாலேயே, அது பற்றி, ஒன்றும் சொல்லாமல் இருந்திருக்கலாம்!

தங்கையின் வருமானத்தை உறிஞ்சத் திட்டமிட்ட நீலா, தாயார் இப்படிச் சொன்னதாகப் பொய் சொல்லியிருக்கிறாள். அப்படித்தான் இருக்க வேண்டும்.

அப்படியின்றி, நீலா மெய்யே சொல்லியிருந்த போதும் கூட, இவ்வளவு கேவலமாக அவளை நடத்திவிட்ட பிறகு இந்த வீட்டில் இனி அவள் இருக்கக் கூடாது!

இருப்பது கேவலம்!

மேலும், இந்த ஒட்டுண்ணிகள் வாழ்நாளெல்லாம் அவளது உழைப்பின் பலனை உறிஞ்சிக் கொண்டே இருப்பார்கள்! அவளை வாழ விடவேமாட்டார்கள்!

'மொட்டை அடிச்சிடுவாம்மா' என்று வேலைக்காரி லோகு சொன்னது திடுமென நினைவு வந்தது. எவ்வளவு பெரிய உண்மை!

படிப்பறிவு இல்லாத அவ்ளுக்குத் தெரிந்தது. படித்துப் பட்டம் பெற்று அலுவலகம் சென்று வேலை பார்க்கும் தனக்குத் தெரியவில்லை எனும்போது அதை இன்னொரு வித அவமானமாகவே நிகிலா உணர்ந்தாள்.

ஆனால், நல்ல வேளையாக இப்போதாவது விழிப்பு வந்ததே!

இன்னும் கதவைத் திறந்து உள்ளே கூப்பிடவில்லையே... யாரேனும் பார்த்துவிடப் போகிறார்கள் என்ற தவிப்பினூடேயும், அடுத்து என்ன செய்வதென்று மூளை யோசித்துக் கொண்டே இருந்தது. என்ன செய்ய வேண்டும் என்பது, உடனே தெளிவாகி விட்டது. அதை எப்படிச் செய்வது என்று அவள் யோசித்தபோது உள்ளே நீலா பேசுவது கேட்டது.

சற்றுத் தணிந்த குரல்தான். ஆனால், பேச்சு காதில் விழாமல் இல்லை. "கணா, கொஞ்சம் யோசியுங்கள். அவள்,

கல்யாணம் ஆகாத சின்னப் பெண். இரவு முழுவதும், எப்படி வெளியே நிறுத்துவது? மேல் வீட்டுக்காரன் கண்ணில் இப்படிப்பட்டாள் என்றால் தப்புத் தண்டாவே பண்ணி விடுவான். அதனால் உள்ளே கூப்பிட்டு விடலாம்'' என்று கணவனிடம் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

''என்ன வேண்டுமானாலும் பண்ணட்டுமடி! அப்போது தான் இந்த வீட்டின் பாதுகாப்பு இல்லையென்றால் என்ன ஆகும் என்று அந்தப் பிடாரிக்குத் தெரியும்! படட்டும்'' என்று உறுமினான், கணபதி.

''நீங்கள் சொல்வதும் சரிதான். ஆனால் வெளியே நிற்கப் பிடிக்காமல் அவள் பாட்டில் யாராவது சிநேகிதி வீட்டுக்கு கிளம்பினாளானால்?''

''மணி என்ன தெரியுமா? பதினொன்றரை. இதற்கு மேல் அவள் தெருவில் இறங்கி நடந்தாள் என்றால் நார்நாராய்க் கிழித்து விடுவார்கள் தெரியுமா? அந்த அறிவுகூட அவளுக்கு இல்லை என்றா நினைத்தாய்? யப்பா! அந்தம்மாளுக்கு தெரியாததா?''

''அதானே'' என்றதோடு பேச்சு நின்றுவிட்டது.

அவளுக்குத் தெரியும்தான்! இந்த நேரத்தில் ஒரு பெண் தனியே வெளியே செல்வது சரியல்ல என்கிற அளவு பகுத்தறிவு அவளுக்கு உண்டுதான்!

ஆனால் ஆத்திரத்தில் இங்கிருந்து வெளியே சென்றால் என்ன ஆகும் என்று எச்சரித்து அப்படிப்போகவிடாமல் தடுப்பதற்காகவே இந்தப் பேச்சு நடந்திருக்கிறது.

உள்ளேயிருந்து பேசினால் அவளுக்குக் கேட்காது. அதனால் வெளிப்புற ஜன்னல் அருகே வந்து நின்று அவர்களுக்குள் வாதாடுவது போல நடிக்கிறார்கள்!

ஆனால் இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிந்தது. இன்றிரவு அவர்கள் கதவைத் திறந்து அவளை வீட்டினுள் செல்லவிடப் போவது இல்லை!

இந்த நடை வழியின் குளிரில் உட்காரக் கூட வழியில்லாமல் அவள் நின்று கொண்டிருப்பதை பற்றி அவர்களுக்கு ஒன்றுமே இல்லை!

அவ்வளவுக்கு ஈரமற்றுப் போன நெஞ்சங்கள்!

ஒரு வகையில், அதுவும் நல்லதுதான் என்று, நிகிலா எண்ணினாள்.

சிறு உறுத்தல் கூட இல்லாமல், இந்த வீட்டை விட்டு வெளியேறலாம். அல்லவா?

## 5

ஆமாம் அக்காவின் இல்லத்தை விட்டு வெளியேறி விடுவது என்று நிகிலா. ஏற்கனவே தீர்மானித்து விட்டிருந்தாள்.

ஆனால், கிளம்புமுன், அக்கா அழுதால், அத்தான் உருகிப் பேசினால், என்ன செய்வது என்றுதான் சிறு குழப்பம் இருந்தது. இப்போது அதுவும் மறைந்தது.

நாளைக்கே, இங்கிருந்து கிளம்பிச் சென்று வேலை பார்க்கும் பெண்கள் தங்கும் விடுதி ஒன்றில் சேர்ந்துவிட வேண்டியதுதான்!

என்ன சுகேசன் விரும்பிய மாதிரி சீக்கிரமாகப் பணம்சேராது. இரண்டு ஆண்டு என்பது மூன்று ஆண்டுகள் காத்திருக்க நேரும்!

காத்திருப்பது என்று ஆனபின் இரண்டுக்கும் மூன்றுக்கும் அப்படி என்ன பெரிய வேறுபாடு?

ஆனால் ஒன்று அம்மாவுடன் இருந்தபோது காத்திருக் கிறோம் என்கிற எண்ணம் கூடத் தோன்றாதிருந்தது. இப்போது அதே காத்திருத்தல் மிகக் கடினமாகத் தோன்று கிறது.

சுகேசனும் தனியாகத்தான் இருக்கிறான்? அவனுக்கும் காத்திருப்பது வேதனையாகத்தானே இருக்கும்? வேதனை யாக இருப்பதால்தானே விரைவாகப் பணம் சேர்ப்பதற்கான வழி முறைகளைச் சொல்லுகிறான்?

அல்லது... என்று நிகிலா யோசிக்கத் தொடங்கியபோது, வீட்டினுள் விளக்குகள் அணைக்கப்பட்டன. எல்லோரும் படுக்கப்போயாயிற்று!

இவள் இப்படித் தனியாக நின்றுகொண்டு இருக்கிறாளே என்ற எண்ணமே இல்லாமல்... கூடப் பிறந்தவளுக்குள் இப்படி ஒரு குரூரம் இருப்பதை இன்றுவரை நிகிலா அறிந்து கொள்ளவே இல்லையே! ஆனாலும் இப்படியா?

பலதும் எண்ணி மனம் மறுகி, இந்த மறுகலினால் எந்தவிதமான பயனும் இல்லை என்று தனக்குத் தானே, இவள் அறிவுறுத்திக் கொண்டிருந்தபோது, எதிர்வீட்டின் கதவு, மெல்ல ஓசையற்றுத் திறந்தது.

அங்கே, வயதான ஒரு கணவனும் மனைவியும் மட்டுமே வசிப்பதை அறிந்திருந்தபோதும், நிகிலாவின் இதயம் தடதடக்கத்தான் செய்தது. மேலும், அது முதியோரே என்றாலும் அவமானம்தானே?

பொது வழியின் மங்கிய விளக்கொளியில் சத்தமின்றி வெளியே வந்தது எதிர்வீட்டுப் பெரியம்மாதான்.

மெல்ல நடந்து, முகம் இறுகி நின்ற நிகிலாவின் அருகே வந்து, "என் வீட்டுக்குக் கூட்டிப் போனேன்னு தெரிந்தால், காட்டுக் கத்தலாக, கணபதி கத்துவான். ஒரு தலையணையும் போர்வையும் தரட்டுமா? வெறும் தரையிலே, எப்படிப் படுப்பாய்?" என்று ரகசியமாகக் கேட்டாள்.

முதலில் இருந்தே பார்த்துக் கொண்டு இருந்திருப்பாள் போலும்.

அவமானம்தான்.

ஆயினும், எதிர் வீட்டில் அரவம் அடியோடு அடங்கும் வரை காத்திருந்து, உதவ முன்வந்தது இளையவளை உருகச் செய்தது. வயதானவள். பாவம் தனியாக இருக்கிறாளா என்று அவ்வப்போது போய்ப் பேசிக் கொண்டிருந்ததன் பலனா?

அப்படி அக்கறையோடு செய்கிறவளை மாட்டி விட்டுவிடக்கூடாது என்று எண்ணி, "போர்வையெல்லாம் வேண்டாம், ஆன்ட்டி. நீங்கள் எப்போதும், வெளியே போட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பீர்களே, அந்தச் சாய்வு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டுக் கொள்ளுகிறேன். ஒருவேளை, யாரும் பார்க்க நேர்ந்தாலும் நீங்கள் இரவில் உள்ளே எடுத்துவைக்க மறந்துவிட்டது போலத் தோன்றும்" என்று நிகிலா கூறவும், அந்த அம்மாள் வேகமாகத் தலையாட்டினாள்.

நாற்காலியை நிகிலா எடுத்து வந்தபின், "கதவோரமாகத்தான் படுத்திருப்பேன், கண்ணு. தேவை என்றால் கூப்பிடு. தைரியமாக இரு. எல்லாம் நல்லதே நடக்கும்" என்று கூறிவிட்டுப் போனாள்.

நல்லது எப்படி நடக்கும் என்று தெரியவில்லையே, என்று எண்ணியபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள், நிகிலா.

எப்படியும், தமக்கை வீட்டில் இருந்து வெளியேறுவதே நல்லதேதானோ, என்னவோ?

தூக்கமற்ற அந்த இரவில், மறுநாள் செய்ய வேண்டியது பற்றி, மனதில் வெகுவாக யோசித்து, நிகிலா முடிவு செய்தாள்.

அலுவலகத்தில் கொஞ்சம் முன்பணம் வாங்கவேண்டும். அதைக் கொண்டுபோய் வேலைபார்க்கும் பெண்கள் தங்கும் விடுதிக்கு முன்பணமாகக் கட்டிவிட்டு வீட்டுக்கு வந்து துணிமணிகளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட வேண்டும்.

சீட்டுப் பணத்தில் நகை வாங்கி விட்டாளே, பணத்தை எப்படிக் கட்டப்போகிறாளோ, என்று ஒரு கணம் நிகிலாவின் மனம் இரங்கியது.

ஆனால், உடனேயே மனம் மாறிவிட்டது. நீலா நடந்து கொண்டிருக்கும் விதத்துக்கு, அவளிடம் இரக்கப்படுவது முழு முட்டாள்தனம்! கடன் வாங்கிக் கட்டட்டும். அல்லது நகைகளை விற்றே கட்டிமுடிக்கட்டும்! அது அவள் பொறுப்பு.

காலையிலும், வேண்டும் என்றோ என்னவோ சற்றுத் தாமதமாகத்தான் பால்காரி, பேப்பர்க்காரன் எல்லோரும் சற்று விசித்தரமாக அவளைப் பார்த்துவிட்டுப் போன பிறகுதான் நீலா கதவைத் திறந்தாள்.

''போ, போய்க் குளித்துவிட்டு அலுவலகத்துக்குக் கிளம்பற வழியைப் பார். முடிந்தவரை, அத்தான் கண்ணில் படாமல், ஒதுங்கி இரு. அவர் இன்னும் கோபமாகத்தான் இருக்கிறார்!'' என்று ஏதோ நிகிலாதான் தப்பு செய்துவிட்ட பாவனையில் அறிவுரை வேறு!

தங்கை உள்ளே கனன்று கொண்டு இருப்பதை அவள் அறியவில்லை. போக்கிடம் அற்றவள். பணிந்துதானே ஆக

வேண்டும் என்ற மமதை என்று எண்ணிய நிகிலாவுக்கு, உள்ளே எரிந்த நெருப்பை ஊதிவிட்டது போல் ஆயிற்று.

கோபமாமா? இருக்கட்டும் இன்று மாலைக்கு மேல், யாரிடம் இப்படிப் பேச முடியும் என்று பார்க்கலாம்.

மனதினுள் பொருமிய போதும், வெளியே எதையும் காட்டாமல் உணர்ச்சியற்ற முகத்துடன் நிகிலா தன் வேலைகளைக் கவனித்தாள். ஆனால், அந்த வீட்டில் சாப்பிட மனமற்று, பட்டினியாகக் கையிலும் எதையும் எடுத்துக் கொள்ளாமலே கிளம்பிவிட்டாள்.

ரத்தத் தொடர்பு, உள்ளே உறுத்தியதாலோ என்னவோ, ''திமிரைப் பாருங்கள், வெறும் வயிற்றோடு ஒன்றும் எடுத்துக் கொள்ளாமலே போகிறாளே'' என்று நீலா பொரும, ''கும்பி காய்ந்தால், குதிரையும் வைக்கோல் தின்னும் என்பார்கள், தெரியுமா? எல்லாம் தானாகச் சாப்பிடுவாள். இந்த ஒருநாள் பட்டினியில் உன் தங்கை ஒன்றும் செத்துவிட மாட்டாள்.'' என்றான் கணபதி அலட்சியமாக.

துணிமணியை எடுத்து வருவது தவிர, இனி அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட, அங்கே குடிக்கக் கூடாது. அவள் என்ன, கையால் ஆகாதவளா? அவளது வருமானத்திலேயே எல்லாம் முடியும்... என்றெல்லாம் வீராவேசமாக என்னனென்னவோ திட்டமிட்டபடி அலுவலகத்தை அடைந்து முன் பணம் கேட்டு விண்ணப்பம் எழுதிக் கொடுத்த நிகிலாவுக்கு பெரும் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது.

அவள் விண்ணப்பத்தை அனுப்பிச் சிறிது நேரத்திலேயே, தலைமைக் கணக்கரிடமிருந்து அழைப்பு வந்தது. வவுச்சரில் கையெழுத்திட்டுப் பணம் வாங்குவதற்காக இருக்கும் என்று

கைப்பையில் பேனா இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு, கணக்கரின் அறைக்குள், நிகிலா சென்றாள்.

ஐம்பது வயதைத் தாண்டியவர், அவர். நிகிலாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று இந்தக் காலத்தில் கண்டுபிடிக்கவே முடியாது போலத் தெரிகிறது.'' என்றார் சற்றுக் கசந்த குரலில்.

அவருக்கு என்ன பிரச்சினையோ என்று எண்ணினாள் நிகிலா. ஆனால் இவ்வளவு சொன்ன மட்டும் சும்மா இருக்கக் கூடாது என்று கருதி, ''என்ன சார்'' என்று மென் குரலில் வினவினாள்.

''என்னத்தைச் சொல்வது? நீ ரொம்பவும் நல்ல பெண் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், அப்படி இல்லை போலிருக்கிறதே! சென்னை வாசம் மாற்றிவிட்டதாக்கும்'' என்றார், சிறு எரிச்சலான குரலில்.

'என்ன சார்!' என்றாள் நிகிலா திகைப்புடன்.

''ஆமாம்மா. புகார் வந்திருக்கிறது! ரொம்பவும் ஊதாரித்தனம் செய்கிறாயாமே! இருக்காது என்று அவ்வளவு உறுதியாகச் சொன்னேன். சம்பளம் வாங்கிப் பத்து நாட்களுக்குள் முன் பணத்துக்கு வந்து நிற்கிறாயே!''

''புகாரா? யார் சார் கொடுத்தது?'' என்றாள் நிகிலா, புரியாமல்.

''யார் கொடுத்தால் என்ன? உனக்கு முன் பணம் கொடுக்கக்கூடாது என்று மேலிடத்து உத்தரவு. இனி உன் சம்பளத்தைக்கூட உன் அக்கா அல்லது அத்தானிடம்தான் கொடுக்கச் சொல்லியிருக்கிறார், பெரிய மேனேஜர். உன் கல்யாணத்துக்குச் சேர்க்கிறார்களாமே!''

நிகிலா தலை சுற்றிக் கீழே விழாமல் இருந்தது அதிசயம்!

ஆண்டு விழாவின் போது கூட வந்து ஜி.எம்.முடைய மனைவியிடம் நிலா பரிச்சயம் பண்ணிக் கொண்டது இதற்காகத்தானா? ஜி.எம்.முடைய மகள், நீலாவுடன் படித்தவளாக இருந்தது, நிகிலாவின் தீவினைப் பயனாகத் தான் இருக்க வேண்டும்.

ஆனால் என்ன யுக்தி! என்ன சதி!

ஆக, இந்த ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு தான் இவ்வளவு துணிவுடன் செயல் படுகிறார்களா?

கொதித்துக் கொண்டு வந்த போதும், நிகிலாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

பொது நிறுவனமாக இருந்தாலும், பரவாயில்லை எதோ முயற்சி செய்து பார்க்கலாம்.. ஆனால், இது முழுக்க முழுக்க தனியார் நிறுவனம். நிர்வாகத்தை எதிர்த்துப் பெரிதாக எதுவும் செய்ய முடியாது!

ஜி.எம்.மைப் போய்ப் பார்ப்பதில் பயன் இருக்கும் என்றும், நிகிலாவுக்குத் தோன்றவில்லை!

நீலா எப்படியெல்லாம் நடித்தாளோ?

"இந்தா, இந்த விண்ணப்பத்தை நான் மேலிடத்துக்கு அனுப்பவில்லை. உன்னைப் பற்றி மேலும் தப்பாக எண்ணி விடக் கூடும் என்று என்னிடமே நிறுத்திக்கொண்டேன். எடுத்துப் போய்க் கிழித்துப் போட்டுவிடு" என்று அவள் எழுதிய விண்ணப்பத்தை அவளிடமே திருப்பிக் கொடுத்தார். தலைமைக் கணக்கர்.

நல்லதை எண்ணித்தான் செய்திருக்கிறார். ஆனால் அதனால் அவளுக்கு என்ன பயன்?

"ந...நன்றி சார்." என்று சுரத்தற்ற குரலில் கூறி விட்டு விண்ணப்பத்தை வாங்கிக் கொண்டு தன் இடத்துக்குத் திரும்பிச் சென்று, சோர்வுடன் அமர்ந்தவளுக்கு. மேலே ஒன்றுமே ஓடவில்லை. இனி என்ன செய்வது?

மீண்டும் அக்கா வீட்டுக்குப் போய் உண்டு உறங்கி முன் போல வாழ்வது பற்றி நினைத்துப் பார்க்கக்கூட வெறுப்பாக இருந்தது. ரொம்பக் கேவலமான சரணாகதி அது!

ஒரு தரம், அவளை அவமானப்படுத்தி வெற்றி கண்டவர்கள் அவள் வேறு வழியின்றி அவர்களிடமே வந்து நிற்கும்போது இன்னும் எவ்வளவு கேவலமாக நடத்தக் கூடும்?

வெறும் கொத்தடிமைதான்!

அப்படியாவது வாழ்ந்தாலும்தான், என்ன பயன்? உழைத்த காசில் ஒரு பைசா கூட அவளுக்கு வந்து சேரப் போவதில்லை. திருமணம், சுகேசன் எல்லாமே, எட்டாக் கனவாக முடிந்து விடப் போகின்றன!

சுகேசன் பற்றிய நினைவு, நிகிலாவுக்கு ஒருவிதமாகத் தெம்பளித்தது.

திருமணம் என்பது வாழ்வில் ஒரு முக்கியமான திருப்பம். எதிர்காலம் முழுவதையும் அது முப்பது, நாற்பது ஏன் ஐம்பது ஆண்டுகளாகக்கூட இருக்கலாம். அவ்வளவு காலத்தையும் இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ள வைப்பது அப்படி வாழ்வைப் பகிர்ந்து கொள்ள ஒருவரைத் தேர்ந்து எடுக்கும்போது, அவரிடம் நிச்சயமாக அன்பு, பாசம் அக்கறை எல்லாமே இருக்கும்.

பார்த்தவுடனேயே நிகிலாவை மணந்து கொள்கிறேன் என்றானே. அவனுக்கு அவளிடம் அக்கறை, பாசம், பரிவு எல்லாமே இருக்கும்தானே?

தான் மணக்க இருக்கும், அவளுக்கு ஒரு துன்பம் என்றால், அது அவனுக்கும்தானே?

அந்தத் துன்பத்தைப் போக்க, அவனும் முயற்சிப்பான் தானே.

அக்கா வீடு தவிர, வேறு எங்கும் நிகிலா இருக்க முடியாத நிலை. அக்கா வீட்டில் இருப்பதோ நிகிலாவால் சகிக்க முடியாதது. அத்தோடு அக்கா வீட்டில் இருந்து கொண்டு அவர்களது எதிர்கால இல்லத்துக்கு ஒரு பைசா கூட அவள் சேமிக்க வழியில்லை.

இந்த நிலையில், அவள் இங்கிருந்து என்ன லாபம்?

அதைவிட சுகேசனிடம் சென்றுவிட்டால், சற்றுக் குறைவான ஊதியமே என்றாலும் அங்கேயே ஒரு வேலையைத் தேடிக் கொண்டு, திருமணமும் செய்து கொண்டு, இருவருமாகச் சேர்ந்து சேமிக்கலாமே!

யோசிக்க யோசிக்க, அது ஒன்றுதான் வழி என்பதோடு அது அருமையான வழி என்று நிகிலாவுக்குத் தோன்றத் தொடங்கிவிட்டது.

போக்கிடமே இல்லை என்று வருந்தினாளே. சுகேசனை நினைத்திருக்க வேண்டாமா?

நடந்ததை எல்லாம் சொன்னால் என்னை ஏன் நினைக்கவில்லை? என்று அவன் கோபம் கொள்ளக்கூடும்!

அந்தக் கோபத்தை எண்ணிப் பார்க்கவே நிகிலாவுக்கு வெகு சுகமாக இருந்தது!

சுகேசனிடம் சென்று விடுவது மேல். அதுதான் ஒப்பற்ற ஒரே வழி என்று முடிவு செய்துவிட்ட போதும், எதற்கும் அவனிடமும் ஒரு வார்த்தை கேட்டுக்கொள்ள வேண்டும் என்று நிகிலா நினைத்தாள்.

மறுப்பான் என்று இல்லை. ஒரு வேளை, அவன் வெளியூர் எங்கும் செல்ல நேர்ந்தால்?

இதை எண்ணியவள், உடனே எழுந்து, வெளியே சென்று சுகேசன் கொடுத்திருந்த எண்ணுக்கு, எஸ்.டி.டி. செய்து விசாரித்தாள்.

வழக்கம் போலவே அவன் அலுவலகத்தில் இல்லை. ஆனால், அவன் வெளியூர் எங்கும் செல்லவில்லை என்பதை மட்டும் தெரிந்து கொண்டாள்.

ஒரு பிரச்சினை தீர்ந்தது.

அடுத்த பிரச்சினை பணம்!

இப்போது திருநெல்வேலிக்குச் செல்லும் அளவுக்குப் பணம் அவளிடம் இல்லை. திருநெல்வேலிக்குச் சென்று அதற்கு அப்பாலும் போக வேண்டும்!

பையில் இருப்பதோ பத்தே ரூபாய்! மிஞ்சி மிஞ்சி இருபது ரூபாய்க்கு மேல்தான், இப்போதெல்லாம் அவள் பையில் இருக்க விடுவதே இல்லையே!

பணத்துக்கு என்ன செய்வது என்று யோசிக்கும்போதே, கையில் கழுத்தில் காதுகளில் கிடந்த மெல்லிய நகைகள் நினைவு வந்தன. இந்த உறுப்புகள் மூளியாக இருக்கக்கூடாது என்று எப்போதும் அணிவதற்காக வாங்கி, அன்னை அவளை அணிய வைத்தவை. நீலாவின் அலமாரியுள் வைத்துப் பூட்டப்பட்டிருக்கும் மற்ற நகைகளைப் பற்றி

இப்போது நினைத்துப் பயனில்லை. ஆனால், வாழ்க்கையே மூளியாகி விடும் என்கிறபோது, வெறும் அவயவங்கள் மூளியாவது பற்றி நினைப்பது கூட முட்டாள்தனம்!

வெளியே சென்று, அவற்றை விற்க, நிகிலாவுக்குத் தயக்கமாக இருந்தது.

யார் நகை, என்ன என்று விசாரணை வரலாம். அவளை நம்பாமலும் போகலாம். வீண் பிரச்சினை ஆகலாம்.

சற்று யோசித்துவிட்டு, கிட்டத்தட்ட சினேகிதியாகி விட்டவளான, கூட வேலை செய்யும் அஞ்சலியை அணுகினாள். சற்று வசதியான வீட்டுப் பெண் அவள், தேவைக்காக அல்லாது, பொழுது போக்கிற்காக வேலை செய்கிறவள். எப்போதும் அவளிடம் பணமும் இருக்கும்.

அவசரமாகப் பணம் தேவைப் படுவதைச் சொல்லி, "கை வளையலை வைத்துக்கொண்டு ஓர் ஐநூறு ரூபாய் தர முடியுமா?" என்று கேட்டாள்.

நீட்டிய வளையலை வாங்கி, நிகிலாவின் கைகளிலேயே மீண்டும் அணிவித்துவிட்டு கைப்பையைத் திறந்து ஐநூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தாள், அவள்.

"உன் வளையல் உன் கையிலேயே இருக்கட்டும், நிக்கி. இதை உன்னால் முடிந்தபோது திருப்பிக் கொடு" என்று அஞ்சலி கூறியபோது ஆறுதலில் அழுகையே வந்துவிட்டது நிகிலாவுக்கு.

சுகேசனிடம் சொல்லி, முதலில் இந்தப் பணத்தைத் திருப்பி அனுப்ப வேண்டும்!

அதன்பிறகு, கிளம்புவது அவளுக்கு எளிதாகவே இருந்தது.

ஒரு மணி நேரம் விடுப்பு எடுத்துக்கொண்டு, வீடு திரும்பினாள்.

ஹாலில், டீவி ஓடிக் கொண்டிருக்க, நீலா சோபாவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். கதவு திறந்த சத்தத்தில் அரைக்கண் திறந்து பார்த்தவள். தங்கைதான் என்று கண்டதும், வசதியாகப் படுத்து மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

அறைக் கதவைச் சாத்திக்கொண்டு, நிகிலா ஓரளவு தன் துணிமணிகளையும், கூடவே படிப்புச் சான்றிதழ்களையும் எடுத்து வைத்தாள்.

தூக்கக் கலக்கத்தில் இருந்த தமக்கையிடம், "இங்கிருந்து போகிறேன்" என்றவள் அவள் உளறியடித்துக் கொண்டு "எ.எ.என்..னடீ...? என்று தடுமாறியபடி எழுந்து வருமுன் வீட்டை விடடு வெளியேறிவிட்டாள்.

எதிர் வீட்டு ஆன்ட்டியிடம் சொல்லிக்கொள்ளாமல் வந்தது, கொஞ்சம் உறுத்தியது. ஆனால் அதற்கெல்லாம் நின்று கொண்டிருந்தால் அக்கா வந்து ஏதாவது தகராறு செய்யக்கூடும். அதைவிட சுகேசனிடம் சென்றபின் ஆன்ட்டிக்கும் ஒரு கடிதம் எழுதிவிடுவது மேல்!

நல்லவேளையாக ரயிலில் உட்கார இடம் கிடைத்தது.

திருநெல்வேலிக்கு வந்து இறங்கும் வரை பயணம் பிரச்சினையற்று இருந்தது.

அதன் பிறகு விசாரித்ததில் தென்காசி பஸ்ஸிலும் இலகுவாகவே இடம் கிடைத்தது.

அவள் செல்ல வேண்டிய பூவிளைக்கு, தென்காசி யிலிருந்தும் செல்லலாம், கடையத்திலிருந்தும் போகலாம் என்றார்கள். கடயத்தைவிடத் தென்காசி, சற்று கேள்விப்பட்ட பெயராக இருக்கவே, நிகிலா, தென்காசி பஸ்ஸில் ஏறினாள்.

பூவிளையில்தான், சுகேசனின் அலுவலகம் இருந்தது. ஊராட்சி ஒன்றியம் அது. அங்கிருந்து கொண்டு சுற்றிலும் உள்ள கிராமங்களுக்கு, உரம் விற்று வினியோகம் செய்வதுதான் அவனது வேலை.

தென்காசியில் இறங்கி, ஏதாவது சாப்பிட்டுவிட்டு, சுகேசன் இருக்கும் ஊரைத் தேடிச் செல்ல வேண்டும் என்று எண்ணித் திரும்பியபோது, படபடவென்று வெடிச்சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு நின்று விட்டாள்.

என்னவென்ற பார்த்தபோது ஒரு திருமண ஊர்வலம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

ஊர்வலம் கடந்து செல்வதற்காக அதை ஓர் அசட்டையுடன் பார்த்துக்கொண்டு நின்றவள், திடுமென அதிர்ந்து உடல் விறைத்தாள்.

ஏனெனில் அலங்கரிக்கப்பட்ட காரில் மாப்பிள்ளைக் கோலத்தில் சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்தவன் சுகேசன்!

யார் தன் துன்பம் தீர்த்து ஆதரவளித்து தன்னை மணந்து கொள்ளப் போகிறான் என்று நம்பிச் சென்னையில் இருந்து இவ்வளவு தூரம் வந்தாளோ அதே சுகேசன்தான்!

## 6

கிட்டத்தட்ட அரை மயக்க நிலை நிகிலாவுக்கு.

பற்றிக்கொள்ள அருகே அந்த மின்சாரக் கம்பம் மட்டும் இல்லையென்றால் கீழே விழுந்திருப்பாள் எனலாம்! அந்த அளவுக்கு உடம்பில் உயிர்ச்சத்து வறண்டு போய்விட்டிருந் தது!

ஊர்வலம் அவளைக் கடந்து சென்று, கண்ணுக்கு மறைந்த பிறகும், அவளால் தன்பலமாய் நிற்கக்கூட முடியவில்லை.

'இனி' என்ற வார்த்தை பூதாகரமாய் எழுந்து அவளை மருட்டியது.

'இனி' என்று நினைக்க திட்டமிட இனிமேல் என்ன இருக்கிறது?

வாழ்க்கையே ஆதாரம் என்று வந்தது, ஒன்றுமே இல்லாமல், ஈரம் காய்ந்த மணலாய்ப் பொடிப் பொடியாய் உதிர்ந்து போயிற்று.

இங்கே, இனி ஒன்றுமே இல்லை!

செலவுகள் போகப் பையில் மீதி இருக்கும் இருநூற்றிச் சில்லறை ரூபாய் தவிர, வேறு பணம் கிடையாது! உடம்பில் கிடக்கும் நகைகளை விற்றால் ஒரு சில ஆயிரங்கள் கிடைக்கக்கூடும். அதுவும்தான் எத்தனை நாளைக்கு வரும்?

அக்கா வீட்டுக்கும் திரும்பிப் போக முடியாது.

அங்கே காத்திருப்பது வெறும் கொத்தடிமை வாழ்க்கை என்பதோடு, இனி மகா கேவலப்படவும் நேரும். அந்த வாழ்வு வாழ்தற்குச் சாவு மேல்!

சட்டென, இந்தச் 'சாவு' என்ற பெயரை அவள் மனம் பற்றிக் கொண்டது!

சாவு. செத்து விட்டால் இந்தத் துன்பங்கள் ஒன்றும் இராதல்லவா?

இங்கே இருக்க முடியாதே, அங்கே போக முடியாதே, எப்படி வாழ்வது? என்ன செய்வது? இந்த மாதிரி எந்தத் தொல்லையும் இராதல்லவா? நிம்மதியாகப் போய்ச் சேர்ந்து விடலாம்.

ஏதோ ஒரு முடிவு என்று எடுத்தபின் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ உடம்பில் கொஞ்சம் சுரணை வந்தது போல இருந்தது நிகிலாவுக்கு.

பற்றிக் கொண்டிருந்த மின் கம்பத்தை விட்டுவிட்டுப் பெட்டியைத் தூக்கினாள்.

பெட்டி பாறையாய்க் கனத்தது.

சாவது என்று ஆனபின் இது எதற்கு? விட்டுப் போய்விடலாமா என்று ஒருதரம் தோன்றியது. ஆனால் அப்படி விட்டுவிட்டுப் போவது வீண் சந்தேகத்தைக் கிளப்பக்கூடும். யாராவது ஒரு பரோபகாரி கண்ணில் இது பட்டு வைத்தால் பின்னோடு வந்து என்ன ஏது என்று விசாரிக்கக்கூடும்!

அப்புறம் இந்த உபயோகமற்ற உயிரை விட்டுத் தொலைப்பதே பெரும் பிரயத்தனம் ஆகிவிடக்கூடும்.

அதை விட படுகிற மனக் கஷ்டத்துக்கு துணையாகக் கொஞ்சம் உடம்பு சிரமமும் பட்டுவிட்டால் போகிறது என்று தீர்மானித்து, பெட்டியைப் பாதி தூக்கியும் பாதி இழுத்துமாகத் தன்னோடு கொண்டு சென்றாள்.

சந்தேகத்தைக் கிளப்பாத வண்ணம், பஸ் நிலையத்திலேயே ஓர் ஓரமாக அமர்ந்து கொண்டு எப்படிச் சாவது என்பது பற்றி யோசிக்கலானாள்.

பல்வேறு விதமான தற்கொலைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, ஏதாவது கிணற்றில் விழுந்து இறப்பதே மேல் என்ற முடிவுக்கு நிகிலா வந்தாள்.

தூக்க மாத்திரை அவள் தனியாகப் போய் கேட்டால், தரமாட்டார்கள்.

பஸ் முன் விழுந்தால், காயங்களோடு பிழைத்து விடக்கூடும். அந்த மாதிரிப் பிழைப்பது இன்னும் கொடுமை!

ரயிலடியில் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும்.

எப்படியும், ரயில்வே ஊழியர்கள், காவலர்கள், உண்டி, விற்பவர்கள், என்று பலர் இருப்பார்கள். ஆள் இல்லாத இடம் பார்த்துச் சென்று விழுந்தால், செத்து விடலாம் என்றாலும் அப்படிப் போவதை யாரேனும் பார்த்து சந்தேகப்பட்டு விட்டால் காரியம் கெட்டுவிடும்!

கிணறு என்றால், அப்படியல்ல. வழி நெடுக வயல்களும் வயல்களின் நடுவே கிணறுகளும் இருப்பதை பஸ்சில் வரும்போது பார்த்துக்கொண்டே தான், நிகிலா வந்தாள். ஒன்றில்லாவிட்டால் ஒன்று. அவளுக்குக் கை கொடுக்காமல் போகாது.

அத்தோடு நல்ல வேளையாக அவளுக்கு நீச்சலும் தெரியாது.

இந்த அழகான பிரதேசத்தில் வாழப் போகிறோம் என்று உள்ளூர மகிழ்ந்தபடி வந்தது நினைவு வர கைப்புடன் கூடிய சிரிப்பொன்று அவள் முகத்தில் தோன்றியது. இந்த அழகான பிரதேசத்தில் சாக அல்லவா அவள் வந்திருக்கிறாள்!

உணவைப் பற்றிய எண்ணம் அடியோடு மறந்து போனது.

யாரும் சந்தேகப் படாத விதத்தில் சாகப் போக வேண்டும்! அதையே நினைத்தபடி, ஒரு சில பஸ்கள் வந்து நின்று ஆள் ஏறிச் செல்வதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

ஊர் அருகே கிணறு தேடிப் போவதை விட கொஞ்ச தூரம் தள்ளிப் போவது நல்லதல்லவா?

அடுத்த பஸ்சில் ஏறி உட்கார்ந்தபோது "அம்மா, உங்கள் பெட்டியை விட்டுவிட்டு வந்து விட்டீர்களே!" என்று ஓர் ஆள் அவள் பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தான்.

இந்தப் பெட்டி, விடாத சொந்தம் போலும் என்று எண்ணியபடி உதட்டைக் காதுவரை இழுத்து ஒரு நன்றியோடு பெட்டியை வாங்கிக் கொண்டாள், நிகிலா.

அதேபோல, அடுத்து வந்தவற்றுள் அதிக ஆள் நடமாட்டம் இல்லாத நிறுத்தம் ஒன்றில் அவள் இறங்கியபோது ஞாபகமாகப் பெட்டியையும் எடுத்துக் கொண்டே இறங்கினாள்.

விட்டுவிட்டு இறங்கினால், அப்புறம் அதை அவளிடம் கொடுப்பதற்காக இன்னும் யாராவது அவளைத் துரத்திக் கொண்டு வந்துவிடக்கூடாதே!

உயிர் போகும்வரை இந்த உடலைப் போல இந்தப் பெட்டியும் இவளுக்கு ஒரு சுமை! தூக்கிச் சென்றே ஆக வேண்டிய சுமை!

பஸ் புறப்பட்டுச் சென்று கண் மறையும் வரை பெட்டியைத் தூக்கிச் சென்றவள், பஸ்சும் சென்று, சாலையில் சென்று கொண்டிருந்த ஓரிரு கார்கள் தவிர சுற்று வட்டாரத்தில்

ஆள் நடமாட்டம் இல்லை என்று கண்டதும் பெட்டியைத் தொப்பெனக் கீழே போட்டாள்.

முதலில் ஒரு சுமை ஒழியட்டும்!

பெட்டியைப் போட்டுவிட்டு சாலையை விட்டு இறங்கி வயலின் வரப்பின் மீது முடிந்தவரை வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில் ஏதோ உறுத்தத் திரும்பிப் பார்த்தாள்.

சாலையில் சென்ற கார் ஒன்று நின்று பெட்டியைத் தூக்கிக் காரினுள் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

பஸ்சுக்கு காத்து நின்ற ஏழை எவனோ பெட்டியைத் தூக்கி கொணர்ந்து அவளிடம் கொடுத்துவிட்டுப் போனான். ஆனால், காரில் செல்லும் இந்தப் பணக்காரனுக்கு அனாமத் தாகக் கிடக்கும் அடுத்தவர் பொருள் மீது ஆசை விடவில்லை யாக்கும்.

ஏளனமாக எண்ணியவள், திரும்பிப் பாராமல் மேலே நடந்தாள். பெட்டியைத் தூக்கிக் காருக்குள் வைக்கிறவன், பெட்டியைத் தருவதற்காக அவள் பின்னே வரப் போவதில்லை. பிறகென்ன தயக்கம்?

ஒரு புறம் வாழைத்தோப்பு அடர்ந்திருந்ததால் இப்போது ரோடு கூடத் தெளிவாகத் தெரியவில்லை.

பெரிய அகன்ற கிணறு; பக்கத்திலேயே இருந்த பம்ப்பு செட்டும் பெரிய தொட்டியும் கிணற்றின் ஆழத்தையும் எடுத்துரைத்தன.

தாயிடம் ஒரு தரம், மானசீகமாக மன்னிப்புக் கேட்டவள், கைப்பிடிச் சுவரில் ஏறி, கிணற்றிலிருந்து உயரே வருவதற்காக

அமைக்கப்பட்டிருந்த படிகளைக் கவனமாகத் தவிர்த்து நீர் இருந்த பகுதிக்குள் நேரே குதித்து விட்டாள். அவைகளில் மாட்டிக்கொண்டு இடைவழியில் நின்றுவிடக் கூடாதல்லவா?

நீரினுள் மூழ்கி அடித்தளத்தைத் தொட்டு ஒரு வாய் தண்ணீரைக் குடித்து, ஒரு முறை உயரே வந்தபோது, காதுக்குள் கேட்ட 'ஹோ' என்ற இரைச்சலையும் மீறிக் கொண்டு ஏதோ குரல் கேட்பது போலிருந்தது. ஆனால், அது மனிதக் குரல்தானா என்று தெளிவுபடுத்திக் கொள்ளு முன்னரே நிகிலா நினைவை இழந்தாள்.

இருமலோடு, வாயிலிருந்து நீரைக் கொப்பளிப்பது போல, ஒருதரம் உணர்ந்து ஒரு தரம் யாரோ வேலை மெனக்கெட்டுக் காப்பாற்றிவிட்டார்கள் போலிருக்கிறதே என்று ஆத்திரத்துடன் அவர்களிடம் சண்டை போட அவள் தலையைத் தூக்க முயற்சித்தபோது மீண்டும் நினைவு இழந்தாள்.

மறுபடியும், அவளுக்கு நினைவு திரும்பிய போது, "என்ன சுந்தரம், நான் அவ்வளவு சொல்லியிருந்தும் கிணற்றுக்குள் விழுகிற அளவுக்கு விட்டுவிட்டீர்களே! விழும்போது உள் படிக்கட்டில் தலை மோதியிருந்தால், இந்தப் பெண் என்ன கதியாயிருப்பாள்?" என்று ஓர் ஆண் குரல் யாரையோ, கண்டித்துக் கொண்டிருந்தது.

கண்டித்தது என்றால், உரக்கக் கத்தவில்லை. ஆனால் குரலில் ஓர் அழுத்தம் இருந்தது.

பதில் சொன்னவரை அந்தக் குரல் பாதித்தது என்பது நன்றாகவே தெரிந்தது. "இ.. இல்லை, சார். இந்தப் பெண் இப்படித் திடுமெனக் குதிப்பாள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை, சார். சாசா... சாரி, சார்" என்று அந்த

நடுத்தர வயதான குரல் மன்னிப்புக் கேட்டது நிகிலாவுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை.

எனவே, கனத்த கண்ணிமைகளை திறக்க முயன்றபடி, ''நான்தான், படி இல்லாத இடம் பார்த்துக் குதித்தேனே! தலை படியில் மோதாது'' என்றாள் மெல்லிய குரலில்.

ஒரு கணம் அங்கே முழு அமைதி நிலவியது.

பின்னர் ஓரிருவர் அவள் புறமாகத் திரும்புவது தெரிந்தது.

சிரமப்பட்டுப் பிரித்த இமைகளினூடே, இருவர்தான் என்பதை அவள் அறிந்தபோது, ''ஆக வீராங்கனை மீண்டும் விழித்தாயிற்றாக்கும்!'' என்று சற்று ஏளனமாகக் கேட்டான் அங்கிருந்த இருவரில் இளையவன்.

இளையவன் என்றால் ரொம்பவும் சிறிய வயதினன் அல்ல. முப்பது அல்லது முப்பதை நெருங்கிக் கொண்டிருப்பவனாகத் தோன்றினான். அவன் குரலைப் போலவே தோற்றத்திலும், ஒரு கம்பீரம் இருந்தது.

அவனைவிடப் பத்துப் பதினைந்து வயது மூத்தவராய் அருகே நின்று கொண்டிருந்தவரைக் காட்டிலும் பத்து சென்டி மீட்டராவது உயரமும் அதிகம்.

ஆனால் அவனது தோற்றத்தில் அவளது கவனம் அதிகம் பதியவில்லை. மாறாக அவன் வீராங்கனை என்றது அவள் மனதை உறுத்தியது.

கோழையைப் போலத் தற்கொலைக்கு முயன்றாள் என்று குத்திக் காட்டுகிறான்.

உயிரை விடுவதற்கு எவ்வளவு துணிவு வேண்டும் என்று இவனுக்கு என்ன தெரியும்?

மேலும், ஆசைக்கா உயிரை விடுவார்கள்? அதன் பின் என்னென்ன துன்பங்கள் இருக்கக்கூடும்?

என்னனென்ன துன்பங்கள் என்பது நினைவு வர, "என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?" என்று தடைப்பட்ட குரலில் நிகிலா கேட்டாள்.

நிகிலாவின் கேள்விக்கு அந்த இளைஞன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை.

முதலில் அருகில் நின்று கொண்டிருந்த அந்த சுந்தரத்திடம் திரும்பி "நீங்கள் கிளம்புகிற வேலையைப் பாருங்கள் சுந்தரம். மனு எதுவும் இருந்தால் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். இரவு அல்லது நாளைக்குப் பார்க்கலாம். எட்டு மணிக்குப் பங்களாவுக்குக் கிளம்பி விடுகிற மாதிரி ஏற்பாடு பண்ணுங்கள். மற்றது எலலாம் நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி, அவரை அனுப்பி வைத்தான்.

'கூறி' என்பதை விட 'உத்தரவிட்டு' என்று சொன்னால் சரியாக இருக்குமோ, என்றிருந்தது நிகிலாவுக்கு. ஆனால் 'உத்தரவு' போல அதிகார தோரணையிலும் அவன் சொல்லவில்லை.

ஆனால் அவன் அப்படிச் சொல்லாவிட்டாலும் அவன் சொன்னதை உத்தரவாகவே ஏற்று "சரி, சார்" என்று பணிவுடன் கூறி வெளியே சென்றார் அடுத்தவர்.

யார் இவர்கள் என்று நிகிலா யோசிக்கையிலேயே, அவள் புறம் திரும்பி, "ஏன் இந்த அசட்டு முயற்சி?" என்று கேட்டான் அவன்.

விஷயம் என்ன என்று ஒன்றும் தெரியாமல் எங்கோ, உயரத்தில் இருந்து கொண்டு பார்த்தால் அப்படித்தான் தோன்றும்!

பட்ட வேதனைகள் நினைவு வர "அசட்டுத்தனம் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கம்மிய குரலில் பதிலுக்குக் கேட்டாள் அவள்.

சற்றுத் தள்ளிக் கிடந்த நாற்காலியைத் தன் நீண்ட கரத்தால் இழுத்துப்போட்டு உட்கார்ந்து கொண்டு அவளை நேராகப் பார்த்தான், அவன். "தகுதியற்ற ஒருவன் ஏமாற்றிவிட்டான் என்றால் அத்துடன் உலகமே முடிந்துவிட்டதாகக் கருதுவது அசட்டுத்தனம் இல்லையா?"

தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு, நிமிர்ந்து அமர்ந்தாள் நிகிலா. "எ... எப்படித் தெரியும்?" என்று தடுமாற்றத்துடன் வினவினாள்.

அகலாத பார்வையுடன், "பாடி லாங்கேஜ் என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். வாய் மொழியாக அல்லாமல் உடலின் மற்ற உறுப்புகளின் சலனங்கள் மூலமாக அறியப்படும் மொழி. நான் எதிர் மாடியில்தான் நின்று கொண்டிருந்தேன். கல்யாண ஊர்வலத்தைப் பார்த்ததும், அது உன்னிடம் ஏற்படுத்திய பாதிப்பை, நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது. மின் கம்பத்தைப் பிடித்துக் கொண்டு நின்றபோதே, ஓரளவு உறுதியாகிவிட்டது. உடல் மொழியைப் பொறுத்த வரையில் தற்கொலைக்குத் துணிந்துவிட்டால், அதை மறைப்பது மிகவும் கடினம். கண், எப்படியும் காட்டிக் கொடுத்து விடும். அதனால்தான் சுந்தரத்திடம் உன் நடமாட்டத்தைக் கவனிக்கும்படி, சொல்லி வைத்தேன். என்ன? என் கணிப்பு சரிதானா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்" என்று தலையாட்டினாள் நிகிலா.

"ஏமாற்றம், எந்த அளவுக்கு? உன்னை வரச் சொல்லிவிட்டுத் திருமணத்தை செய்திருக்க மாட்டான்..."

சொல்ல விருப்பம் இல்லாத போதும், 'போடா' என்று போகவும் முடியாமல், வெகு சுருக்கமாக, ''ஓர் ஆண்டாக நிச்சயமானது... அங்கே, அக்கா வீட்டில் இருக்க முடியாத நிலை! சொல்லாமல் வந்து விட்டேன். இங்கே வந்து பார்த்தால்...'' என்றவளின் குரல் கம்மியது.

''ம்ம்ம்...ஒன்று யோசித்தாயா? நீ இறப்பதால் யாருக்கு என்ன லாபம்?... அல்லது யாருக்கு என்ன நஷ்டம்?'' என்று கேட்டான், அவன்.

நீர்த்திரையிட்ட . கண்களை அவன் பார்வையிலிருந்து திருப்பிக்கொண்டு ''எனக்கு... எனக்கு இந்த வேதனை போவது லாபம்.'' என்றாள் நிகிலா கம்மிய குரலில்.

''அதென்ன நிச்சயம்?''

கேள்வி புரியாமல், விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள், அவள்.

''வேதனை போய்விடுவது என்ன நிச்சயம் என்று கேடடேன். எப்போதாவது, செத்துப் பார்த்த அனுபவம் இருக்கிறதா?''

''இதென்ன கேள்வி?'' என்றாள் அவள் எரிச்சலுற்று.

''சரியான கேள்விதான்'' என்றான் அவன். தன் அழுத்தமான குரலில் ''யோசி. செத்தபிறகு இதைவிட வேதனையாக இராது என்று என்ன நிச்சயம்? அல்பாயுசில் அகால மரணம் அடைந்து ஆவியாக அலைவதாகச் சொல்லுகிறார்களே. அது போல அலைய நேர்ந்தால்?''

அலுப்புடன் 'உச்' கொட்டினாள் அவள். ''சும்மா மிரட்டுகிறீர்கள். ஆவியெல்லாம் கிடையாது'' என்றாள் நிகிலா.

''அப்படியும் இருக்கலாம். அப்படி அல்லாமலும் இருக்கலாம். 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' சமாசாரம்தான். அதனால் ரொம்ப நிச்சயமாக எதையும் எண்ணிவிட வேண்டாம்.''

உதட்டைக் கடித்துக் கொண்டு நிகிலா பேசாதிருந்தாள். இவன் என்ன உண்மை என்று உணர்ந்து சொல்லுகிறானா? அல்லது கிண்டலடிக்கிறானா?

''இன்னமும் யோசியம்மா, சுகேசன் செய்தது அநியாயம்! உண்மையே. ஆனாலும் உன் மரணம் அவனைத் திருத்துமா? அது இல்லை போகட்டும்...அவன் செய்த தப்புக்கு ஏதாவது தண்டனையாவது கிடைக்குமா? ஊகூம், அதுவும் இல்லை! என்றைக்காவது நீ வந்து ஏதேனும் ஏடாகூடம் செய்யக் கூடுமோ, என்கிற அச்சம் கூட அடியோடு நீங்கி, நிம்மதியாக வாழ்வான் இல்லையா? அவன் செய்த தப்புக்கு இப்படிப் பரிசா கொடுப்பது?''

''பின்னே என்ன செய்வது?'' என்று சின்னக் குரலில் கேட்டாள் அவள்.

''அவனை உணரவை. என்னமாதிரிப் பாக்கியத்தை இழந்து விட்டோம் என்று அவன் ஏங்கும்படி செய்! எண்ணி எண்ணித் தவிக்க வை! ஏங்க வைத்துப் பழி தீர்த்துக் கொள்!''

## 7

பழி தீர்ப்பதா?

அது பற்றி நிகிலா நினைத்துப் பார்க்கவே இல்லையே!

தன் இழப்பையும் அதன் எதிர்காலப் பாதிப்பையும் மட்டிலுமே எண்ணிக் கலங்கிப் போய்விட்ட அவளுக்குப்

பழி வாங்குதல் என்கிற வார்த்தைகள் பற்றி நினைவுகூட வரவில்லையே!

அந்தப் புதியவரின் வேகமும் தீவிரமுமான குரல் உசுப்ப "எப்படி?" என்று ஆர்வத்தோடு கேட்ட நிகிலா உடனே தொய்ந்தாள். "எப்படி முடியும்? பணம் பதவி, அந்தஸ்து என்று எதுவும் இல்லாத என்னால் அவனை என்ன செய்ய முடியும்?" என்றாள், நிராசையற்று.

"முடியும்" என்றான் அவன், உறுதியோடு. "எப்படிப் பழி வாங்குவது என்று நான் உனக்கு வழி காட்டுகிறேன் நிகிலா!"

நிகிலாவா?

திகைப்புற்று, அவனை நிமிந்து பார்த்தாள் நிகிலா!

முன்பும் சுகேசன் என்றான்!

இவர்கள் இருவரையும் பற்றி எதிரில் இருப்பவனுக்கு எப்படித் தெரியும்?

கேள்வியாய் அவள் நோக்கத் தோளைக் குலுக்கினான் அவன். "சுகேசனின் பெயர் இங்கே ஒரு விதமாய் பிரசித்தம். உன் பெயர், உன் பெட்டியில் இருந்தது," என்று அவளது கட்டிலின் அருகே இருந்த சிறு மேஜை மீது வைக்கப் பட்டிருந்த, அவளது பெட்டியை லேசான ஒரு தலையசைவால் காட்டினான்.

ஆக, அவளைப் பின் தொடர்ந்து வந்து அவள் விட்டு விட்டுப் போன பெட்டியைக் காரினுள் எடுத்து வைத்தது, இவனுடைய ஆட்கள்!

அவளைக் காப்பாற்ற, அவன் செய்த முயற்சியின் ஒரு பகுதி. சட்டென எப்படித் தவறாக எண்ணிவிட்டாள்! ஆனால் ஏன் திறந்தார்கள்?

யார் என்று அறிவதற்காகவா?

"உனக்கு மாற்றுடைக்காகப் பெட்டியைத் திறந்தோம். உன் சான்றிதழ்கள் உள்ளே இருந்தன."

'மாற்றுடை! ஆமாம். அவள் முதலில் அணிந்திருந்தவை இவையல்ல. நனைந்திருக்கும். ஆனால் யார் மாற்றினார்கள்? காப்பாற்றிய இவனா...' என்று எண்ணும் போதே நிகிலாவின் முகம் கன்றிச் சிவக்கலாயிற்று.

"கவலைப்பட வேண்டாம். உனக்கு உடை மாற்றியது ஒரு பெண்தான். அருகிலேயே ஒரு சிறு கிளினிக் இருக்கிறது. அங்கே, உதவிக்கு இருக்கும் ஆயா" என்று அவன் சற்று ஏளனமான குரலில் கூறவும், நிகிலா மறுபடியும் திகைத்தாள்.

அவள் நினைக்கும்போதே, பதில் சொல்கிறானே! பாடிலாங்வேஜ். அங்க மொழியைப் பாடமாகவே பயின்றிருப்பானோ? இவன் முன்னிலையில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் போல, உதட்டைக் கடித்துக்கொண்டு அவள் எண்ணமிடும்போதே அவன் மீண்டும் பேசினான்.

"நீ, ஒரு மாதிரி உணரக்கூடுமோ என்று அந்தப் பெண்ணைத் தருவித்தேன். ஆனால்..." என்று மீண்டும் தோளைக் குலுக்கினான் அவன்.

அவன் குரலில் இருந்த ஏளனமும், கண்டனமும், இப்போதுதான் அவளுக்கு உறைத்தன. காரணமும் புரிந்தது.

நிகிலாவும் ஒன்றும் கட்டுப்பெட்டி அல்ல. தேவைக்குக் கூட ஆண் வைத்தியரிடம் உடம்பைக் காட்ட மாட்டேன் என்று அடம் பிடிக்கிற வகையைச் சேர்ந்தவளும் கிடையாது. இந்த உடை மாற்றலும் கூடக் கிட்டத்தட்ட அப்படித்தான்.

ஆனால், அவன் அவளுக்கு உடை மாற்றுவதை ஏனோ அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை! ஏன்

என்று அவளுக்கே புரியாத இதை என்னவென்று இவனிடம் விளக்குவது?

அது முடியாமல் போகவே, "ஏதோ வழி சொல்லித் தருவதாகச் சொன்னீர்களே. என்ன செய்ய வேண்டும் மிஸ்டர்....?" என்று கேட்டாள்.

அவனும் கண்டனத்திலேயே நில்லாமல் "நரேந்திரன்" என்று பெயரைத் தெரிவித்து விட்டு, அவளது மற்ற கேள்விகளுக்கு வந்தான். "பழி வாங்குவதுதானே? சொல்கிறேன். ஆனால் அதை நீ இன்னும் கொஞ்சம் சம நிலைக்கு வந்த பிறகு சொல்கிறேன். முதலில் சாப்பிடு. மறுக்க வேண்டாம். இன்று முழுவதுமே நீ சாப்பிடவில்லை என்பது உன் முகத்திலேயே தெரிகிறது. உனக்காக உண்ணப் பிடிக்க வில்லை என்றாலும் எனக்குக் கம்பெனி கொடுப்பதற்காக வேனும் சாப்பிட வா." என்று வற்புறுத்தி அழைத்தான்.

பசி என்ற உணர்வே இல்லாவிட்டாலும் இப்படிக் கேட்கும் போது எப்படி மறுப்பது?

அவளுக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, அவள் உயிரை வேறு காப்பாற்றியிருக்கிறான்!

"சரி" என்று கண் விழித்ததிலிருந்து அவ்வளவு நேரமும் அமர்ந்திருந்த படுக்கையைவிட்டு இறங்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவளுக்குச் சட்டென உலகம் தட்டாமாலை சுற்றி நேராகியது.

அதற்குள், ஒரு வலிய கரம் தடுமாறிய அவளைப் பற்றி நிறுத்த அந்தக் கையின் பலத்திலேயே உணவு மேஜையை அடைந்தாள்.

உணவு மேஜை இருந்ததும், அறையின் அடுத்த பகுதியில்தான்.

அவள் சுற்றிலும் பார்க்கவும், ''இந்தப் பகுதி 'டிராவலர்ஸ் பங்களா' அரசாங்கத்துக்கு சொந்தமானது. ஊரை விட்டு ரொம்பவும் வெளியே கட்டியிருக்கிறார்களே என்று எண்ணியதுண்டு. ஆனால், எதிலும் ஓர் நன்மை இருக்கும் என்று இப்போது புரிகிறது'' என்று முறுவலித்தான் அவன்.

அவளைக் காப்பாற்றிக் கொண்டு வந்து கிடத்த, அருகிலேயே இடம் கிடைத்ததைச் சொல்லுகிறானாக்கும்! ஆனால் தான் காப்பாற்றப்பட்டது நன்மைதானா என்று இன்னமும் அவளுக்கு நிச்சயமாக விளங்கவில்லையே!

சோர்வின் போர்வையில் அவள் சும்மா உட்கார்ந்து கொள்ள நரேந்திரன் பாத்திரங்களைத் திறந்து ஆராய்ந்தான்.

''சப்பாத்தியும் இருக்கிறது. ஆனால் அதைச் சுவைத்துக் கொண்டு இருப்பதைவிட தொண்டைக்குள் வழுக்கிக் கொண்டு போகிற மாதிரி சாதத்தில் ஏதாவது பிசைந்து சாப்பிடுகிறாயா?'' என்று கேட்டவன் அவள் தலையாட்டவும் அவள் முன் ஒரு தட்டை வைத்து சாதம், குழம்பு, கூட்டு எல்லாம் அளவாகப் பரிமாறினான்.

பெண்டாட்டிக்குப் பரிமாறிப் பழக்கம் போலும் என்று, வேடிக்கை போல எண்ணியவள் அந்தக் கற்பனையும் பிடிக்காமல் தட்டில் இருப்பதை அளையத் தொடங்கினாள்.

தனக்கும் வேண்டியதை எடுத்துக் கொண்டு அமர்ந்தவன் அவளைக் கவனித்து, ''தட்டில் இருப்பதை வாய்க்குள் வைத்தால்தான் உண்ண முடியும்'' என்று கேலியாகக் கூறவும் எரிச்சலோடு ஒரு பிடி சாதத்தை எடுத்து வாயில் வைத்து விழுங்கினாள் அவள்.

வேண்டா வெறுப்பாக விழுங்கியதுதான். ஆனால் வயிற்றின் பசியை உணர வைத்தது.

உள்ளத்தை அரிக்கும் வேதனையை ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனால் வயிற்றை எரிக்கும் பசியைப் போக்கிக் கொள்ளலாம் தானே?

'பசி எந்த ஒரு சிறு துன்பத்தையும் பூதாகாரமாக்கிக் காட்டும்' என்று தாயார் சொல்வது நிகிலாவுக்கு அப்போது நினைவு வந்தது.

இது ஒன்றும் சிறு துன்பமல்ல என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டே சாப்பிடத் தொடங்கியவள், மேலும் தனக்கு வேண்டியதையும் எடுத்து மடமடவென்று உண்டு முடித்தாள்.

உண்டு முடித்ததும் அவனைப் பார்த்து ''நன்றி'' என்றாள்.

''எதற்கு?'' என்று கேட்டான், அவன். ''சாப்பாடு போட்டதற்கா?''

''அ..அதற்கும்''

''அப்படியென்றால் தற்கொலை எண்ணத்தை விட்டா யிற்றா?''

''ஆ..ஆமாம்''

''என்ன? இன்னும் பதில் 'கணீர்' என்று வரவில்லையே! ஒரு வேளை இனிப்பு உண்டால் இன்னும் தெளிவு வரக் கூடுமா?'' என்று பெங்காலி இனிப்புகள் அடங்கிய கிண்ணத்தை அவள் புறமாக நகர்த்தினான் அவன்.

''இனிப்பு வேண்டாம்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஏன்?'' என்று அவளைவிடச் சுருக்கமாகக் கேட்டான் அவன்.

அவளுக்கு எவ்வளவு பெரிய இழப்பு நேர்ந்திருக்கிறது? இந்த நேரத்தில் என்ன கேள்வி இது என்று உள்ளூரக் கடுத்துக் கொண்டு குறிப்பாக "எதைக் கொண்டாடுவதற்கு இனிப்பு உண்பது?" என்று கேட்டாள் நிகிலா.

"என்னைச் சந்தித்ததைக் கொண்டாடக்கூடாதா?"

தலைசரித்து அவன் வினவிய விதத்தில், பதில் சொல்ல மாட்டாமல் அவள் பேசாதிருக்க, நரேந்திரன் மீண்டும் கேட்டான். "அல்லது... என்னைப் பார்த்தது. அப்படி ஒன்றும் கொண்டாடக்கூடிய விஷயமாகத் தெரியவில்லையோ?"

பேசாமல், இனிப்பை எடுத்துக் கொண்டாள் அவள்.

இனிப்பை உண்டு கை கழுவியானதும், நிகிலா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"என்ன?" என்று விசாரித்தவனை அவள் வியப்புடன் நோக்கவும் "அப்படியென்ன ஆச்சரியம்?" என்று மீண்டும் கேட்டான் அவன்.

"அதில்லை. எல்லாவற்றையும் நான் கேட்கும் முன்னே கண்டுபிடித்துப் பதில் சொன்னீர்கள். இப்போது என்னவென்று கேட்கிறீர்களே என்று நினைத்தேன்" என்று அவள் மனதை மறையாமல் லேசான முறுவலுடன் விளக்கினாள்.

முகம் மலர, "ஓகோ, அப்படியா?" என்று எதையோ யோசிப்பவன் போலப் பாவனை செய்து "இங்கே நீ தேடுவது என்றால், அது உன் ஈரத் துணியாகத்தான் இருக்கும், சரி தானா?" என்று வினவினான்.

"நூறு மார்க்!" என்று முறுவலோடு தலையாட்டினாள் அவள்.

''அந்த ஆயாவிடமே, உன் ஈரத்துணிகளை அலசிக் காயப் போடச் சொன்னேன். ஓரளவு காய்ந்திருக்கும்'' என்று விவரம் தந்தவன் லேசாகச் சிரித்தான். ''இனிப்பு உண்டதும் சிரிப்புக்கூட வருகிறதுதானே?''

அந்த இனிப்பை உண்ணவே தயங்கிய காரணம் நினைவு வர நிகிலாவின் புன்னகை மெல்ல மறைந்தது. ''பழி வாங்குவது பற்றிச் சொல்லுவதாகச் சொன்னீர்களே!'' என்று அவனுக்கு நினைவூட்டினாள். ''இப்போது சொல்லலாம் அல்லவா?''

''தாராளமாய்'' என்று ஜன்னல் ஓரமாய் கிடந்த கூடை நாற்காலிகளில் ஒன்றை அவளுக்குக் காட்டிவிட்டுத் தானும் ஒன்றில் உட்கார்ந்தான்.

அவளும் வந்து அமர்ந்ததும், ''நிகிலா இப்போது பேசப் போகும் விஷயம் உன் மனவேதனையைக் கொஞ்சம் அதிகப் படுத்தக்கூடும். அதைப் பொறுத்துக்கொண்டு முடிந்த அளவு அதை ஒதுக்கிவிட்டு நான் சொல்வதை நீ கவனிக்க வேண்டும். கூடவே உன் அபிப்பிராயங்களையும் ஆட்சேபனைகளையும் தாராளமாகச் சொல்லலாம்'' என்று முன்னுரை ஒன்று கொடுத்துவிட்டுச் சொல்லத் தொடங்கி னான்.

''ஒரு பொருளின் அருமை, அது கிட்டாத பொருள் என்று ஆகும்போதுதான் அதிகம் தெரியும் என்பது உனக்கும் தெரிந்திருக்கும்.''

காயத்தில் கத்தியை நுழைத்து திருகுவது என்பது, இதுவாகத்தான் இருக்க வேண்டும். சுகேசன் எட்டாப் பொருளாகி விட்டான் என்று சாகத் துணிந்தவளிடம் இதைச் சொல்லித்தான் ஆக வேண்டுமா?

முகம் இறுக அமர்ந்திருப்பதைக் கவனித்துவிட்டு, ''நான் சுகேசனைச் சொல்லவில்லை நிகிலா. அந்த அளவுக்கு அவனிடம் உயர்வு ஒன்றும் கிடையாது. இன்றில்லா விட்டாலும், ஒரு நாள் உனக்கு இந்த உண்மை புரிந்தே தீரும். ஆனால் நான் இப்போது குறிப்பிட்டது உன்னைப் பற்றி. இவ்வளவு நாளும் நீ அவன் கையெட்டும் தூரத்தில் இருந்தவள். எனவே, உன் உயர்வு பற்றி அவன் அறியவில்லை. இப்போது அவனுக்கு எட்டாத உயரத்துக்கு, நீ போய்விட்டாய் என்றால்...'' என்றவனை இடை மறித்தாள் நிகிலா.

''உயரத்துக்கு நான் போவது எப்படி என்பது ஒரு புறம் இருக்க நான் எந்த உயரத்துக்குப் போனாலும் இனி அது பற்றி சுகேசன் லட்சியம் செய்யப் போவதில்லையே! அவர் ஒரு பெண்ணை விரும்பித் திருமணமும் செய்து கொண்டு விட்டாரே! வேண்டாத பொருள், எந்த உயரத்திலே இருந்து என்ன பயன்?'' என்றாள் அவள் கசப்புடன்.

''உனக்கு மனோதத்துவம் தெரியவில்லை நிகிலா. நம்மால் கழிக்கப்பட்ட ஒருவர் தனியே கிடந்து வாடி வதங்கினால் வாய் வார்த்தையாக 'ஐயோ பாவம்' என்று இரக்கப்படுவது மனதுக்குள் நன்றாக இருக்கும். அப்படிப் பரிதாபப்படுவது உற்சாகமாகக்கூட இருக்கும். ஆனால் அதே நபர் அப்படி வாடி வருந்தாமல் நன்றாகவே இருக்கிறார் என்றால் சகிக்க முடியாது. பொதுவான மனித இயல்பு இதுதான். அதிலும் சுகேசனைப் பற்றி கேட்கவே வேண்டாம். அத்தோடு அவன் மணந்திருக்கும் பெண்! படிப்பு, பண்பாடு, நடை, உடை, பாவனை எதிலுமே உயர்வாகச் சொல்ல ஒன்றும் கிடையாது!''

''பின்னே, ஏன் மணந்தார்?''

"பணம்! அவளுடைய தந்தை, பல்வேறு விதமாகச் சம்பாதித்து வைத்திருக்கிறாரே, அந்தப் பணத்துக்காக அந்தப் பெண் ஒரே வாரிசு!"

"ஓ!"

துளி அழுக்கு உடம்பில் படாமல் நுனி நாக்கால் ஆங்கிலம் பேசிக்கொண்டு, ஸ்டைலாக உட்காரும் சுகேசன் நினைவு வர, நிகிலா திகைத்தாள். எப்படி முடியும்? ஆனால் முடிந்திருக்கிறதே!

"உங்களுக்கு எப்படித் தெரியும்? அ... அந்தப் பெண் பற்றி எ... எப்படித் தெரியும் என்று கேட்டேன்."

"இந்தத் திருமணத்தில் தலையைக் காட்டி விட்டுப் போகத்தான் நான் தென்காசிக்கு வந்ததே. பூவிளை ஒன்றியத்தில் முக்கியமான பிரமுகர், பெண்ணுடைய தந்தை."

பணத்துக்காகக் கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்க விட்டானா? நிச்சயித்த பெண்ணைப் பற்றி நினைக்கவே இல்லையே! என்ன மனிதன் இவன்? இவனை நம்பி அங்கிருந்து கிளம்பி வந்தாளே?

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் நிகிலா.

அதற்கு அவன் சொன்ன பதில் அவளைப் பிரமிக்கச் செய்தது!

"ஏனெனில் நீ திருமணம் செய்துக் கொள்ள வேண்டும்." என்றான் அவன்!

"தி...தி...திருமணமா? யா...யாரை?" என்று திக்கித் திணறினாள் அவள்.

''என்னை!'' என்று அவன் சொல்லி முடித்தபோது அவள் பேச்சிழந்து போயிருந்தாள்!

## 8

**வி**ழித்துக் கொண்டிருக்கிறாளா, அல்லது தூக்கத்தில் கனவுதான் கண்டுகொண்டிருக்கிறாளா என்றே சற்று நேரம் நிகிலாவுக்குப் புரியவில்லை!

ஒரு வேளை, கிணற்றிலே விழவே இல்லையோ என்று கூட சந்தேகம் வந்தது.

அதுவும் கூடக் கனவுதானோ?

ஆனால் எதிரே, அந்த நரேந்திரனின் முகம் அப்படியே இருக்கிறதே! அவளையே பார்த்தபடி!

இமை தட்டக்கூட மறந்துபோய், பிரமிப்புடன் அவள் பார்த்துக்கொண்டு இருந்த போதே அவன் முகம் மாறியது. அதில் அதுவரை இருந்த உணர்ச்சியற்ற தன்மை மறைந்து மலர்ந்து மெல்லச் சிரித்தது.

ஆனால் வரிசைப் பற்கள் பளிச்சிட அவன் முறுவலித்தது அவளது பிரமிப்பை மேலும் அதிகப் படுத்திவிட, அவள் இன்னமும் பேந்தப் பேந்த விழித்தாளே தவிர இயல்புக்குத் திரும்பினாளில்லை.

சிரிப்புடனே, கையை நீட்டி அவள் முகத்தின் முன் நரேந்திரன் சொடக்குப் போடவும், கனவு கலைந்தாற்போலச் சட்டெனச் சிலிர்த்தாள் நிகிலா.

''அப்பா! நல்ல வேளை! உட்கார்ந்தபடியே தூங்கி விட்டாயோ என நினைத்துவிட்டேன்!'' என்றான் அவன் கேலியாக.

என்ன இலகுவாகப் பேசுகிறான்! ஒரு வேளை எல்லாம் விளையாட்டா? அவன் கேட்டது வெறும் வேடிக்கைக் காகவா?

அவளைப் பார்த்தால், எல்லோருக்கும் அவ்வளவு ஏளனமாக இருக்கிறதா?

உடன் பிறந்தவளானால் உழைப்பைச் சுரண்டுகிறாள். வருங்காலக் கணவன் என்று நிர்ணயிக்கப்பட்டவனானால் உதறிவிட்டு வேறு ஒருத்தியை மணக்கிறான். தற்கொலை செய்து கொள்ளலாம் என்று கிணற்றில் விழுந்தால், அதையும் ஒருவன் கெடுத்துக் காப்பாற்றிவிட்டு கல்யாணம் செய்து கொள்கிறாயா என்று கேட்டுக் கிண்டல் அடிக்கிறான்!

ஏன்? ஏன், அவளை மட்டும் எல்லோரும் ஒரு துரும்பு மாதிரித் தூக்கிப் போட்டு விளையாடுகிறார்கள்?

தன்னிரக்கம், ஒரு பேரலையாய் எழுந்து அவளைத் தூக்கிப் போட்டு உருட்டியது. உதடு துடிக்க, நாசி விடைத்து கண்களில் அருவி இறங்க உடலும் நடுங்கலாயிற்று.

கேலி பேசியவன் முகம் மாறி, ''என்னம்மா என்ன? நிகிலா என்ன ஆயிற்று?'' என்று கவலையுடன் கேட்டது அவள் காதிலேயே விழவில்லை! விம்மலும் விசும்பலுமாக அவளை உலுக்கி எடுத்தன.

ஆனால் அதற்குள்ளாக அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

'ரியாக்ஷன்!'

ஒரு பதறைத் தேடிப் பூவிளைக்கே வருமாறு, அவளது இடத்தில் என்ன நேர்ந்ததோ? ஆனால் இங்கே வந்து சேர்ந்ததிலிருந்து நடந்தவைகளே, இந்தச் சிறு பெண்ணுக்குப்

போதும்! அவற்றின் தாக்கமே அவளைப் போட்டு உலுக்குகிறது!

அருகே சென்று நிகிலாவின் கையை தொட்டுப் பார்த்தால் சில்லென்றிருந்தது.

"நிகிலா, இதோ பார்" என்று அவள் கையைத் தட்டிக் கொடுத்துக் கூப்பிட்டுப் பார்த்தான்.

ஆனால் திடமாக நிற்க இயலாதவளாக அவள் இங்குமங்குமாய்த் தடுமாறினாளே தவிர, அவனது அழைப்பு அவள் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை.

அவளது தோளைப் பற்றி, "கட்டுப்படுத்திக் கொள், நிகிலா...நிகிலா" என்று அவன் அவளை லேசாகக் குலுக்கவும், புரியாத திகைப்புடன் அவனை அண்ணாந்து பார்த்தாள் அவள்.

ஆதரவற்ற கொடியாய் அவள் அலை பாய்ந்தது, நரேந்திரன் மனதைத் தாக்கியதோ, அல்லது ஆதாரம் எதுவுமில்லாமல், அலை பாய்ந்தவளுக்கு பற்றிக் கொள்ள உறுதியான ஆலமரமாக அவன் தோன்றினானோ, அவன் மார்பில் முகம் புதைத்து விம்மி அழுது கொண்டிருந்தாள் அவள். அவளை மார்போடு அணைத்து ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தான் அவன்!

சில வினாடிகளோ சில நிமிஷங்களோ இந்த நிலை நீடித்தது.

பின்னர் அவளை மெல்ல விலக்கி நிறுத்தி பான்ட் பாக்கெட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவளது, கண்ணீரைத் துடைத்து விட்டான் அவன்.

ஒருவாறு சுதாரித்துக்கொண்டு, அடங்கிக் கொண்டிருந்த விசிப்பின் நடுவே "சா...சாரி!" என்றாள் அவள்.

''எதற்கு? நீ அழுததற்கு, என்னிடம் 'சாரி'யா?'' என்று இலகுவாகப் பேசினான் நரேந்திரன்.

''அ...அதல்ல'' என்றவளின் பார்வை, குறிப்பாக அவனது சட்டையில் கசங்கி கண்ணீரின் ஈரமும் பட்டிருந்த இடத்தை நோக்கியது.

குனிந்து பார்த்துவிட்டு ''ஓ! இதுவா? பரவாயில்லை. இனிமேல் இப்படிக் காட்டன் சட்டை அணியாமல் டெரீன் இழை கலந்ததாக அணிந்து கொண்டால் எதிர்காலத்தில் இது போன்ற சமயங்களில் நீ 'சாரி' சொல்ல வேண்டியிராது. ஏனென்றால் அது கசங்காதல்லவா?'' என்று சிரித்தான் அவன்.

அவள் விழி விரித்து நோக்கவும் ''ஏன்? அதற்குள் மறந்து விட்டதா? இப்போதுதானே மணந்து கொள்ளும்படிக் கேட்டேன்!'' என்று கேட்டான்.

விரிந்த விழி மேலும் அகல, ''நீங்கள் நிஜமாகவா கேட்டீர்கள்?'' என்றாள் நிகிலா, அப்போதும் நம்ப மாட்டாத வளாக.

''என்ன கேள்வி இது நிகிலா?'' என்று பதிலுக்குக் கேட்டான் அவன். ''இது போன்ற விஷயங்களில் கூட யாரும் வேடிக்கை செய்வார்களா என்ன? நான் கேட்டது நிஜம். உண்மை!! சத்தியம்!!!'' என்று அழுத்தமான குரலில் கூறினான் அவன்.

யோசனையோடு நோக்கிவிட்டு ''ஏன்?'' என்று கேட்டாள் நிகிலா. ''இதில் உங்களுக்கு என்ன லாபம்?''

இலகுத் தன்மை அடியோடு மறைந்துவிட ''லாபம் இருக்கிறது'' என்றான் அவன். ''ரொம்பப் பெரிய லாபம்!

ரொம்ப காலமாகத் தீர்க்கப் படாமல் இருந்த பழங்கணக்கு ஒன்றைத் தீர்ப்பதற்கு. நல்லதொரு வாய்ப்புக் கிடைக்கும்!''

''அது...அந்தப் பழங்கணக்கு அது சுகேசனோடா?''

''ஆமாம்'' என்ற சுருக்கமான பதிலில் அவள் அவனை வெறித்து நோக்கினாள்.

''என்ன பார்வை?'' என்று புருவம் உயர்த்தினான் அவன்.

தலையசைத்து ''சுகேசனோடு உங்கள் வழக்கு...அது என்னவாக இருக்கும் என்று யோசித்தேன்.'' என்று உரைத்தாள் நிகிலா.

லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு ''இப்போதுதான் உனக்குக் கண் திறந்தாகி விட்டதே! நீயே கண்டு பிடியேன்'' என்றான் அவன்.

உள்ளூரக் கலக்கத்துடன் ''ஏதேனும் பெண் விஷயமா?'' என்று வினவினாள் அவள்.

எதிரில் இருப்பவன் ஒரு பெண் காரணமாக சுகேசனுடன் மோதினான் என்று நினைக்கவே நிகிலாவுக்கு அருவருப்பாக இருந்தது. இல்லை என்று மறுக்க மாட்டானா என்று அவள், அவன் முகத்தைப் பார்த்போது ''நூறு மார்க்!'' என்றான் அவன் எகத்தாளமாக.

அவன் வாயாலேயே ஒத்துக் கொண்டு விட்டானே!

வெறுப்போ, அருவ்வருப்போ, வருத்தமோ உள்ளே மனம் சோர்வுற்றதை ஒதுக்கி நிகிலா யோசிக்க முயன்றாள்.

இந்த சுகேசன் என்ன மாதிரி மனிதன்?

இந்த... இந்த மனிதனிடமிருந்து ஒரு பெண்ணைப் பறித்திருக்கிறான்! அடுத்து நிகிலாவிடம் மணந்து கொள்வ தாகக் கூறி நட்டாற்றில் விட்டுவிட்டான்! இப்போது பணத்துக்காக இன்னொருத்தியைக் கல்யாணமே செய்து கொண்டு விட்டான்!

அவளுக்காவது அவன் உண்மையோடு இருப்பானா?

அந்த முதல்பெண் - அவள்தான் முதல் என்று என்ன நிச்சயம்? அதேபோல இந்த மூன்று பேரும்தான் என்றும்தான் என்ன நிச்சயம்?

மூன்றோ, முப்பதோ? அவன் எப்படியோ போகட்டும்!

அவனிடம் தன்... தன் காதலியைப் பறி கொடுத்த இவனது திட்டம் கொஞ்சமேனும் பலிக்குமா?

நிகிலாவுக்குச் சந்தேகமாக இருந்தது.

தன் சந்தேகத்தை அவனிடம் தெரிவித்தாள். "எனக்கு உங்கள் திட்டம் ஒன்றுமே புரியவில்லை! சுகேசனுக்குப் பணம்தான், பிரதானம். பணமே பெரிதென்று ஏற்கனவே என்னைக் கைவிட்டாயிற்று? அவரைக் கவர்ந்திழுப்பது பணம் மட்டும்தான். அந்தக் கவர்ச்சி கொஞ்சமும் இல்லாத அதனால் அவர் கைவிட்ட என்னை நீங்கள் மணப்பது, ஏதோ குப்பைத் தொட்டியில் பொறுக்கி எடுத்து வைத்துக் கொள்வது மாதிரிதானே? இதில் என்ன பெரிதாய் அவர் ஏங்கிவிடப் போகிறார்? எனக்குத் தோன்றவில்லை!" என்று விளக்கம் கேட்டாள்.

ஏதோ பேசத் தொடங்கிவிட்டு அதை நிறுத்திக் கொண்டு அவன் தன் வலக்கரத்தை ஏந்தினாற்போல நீட்டினான். "இங்கே வா!"

தயக்கத்துடன் "எ...எ...ன்ன?" என்று கேட்டாள் அவள்.

முறுவலித்து, "பயமா? பயப்பட வேண்டாம். நான் தப்பு செய்ய மாட்டேன். எந்த அளவுக்கு உனக்குப் பலம் திரும்பியிருக்கிறதோ என்றுதான்..." என்றான் அவன்.

இந்த அளவு உறுதியோடு ஆனால், இயல்பாக 'தப்பு செய்ய மாட்டேன்!' என்று யாரால் சொல்ல முடியும்? இவனுக்கு நரேந்திரன் என்று பெயரிட்டவர்கள்; சரியான பெயராகத்தான் வைத்திருக்கிறார்கள்!

ஆனால் விசித்திரமான விதத்தில் அவன் தன்னிடம் தவறாக நடக்கக்கூடும் என்று அவள் நினைக்கவே இல்லை! சும்மா ஓர் ஆடவனைத் தொடத் தயங்கியதுதான்.

எண்ணமிட்டவாறே கையை அவன் கையில் வைத்தாள் அவள்.

அவனது பெரிய கையினுள், அவள் கரம் காணாமலே போனதை வெறித்துப் பார்த்தவளுக்கு உள்ளூரத்திடம் ஏற்படுவதையும் உணர முடிந்தது.

இந்த நரேந்திரனிடம் ஏதோ ஒரு சக்தி உள் பலம் இருக்கிறது!

கை பிடித்து அவளை அழைத்துச் சென்று அவன் நிறுத்தியது பெரிய நிலைக்கண்ணாடி முன். கண்ணாடியில் அவளது உருவத்தைக் காட்டி "நன்றாகப் பார்த்துக் கொள். ஒரு வித அலங்காரமும் இல்லாமலே இப்படி இருக்கிறாய். தண்ணீரில் விழுந்து சிகிச்சை செய்து அப்படியே விட்ட அடிபட்ட தோற்றம் இது. இதுவே இப்படி என்றால்... என் மனைவி. என்ற பதவிக்குரிய அணிமணிகளோடு இருக்கும்போது ஜொலிக்க மாட்டாயா? 'விட்டுவிட்டோமே'

என்று ஏங்காமல் அவனால் எப்படி இருக்க முடியும்? உன்னை நெருங்கக் கூட முயற்சிப்பான். அப்போது நீ உறுதியோடு இருக்க வேண்டும்'' என்றான் அவன்.

அவள் அழகி என்று அவன் சொன்னதில் உள்ளம் குளிர்ந்த போதும் கண்ணாடியில் தெரிந்த நலுங்கிய தோற்றம் உறுத்த அவரசமாய்க் கைகளால் கூந்தலைப் படிய வைத்தும் ஆடையை இழுத்துவிட்டும் தோற்றத்தைச் சீர் செய்ய முயன்றவளை அவன் பேச்சின் பின்பகுதி திகைக்க வைத்தது.

பதவிக்குரிய அலங்காரமா? இவன் மனைவி என்பதே பெரும் பதவி என்றால் இவன் யார்? தான் யார் என்றே தெரியாமல் அவன் மணம் புரியக் கேட்பதும் அவன் யார் என்றே தெரிந்து கொள்ளாமல் திருமணத்தின் விளைவு பற்றி இவன் யோசிப்பதும் எல்லாமே விசித்திரம்தான்!

சொந்த விஷயங்களைப் பேசிய போதும் அவனோடு உட்கார்ந்து உணவருந்திய போதும்கூட அவன் யாரென்று அறிந்தாக வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவே இல்லையே! அன்றைய நிகழ்ச்சிகளின் பாதிப்பினாலா?

முழு அன்னியன்! இவன் பெயர் தவிர அவனைப் பற்றி என்ன தெரியும் அவளுக்கு?

''என்னம்மா, என்ன சொல்கிறாய்? இப்போது திருமணத் துக்குச் சம்மதம்தானா?''

விழி தூக்கி அனைக் கூர்ந்து நோக்கி ''உங்கள் பெயர் நரேந்திரன் என்று தெரியும். ஆனால் நீங்கள் யார்?'' என்று அவள் சற்று கிண்டலாகக் கேட்கவும் ஒரு கணம் திகைத்தான் அவன்.

உடனேயே ''சாரிம்மா உனக்குத் தெரியும் . என்று நினைத்து அதிகப்படி எதிர்பார்ப்புதான். வெரி சாரி'' என்று

மன்னிப்புக் கேட்டவன் தடையின்றித் தன் விவரம் சொன்னான். "நான் இந்த மாவட்டக் கலெக்டர்" என்றான் அமைதியாக.

## 9

**க**லெக்டர்!

அந்த வார்த்தையைக் கேட்டதும் நிகிலாவுக்குத் தாயார் ஒரு முறை கூறியது சட்டென நினைவு வந்தது.

'நம் சின்னக் கண்மணி அழகுக்குக் கலெக்டரோ, கவர்னரோ தேடி வந்து கட்டிக் கொள்வான் பார்' என்று தந்தை சொன்னாராம். அதற்கேற்றபடி அவளை அருமையாக வளர்க்க வேண்டும் என்றும் கூறுவாராம்!

கலெக்டர் மாப்பிள்ளை என்பது சரிதான். ஆனால் அந்த மாப்பிள்ளை வந்த விதத்தை எண்ணும்போது தன்னை மீறிக் கசந்த சிரிப்பு ஒன்று அவள் முகத்தில் தோன்றியது.

அவளையே கவனித்துக் கொண்டிருந்திருப்பான் போலும்!

"நீ சிரிப்பது பற்றிச் சந்தோஷம்தான். ஆனால் இந்தச் சிரிப்பு கலப்படமற்ற மகிழ்ச்சியில் வந்தது போலத் தோன்ற வில்லையே?" என்று கேட்டான் நரேந்திரன்.

மறைப்பது அவசியம் என்று தோன்றாததால் தான் நினைத்ததை நிகிலா சொல்ல அவன் முறுவலித்தான்.

'பரவாயில்லேயே! அந்தக் கால வரகவிகள் போல, மாமனார் அப்போதே விஷயத்தைத் தெரிந்திருந்ததோடு, மனைவியிடம் சொல்லியும் வைத்திருக்கிறார். இதில் எனக்கு

இன்னொரு நல்ல செய்தி. திருமணத்துக்குச் சம்மதம் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறாய்!'' என்றவன் சாப்பாட்டு மேஜைப் பக்கம் சென்றான்.

இப்போது அவளுக்கு மெய்யான சிரிப்பே வந்தது.

கையில் இனிப்பு இருந்த கிண்ணத்தை எடுத்தவன், ''எதற்கெடுத் தாலும் 'என்ன, என்ன' என்று கணவன் கேட்டுக் கொண்டே இருப்பதில் எனக்கு உடன்பாடு கிடையாதுதான். ஆனால் இது கொஞ்சம் நல்ல மாதிரிச் சிரிப்பாகத் தோன்றுவதால், 'என்ன' வென்று கேட்கலாம்தானே?'' என்று வினவினான்.

முறுவலித்தவாறே, 'பெண்டாட்டிக்குப் பரிமாறிப் பழக்கம் போலும்' என்று எண்ணியதை அவள் கூறவும், தானும் சிரித்தபடி ''விவரம் தெரியாதபோது கற்பனை செய்தது பற்றிப் பரவாயில்லை. ஆனால் வருங்காலத்தில் இதை எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது என்று மட்டும் இப்போதே எச்சரித்து விடுகிறேன்'' என்றுரைத்துவிட்டு கிண்ணத்தை நீட்டினான். ''இது அடுத்த இனிப்புக்கான நேரம், வெறும் பரிமாறலாக எண்ணிக் கொள்ள வேண்டாம்!''

இப்போது இனிப்பை எடுக்கத் தயக்கம் தோன்றவில்லை அவளுக்கு.

''மிஸ்டர் சுந்தரம்!'' என்று சற்று உரக்க அழைத்தான் நரேந்திரன்.

''இதோ, சார்'' என்ற குரலை அடுத்து சுந்தரமும் உள்ளே வந்தார்.

கிண்ணத்தை நீட்டி ''இனிப்பு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

வியப்பை உடனே மறைத்துக் கொண்டு அவர் ஒன்றை எடுத்ததும், "நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன், சுந்தரம். நிகிலாவை ஒருவாறு சம்மதிக்க வைத்து விட்டேன். பதிவுத் திருமணம். அதன் பின் முறைப்படியான ஆனால் ஆரவாரமற்ற திருமணம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திருமணம் நடக்க வேண்டும். மணம் முடியுமட்டும், எல்லாம் நமக்குள்ளேயே இருக்க வேண்டும்! வெளியே தெரிந்தால் கண்டவர்களும் பெரிய பெரிய பரிசுகளுடன் வரக்கூடும். மறுக்க முடியாத கட்டாயத்தில் மாட்டிக் கொள்ள நேரும். திருமணம் சம்பந்தமான எல்லாப் பொறுப்புகளும் உங்களுடையது சரிதானா? அல்லது ஏதாவது, சந்தேகம் இருக்கிறதா?" என்று தன் செய்தியைச் சொல்லிவிட்டு மேலே கேள்வியும் கேட்டான்.

அவளுக்கே, உள்ளூரப் படபடப்புதான் என்றாலும் நிகிலாவுக்கு அந்த சுந்தரத்தை பார்க்கப் பாவமாக இருந்தது.

கையிலிருந்த இனிப்பு, கை நழுவிக் கீழே விழ, அது தரையில் விழுமுன் தாவிப் பிடித்து ஒருவாறு அப்போதுதான் நிமிர்ந்திருந்தார் அவர். "சா...ர்?"

கண்ணில் குறுஞ்சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவன் லேசாக நகைத்தான். "உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது சுந்தரம். கலெக்டரின் கல்யாண ஏற்பாடுகளைக் கவனிப்பது, பி.ஏ.யின் வேலையே அல்லதான். ஆனால் என்ன செய்வது? நானே ரிஜிஸ்டர் ஆஃபீஸில் போய் நின்றால் உடனே விஷயம் ஊர் முழுவதும் பரவிவிடும். அதனால்தான் உங்களிடம் இந்த உதவி கேட்கிறேன். சட்டப் பிரச்சினை எதுவும் வராது எனும்போது செய்ய முடியும்தானே?" என்று கேட்டான்.

''என்ன சார் இப்படிச் சொல்லிட்டீர்கள்? நீங்கள் ஒன்று கேட்டு நான் செய்யாதிருப்பேனா? திடும் என்று சொல்லவும்... வந்து கொஞ்சமும் எதிர்பாராததால்... கொஞ்சம்...''

அவரைத் தவிக்கவிட்டது போதும் என்று எண்ணியவன் போல சுந்தரத்தின் பேச்சில் குறுக்கிட்டுப் பேசினான் நரேந்திரன். ''உங்களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும் என்பது எனக்கும் புரிகிறது மிஸ்டர் சுந்தரம். வேறு யாரும் என்றால் நானும் இது பற்றி மூச்சுக்கூட விட்டிருக்கமாட்டேன். ஆனால் என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்தத் தைரியத்தில்தான்.''

இப்போது பேச்சில் குறுக்கிட்டது சுந்தரம். ''ஐயோ உங்களைத் தெரியாதா, சார். இந்த அலுவலகத்தில் இத்தனை வருஷ சர்வீசில் உங்களை மாதிரி ஒருத்தரை நான் பார்த்ததே இல்லையே சார்'' என்றவர் நிகிலாவைப் பார்த்து ''சார் மாதிரி ஆயிரத்தில் ஒருவர் இருந்தால் நம் நாடே முன்னுக்கு வந்துவிடும். அந்த அளவு நேர்மையும் நிர்வாகத் திறமையும் உள்ளவர். அவரைக் கல்யாணம் செய்து கொள்ள நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இவ்வளவு சிறந்த மனிதர் தனியாகவே இருந்து விடுவாரோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்லவேளை உங்களைப் பார்த்த வேளை, அவர் மனது மாறியிருக்கிறது. சந்தோஷம். உங்களுக்கு என் வாழ்த்துக்கள்!'' என்று வாழ்த்தினார்.

''சுந்தரம் வேண்டுமானால் இந்த இனிப்பு அவ்வளவையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக இவ்வளவு உச்சி குளிர வைக்க வேண்டியது இல்லை. இந்தாருங்கள்'' என்று கிண்ணத்தை அவரிடம் கொடுத்தான் நரேந்திரன்.

''இந்த ஸ்வீட்டுக்காக நான் சொல்லவில்லை என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும் சார். ஆனாலும் உங்கள் சொல்லை மீறக் கூடாது என்று இதையும் வாங்கிக் கொள்கிறேன். அத்தோடு என் பேரனுக்கும் இந்த இனிப்பு வகை மிகவும் பிடிக்கும்'' என்று சுந்தரம் கூற இரு ஆண்களுமே நகைத்தனர்.

அதிகாரி அவருக்குக் கீழ் வேலை செய்கிறவர் என்பது போலன்றி இருவரும் பழகியவிதம் நிகிலாவுக்கு இதமாக இருக்கவே அவள் முகத்திலும் முறுவல் மலர்ந்தது.

அவளை நோக்கி, ''என் பேரனுக்கு இந்த ஸ்வீட் பிடிக்கும் என்று சாருக்கும் தெரியும். அதனாலேயே இப்படி வெளியூர் செல்லும்போதெல்லாம் இது ஒரு பெட்டி வாங்கி என்னிடம் தந்து விடுவார். வெளியூர் போனால் தாத்தா, தனக்காக இதை வாங்கி வருவதாக என் பேரன் நினைத்துக் கொண்டு இருக்கிறான்'' என்று விவரம் சொன்னார் சுந்தரம். ''சும்மா சொல்லவில்லை. அம்மா இது போலச் சின்னச் சின்ன விஷயங்களையும் மறக்காமல் செய்கிற கணவர் கிடைப்பது உங்களுக்குப் போன ஜன்மத்துப் புண்ணியம்தான்!''

''அதை விடுங்கள் சுந்தரம். இப்போது நம் விஷயத்துக்கு வாருங்கள். நிகிலா பெயர், வயது எல்லாம் சர்ட்டிஃபிகேட்டு களில் பார்த்தீர்கள் அல்லவா? என் விவரம் உங்களுக்குத் தெரியும். நாளைக்கே பதிவுத்திருமண வேலைகளைத் தொடங்கி விடுங்கள். பதிவுத் திருமணத்தன்றே, தாலிகட்டுவதும் நடக்க வேண்டும். இது தொடர்பான வேலைகளுக்கு என்னிடம் தனி அனுமதி கேட்டுச் செல்லுங்கள். திருமணம் முடியுமட்டும் வேறு யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம்!'' என்றான் நரேந்திரன்.

''சரி சார்'' என்ற சுந்தரம், நரேந்திரனின் முகத்தைப் பார்த்துவிட்டு ''வேறே என்ன பிரச்சினை சார்?'' என்று வினவினார்.

நிகிலா பார்த்த அளவில், நரேந்திரனின் முகம் சாதாரணமாக இருப்பது போலத்தான் தோன்றியது.

சுந்தரம் ஏன் பிரச்சினை பற்றி விசாரிக்கிறார் என்று அவள் யோசிக்கையில், நரேந்திரன் ''பிரச்சினை என்று இல்லை. சுந்தரம் சார். ஆனால்...'' என்று நிகிலாவிடம் திரும்பினான். ''தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நிகிலா அது ஒரு நடை முறைச் சிக்கல் அவ்வளவே!'' என்று விட்டு மீண்டும் சுந்தரத்திடம் ''திருமணம் வரை நிகிலாவை எங்கே தங்க வைப்பது? பங்களாவில் உறவென்று வேறு யாரும் இல்லாதபோது அங்கே வைத்துக் கொள்வது பின்னர் அவ்ளை யாரேனும் தவறாகப் பேச ஏதுவாகும். அது அவளுக்கு நியாயம் ஆகாது. என்ன செய்யலாம் சொல்லுங் கள்?'' என்று கேட்டான்.

சுந்தரம் சரியாகத்தான் கேட்டிருக்கிறார்! அது என்ன மாதிரி முகபாவம் என்று கவனித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று மனதிற்குள் குறித்து வைத்துக் கொண்டாள் நிகிலா.

அது அவனுக்கு ஏதும் உதவி செய்வதற்காகவா? அல்லது அவன் தீவிரமாக யோசிக்கும் போது தான் வேறு எதையாவது கேட்டு வாங்கிக் கட்டிக் கொள்ளக் கூடாதே என்ற எண்ணத்தினாலா? என்று அவளுக்கே ஒரு சந்தேகம் உண்டாக நரேந்திரனை மணந்து அவனோடு வாழ்வது பற்றி தன் மனம் யோசிக்கத் தொடங்கிவிட்டதை நிகிலா ஒரு திடுக்கிடலுடன் உணர்ந்தாள்.

கூடவே, இந்தப் பிரச்சினைக்கு என்ன முடிவு என்றும் யோசிக்கத் தொடங்கியவள் கையில் வெறும் இருநூறு ரூபாயை வைத்துக்கொண்டு இதற்கு ஒரு விடையையும் தன்னால் கண்டு பிடிக்க முடியாது என்று முடிவுக்கு வந்தாள்.

சுந்தரம் கண்ட தீர்வும் நரேந்திரனுக்கு ஒப்புதலாக இல்லை.

ஏனெனில், அவர் நிகிலாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார்.

மறுப்பாய் தலையசைத்து ''இல்லை சுந்தரம் சார். முதலில் உங்கள் வீட்டிலேயே பல கேள்விகள் எழும். பதில் சொன்னாலும் தப்பு, சொல்லாவிட்டாலும் தகராறு; ஏதாவது விடுதி மாதிரி இடம் என்றாலும் யார் என்ன என்று விவரம் கொடுத்தாக வேண்டும். அதைவிட.. பேயிங் கெஸ்ட். மாதிரி நிகிலாவை வைத்துக் கொள்ளக் கூடிய இடம் நல்ல நம்பிக்கையானதாக ஏதாவது உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்?'' என்று கேட்டான் நரேந்திரன்.

சற்று யோசித்துவிட்டு சுந்தரம் சொன்னார். ''சார் எனக்காய்த் தெரிந்த இடம் என்று ஒன்றும் சரியாக இல்லை. ஆனால் உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஆறு மாதம் முன்பு, நீங்கள் இங்கே வந்த புதிதில் இனத் தகராறு ஒன்றில் ஒரு குடும்பத்தை உயிரோடு கொளுத்த முயன்றதை தடுத்து வெட்டுப் பட்டுச் செத்துப் போன வாத்தியாருடைய மனைவிக்கு நிதி திரட்டி., ஒரு வீடு வாங்கிக் கொடுத்தீர்களே, அந்தம்மா அந்த வீட்டில் இந்த மாதிரி பேயிங் கெஸ்ட்டாகக் கொஞ்சப் பேரை வைத்துத்தான் குடும்பத்தை நடத்துகிறார் கள். அவர்களிடம் கேட்டுப் பார்க்கலாமா? உங்களுக்காக அந்தம்மாள் உயிரைக் கூடக் கொடுப்பார்கள்! வாயைத் திறக்கக் கூடாது என்றால் ஒரு வார்த்தை வெளியே வராது!''

நரேந்திரனுக்கு இந்த யோசனை மிகவும் பிடித்துப் போனது.

அதன்படி பெருமாள் புரத்துக்கு எதிர்ப்புறமாக ரயில் தடம் தாண்டி பாளையங்கோட்டை ரயில் நிலையத்தை ஒட்டியே அந்த வீடு இருந்தது. எனவே காலையில் ரயில் ஏறிச் சென்று மாலையில் திரும்பிப் பாதுகாப்பாக கூட்டினுள் அடைந்து கொள்ள விரும்பிய தனிப் பெண்களுக்கு காந்திமதி அம்மாளின் வீடு மிகவும் வசதியாக இருந்தது. ஆனால் அந்தப் பெண்மணி சற்று அமைதி விரும்பி என்பதால் அது மாதிரிப் பட்டவர்களுக்குத்தான் இடம் கொடுப்பாள்.

நிகிலாவுக்கும் காந்திமதிக்கும் ஒருவரையொருவர் பிடித்துப் போனது.

சுந்தரம்தான், நிகிலாவைக் கூட்டிப் போய் காந்தி மதியிடம் விட்டது.

'இப்படி' என்று அவர் கோடு காட்டிவிட்டுப் போய்விட நிகிலாவுக்கு அங்கே ராஜ மரியாதைதான்.

அப்படியெல்லாம் செய்தால் மற்றவர்களுக்குச் சந்தேகம் வரும் என்று நிகிலா அதை நிறுத்திவிட்டபோதும் காந்தி மதியின் பேச்சிலிருந்து நரேந்திரனைப் பற்றி அவள் பேசுவதைத் தடுக்க முடியவில்லை.

அதைத் தடுக்க அவள் அதிகம் முயற்சிக்கவுமில்லை.

ஒரு பழி வாங்குதலை அடிப்படையாகக் கொண்டு நடக்க இருக்கும் திருமணம்தான். திருமணத்துக்குப் பிறகு, அவர்களது அக வாழ்வு பற்றி இருவருக்குமே பெரிதாக எந்த விதமான எதிர்பார்ப்பும் கிடையாதுதான். ஆயினும் கணவன் என்று ஆகப் போகும் நரேந்திரனைப் பற்றி அறிந்து கொள்ள நிகிலாவுக்கு விருப்பமாகத்தான் இருந்தது. தேவை என்றும்

நினைத்தாள். ஏனெனில் எப்படியும் இருவருக்குமாக ஒரு வாழ்க்கை அமையத்தான் போகிறது. அதை எதிரும் புதிருமாக இருந்து நடத்துவதைவிட ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு குறைந்த பட்சம் நண்பர்களாகவேனும் நடத்துவது மேல் அல்லவா?

காந்திமதி நரேந்திரனுக்குப் பயங்கரமாகப் புகழாரம் சூட்டினாள். அவன் மிகவும் நல்லவனாம். நேர்மையோடு இரக்க குணமும் உள்ளவனாம்! அது மட்டும் இல்லாமல் உலகத்தையும் புரிந்து வைத்திருக்கிறவனாம்.

காந்திமதிக்கு நிதி திரட்டித் தர ஏற்பாடு செய்துவிட்டு அவன் சென்றுவிட்டிருந்தால் அவள் கைக்கு ஒன்றும் வந்திராதாம்! கணவர் வேலை செய்து கொண்டிருந்த தனியார் பள்ளியிலும் அவருக்காகக் கொடுக்க வேண்டிய தொகை யைக் கொடுக்காமல் இழுத்தடித்தார்களாம்.

ஆனால் நரேந்திரன் தொடர்ந்து விசாரித்து எல்லாப் பணமும் அவள் கைக்கு வந்து சேர ஏற்பாடு செய்ததோடு இந்த வீட்டை வாங்குவதிலும் யாரும் அவளை ஏமாற்றி விடாமல் கவனிக்கும்படி, ஆள் அனுப்பி வைத்தானாம். அதனால் கொஞ்சம் பணம் மிஞ்சி 'டெபாசிட்டும்' பண்ண முடிந்ததாம்! அதனால் அவளும் இரண்டு பிள்ளைகளும் மானத்தோடும் வாழ முடிகிறதாம்!

இது மாதிரி ஏழை பாழைகளுக்கு அவன் எத்தனையோ செய்திருக்கிறானாம்!

ஏழை பாழைகளுக்குச் செய்கிறவனை, இன்னமும் அதே இடத்திலேயே விட்டு வைத்திருக்கிறார்கள் என்பது நிகிலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''தம்பி, யாருக்கும் நோகாமல் செய்வார்கள்மா!'' என்றாள் காந்திமதி. ''இப்படித்தான் ஒரு குடிசைப் பகுதியை அரசியல் செல்வாக்குள்ள ஒருவர் சுவாதீனப்படுத்த எண்ணி அங்கே இருந்தவர்களை அடித்து மிரட்டி விரட்டிக் கொண்டிருந்தார். கலெக்டர் தம்பி, அந்த அரசியல்வாதியைக் கூப்பிட்டுப் பேசி அந்தாளுக்கு வேறே இடம் கொடுத்து சமாளித்துவிட்டார். ஆக இரண்டு பேருக்கும் நல்லவர் ஆகிவிட்டார்!'' என்று காந்திமதி கூறியபோது பரவாயில் லையே என்று எண்ணினாள் நிகிலா.

ஆனால் சுகேசனை நோகடிக்கவென்று திருமணமே செய்கிறானே!

அந்த அளவுக்கா சுகேசன் மேல் வெறுப்பு?

அல்லது அந்த அளவுக்கு அந்தப் பெண் மீது பிரியம் வைத்திருந்தான் அல்லது இன்னமும் வைத்திருக்கிறான் என்று அர்த்தமா?

பெருமூச்சுடன், நிகிலா பேச்சை மாற்றினாள்.

## 10

திருமணம் நரேந்திரன் திட்டமிட்டபடியே, வெகு எளிமையாக நடைபெற்றது. அன்னியர் என்று சுந்தரத் தினுடைய குடும்பமும், காந்திமதியும் வந்திருந்தனர். தவிர்க்க முடியாத சில அதிகாரிகளும், காவலர்களும்.

உணவு முடிந்து, மணமக்களை வாழ்த்திவிட்டு எல்லோரும் விடை பெற்றுச் சென்றபின் நரேந்திரன் நிகிலாவைத் தன் இல்லத்துக்கு அழைத்துச் சென்றான்.

சுந்தரத்தின் ஏற்பாட்டின்படி, ஆலம் சுற்றிக் கொட்டி, அவர் மனைவி நிகிலாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.

அந்தப் பெண்மணி விடைபெற்றபோது நரேந்திரன் அவளிடம் ஒரு சிறிய நகைப் பெட்டியைக் கொடுத்தான்.

''மூத்த சகோதரியாக ஆலம் எடுத்தீர்கள். இது அதற்கான பரிசு!'' என்று கூற சுந்தரத்துடைய மனைவி மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் விடை பெற்றுச் சென்றபின் புதுத் தம்பதியரிடையே சிறு அமைதி நிலவியது.

''சற்று நேரம் ஓய்வு எடுக்கிறாயா? அப்புறமாக வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம். அல்லது சற்று நேரம் டீவி பார்க்கலாமா?'' என்று நரேந்திரன் வினவ, ''உங்கள் விருப்பம்'' என்றாள் அவள்.

சட்டெனக் கண்கள் பளிச்சிட, ''பரவாயில்லையே. ரொம்பவும் கீழ்ப்படியும் மனைவி கிடைத்திருக்கிறாளே! நான் அதிருஷ்டக்காரன்தான் போலும்!'' என்றான் நரேந்திரன்.

விழி உயர்த்திப் பார்த்துவிட்டு அவனுக்குப் பதிலாக ''பாவம் ஒரு நாளாவது சந்தோஷமாக இருக்கட்டுமே என்று நினைத்தேன்!'' என்று சிறு நகையுடன் கூற அவன் வாய்விட்டு நகைத்தான்!

''இப்படித்தான் இருக்க வேண்டும் நிகிலா. பல தினங்களாகவே முக்கியமாக இன்று நீ பேசாமலே இருக்கவும் இந்தத் திருமணம் உனக்கு ரொம்பவுமே பிடிக்கவில்லையோ என்று கொஞ்சம் கவலையாக இருந்தது'' என்றான் நரேந்திரன்.

"நான்.... நான் யோசித்துக் கொண்டிருந்தேன்." என்றாள் அவள் மெல்லிய குரலில்.

"எதைப் பற்றி என்று என்னால் ஊகிக்க முடிகிறது. ஆனால் நீ எதைப்பற்றியும் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை நிகிலா. ஒரு பொது நோக்கத்துக்காகத் திருமணம் செய்திருக்கிறோம். தொழில் முறை ஒப்பந்தம் மாதிரி இதுவும் ஒரு கூட்டு முயற்சி அவ்வளவுதான். அதற்கு மேல் இப்போதைக்கு நான் உன்னிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டேன். முதலில் நம் முயற்சி வெற்றி பெறட்டும். அதன்பிறகு... நம் மனநிலைகள் எப்படியெப்படி மாறக்கூடும் என்று இப்போது யாரால் சொல்ல முடியும்? அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்ன?" என்று அவன் கேட்டபோது நிகிலாவுக்கு மனதில் பெரும் பாரம் இறங்கியது போலிருந்தது.

ஏனெனில் உள்ளூர அவளுக்கு ஒரு தவிப்பு இருந்து, அவளைக் கலக்கிக் கொண்டேதான் இருந்தது. என்னதான் பழி வாங்குவதுதான் முக்கியம் என்று நரேந்திரன் சொன்ன போதும் சூழ இருந்தோர் அவனைப் பற்றி நல்லவிதமாகவே பேசியபோதும் உள்ளூர அவள் மனம் கலங்கிக் கொண்டேதான் இருந்தது.

சூடு பட்ட பூனையைப் போல கணபதி, சுகேசன் என்று இரு மட்டமான ஆண்களை அடுத்தடுத்து சந்தித்துவிட்ட அவளுக்கு திடும் திடுமென்று நரேந்திரன் மீதும் நம்பிக்கை மறைந்து கொண்டேதான் இருந்தது.

சுந்தரத்தையும் காந்திமதியையும் தன்னைப் பற்றி உயர்வாகப் பேசுமாறு அவனே தூண்டி விட்டிருக்கலாம் அல்லவா?

எப்படிப்பட்டவனோ, என்னவோ என்று கலக்கம்தான். உள்ளே கலங்கிக் கொண்டு எப்படி கலகலப்பாகப் பேசுவது?

பார்த்தால் அவனுக்கும் எதோ கலக்கம் இருந்திருக் கிறதோ! பாவம் அவனுக்கும்தான் அவளைப் பற்றி என்ன தெரியும்?

ஆனால் அவனது இலகுப் பேச்சு அவளுக்கு ஒரு மாதிரி சுமையிறங்கிய மாதிரி இருக்கவே கேலிப் பேச்சு அவள் வாயிலும் எளிதாக வந்தது!

தொடர்ந்து பழி வாங்கிய பிறகான வாழ்க்கையைப் பற்றி நரேந்திரன் பேசியதும் அவளுக்கு ஆறுதலாகவே இருந்தது.

எனவே "சரி" என்று தலையாட்டினாள்.

நரேந்திரன் தொடர்ந்து பேசினான்.

"இப்போது நீ கலெக்டர் மனைவி நிகிலா. இந்த நிலையில் சில முக்கியமான விதிகளை நீ கடைபிடிக்க வேண்டியிருக்கும். முதலாவதாக யாரோடும் மனம் விட்டுப் பேசிப் பழகக் கூடாது..."

"இது கலெக்டர் மனைவிகளுக்கு உரிய பொது விதியா, எனக்கு மட்டும்தானா?"

"நம் சொந்த வாழ்வு பற்றிய விவரங்கள் வெளியே பரவிவிடக்கூடாது என்பதால் உனக்கு, இது மிக முக்கியம். ஆனால் பொதுவாகவும், சில விவரங்களை வெளியே விட்டுவிடக் கூடாது என்பதால் எல்லோருமே மற்றவர் களிடம் அளவோடு பழகிக் கொள்வது நலம்."

"என்ன விவரங்கள்?"

"முக்கியமானது கலெக்டரின் நடமாட்டங்களைப் பற்றிய விவரம். நான் எப்போது எங்கே போகிறேன் என்று

யாரிடமும் சொல்லக்கூடாது! அடுத்து யாருக்கும் வாக்குக் கொடுக்கக்கூடாது. எதிலும் கையெழுத்துப் போடுமுன் கவனம் வேண்டும். அத்தோடு இது உனக்கு மட்டும். மற்றவர் முன்னிலையில் என்னிடம் பிரியமாகப் பேசிப் பழக வேண்டும்!''

''அது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. மேல் நாடுகளில் போல நம் நாட்டில் வெளிப்படையாகப் பிரியத்தைக் காட்டுவதில்லை அல்லவா? அதனால் சிரமமாக இராது!'' என்று அவள் பெரும்போக்காய்க் கூற அவன் உதட்டைப் பிதுக்க இருவருக்குமே முறுவல் அரும்பியது.

''இன்னொன்று கலெக்டர் மனைவி என்பதால் பல்வேறு சமூக நலப்பணிகளில் நீ முன்னின்று செயலாற்ற வேண்டியிருக்கும். அவற்றில் பணமும் புழங்கக்கூடும். அதனால் ஏதேனும் செக்குகளில் கையெழுத்திட வேண்டி யிருந்தால் பலமுறை சரிபார்த்துச் செய்ய வேண்டும்!''

''சரி''

ஒருவாறு புது வாழ்வு நிகிலாவுக்குப் பழக்கப்படத் தொடங்கியது.

வீட்டைப் பொறுத்தவரையில் நிகிலா செய்வதற்கு அனேகமாக ஒன்றும் இல்லை எனலாம்.

சமையலுக்குத் தங்கம்மா என்று ஒருத்தி இருந்தாள். வயது ஐம்பதுக்கு மேல். நரேந்திரன் சப் கலெக்டராக வேலை பார்த்த போது எல்லாம் இழந்து அனாதையாக நின்றவளை வேலைக்குச் சேர்த்தானாம். அதிலிருந்து அவன் வீட்டுச் சமையல் பொறுப்பு, அவளதாயிற்று. விருந்துச் சமையலுக்குச் சென்று பழகியவள் என்பதால் சுவையாகவே சமைத்தாள்.

சுவையறிந்து பிரியமாகவும் செய்தாள். எனவே, நிகிலா அந்தப் பக்கம் போகத் தேவை இருக்கவில்லை.

தங்கம்மாவின் உதவிக்கு வீட்டு சுத்தத்துக்கு தோட்டம் கவனிப்பதற்கு எல்லாவற்றுக்குமே ஆட்கள் இருந்தனர். எல்லா வேலைகளுமே 'கிரீஸ்' தடவிய எந்திரம் போலச் சிக்கலில்லாமல் சீராக நடந்தன.

அது பற்றிக் குறிப்பிட்டு ''நான் என்னவோ பெண்கள் இல்லாத வீடு அலங்கோலமாகக் கிடக்கும். நாம் போய்த்தான் சீர் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பார்த்தால் உங்கள் வீட்டுக்கு ஒரு பெண் அவசியமே இல்லை போல இருக்கிறதே!'' என்றாள் நிகிலா.

''அப்படியல்ல'' என்று மறுத்தான் நரேந்திரன். ''ஹோட்டலில் தங்கும்போதும் எல்லாம் சீராகத்தான் நடக்கும். ஆனால் அது வீடாகுமா? இந்தக் கட்டிடம் வீடாகி இருப்பதும் இப்போதுதான். நீ வந்த பிறகுதான்'' என்று அவன் கூறியது மனதுக்கு இதமாக இருந்தபோதும் அது முழுமையான உண்மை என்று அவளுக்குத் தோன்றவில்லை.

எல்லோரையும் நல்லவிதமாக உணர வைப்பது நரேந்திரனின் தனித்தன்மை. அதுபோல் அவளையும் நடத்துகிறான் அவ்வளவே!

'அங்கே பார்த்தேன். அது நன்றாயிருந்தது. இங்கே பார்த்தேன் இது அழகாயிருந்தது' என்று இந்தப் பத்து நாட்களில் அவளுக்கு எத்தனையோ வாங்கிவந்து கொடுத்திருக்கிறானே! அதெல்லாமே அப்படி அவளை நினைத்து வாங்குவதா? இல்லையே! ஒன்று இன்றைய நிலையில் அவளால் வாங்கிக் கொள்ள இயலாது. ஆனால் கலெக்டர் மனைவி என்று அவளது நிலைக்குத்

தேவைப்படும் என்பது அடுத்தது. இப்படி ஒரொரு பரிசுகளைக் கொணர்ந்து கொடுக்கும்போது தன்னை ஒருவன் நினைக்கிறான் வாங்கி வருகிறான் என்று அவள் சந்தோஷப் படட்டும் என்பதும்தானே?

ஆனால் அவனுக்குத் தெரியாதது ஒன்று உண்டு. இப்படி 'ஒன் வே டிராஃபிக்' மாதிரி அவன் வாங்கித்தர த்தரப் பெற்றுக் கொள்வது அவளுக்குச் சங்கடமாக இருக்கக்கூடும் என்று அவன் எண்ணிப் பார்த்திருக்க மாட்டான் என்பது அவள் யூகம்!

இந்தப் பரிசுகளுக்குப் பதிலாக அவள் அவனுக்குச் செய்யக் கூடியது, செய்ய வேண்டியது என்ன என்பதையும் நிகிலா யோசித்து வைத்திருந்தாள். எந்த நோக்கத்துக்காக அவன் அவளை மணந்தானோ அந்தக் கணக்குத் தீர்த்தலை நல்ல விதமாக நிறைவேற்ற முழு மனதோடு உதவுவதுதான் அது!

சுகேசன் இப்போது எப்படி இருப்பான்?

அவனும் புதிதாகத் திருமணம் செய்தவன்தான். மணமாகி ஐம்பது நாட்கள் கூட ஆகவில்லை! புது மனைவியுடன் தேனிலவுக்கு எங்கேனும் போனானோ, என்னவோ? ஆனால் அதுவும் சந்தேகம்தான். ஏனெனில் அப்படியெல்லாம் செலவழிப்பது அவனுக்குப் பிடிக்காது!

நரேந்திரன் ஏற்கனவே சொல்லியிருந்தது போலவே அவர்களுக்குத் திருமணமான விவரம் தெரிந்ததும், நிறையப் பேர் கலெக்டருடைய புது மனைவியைப் பார்க்க வந்தார்கள்.

அவள் எப்படியிருக்கிறாள் என்று வெறுமனே அறிவதற்காகப் பலர் வந்த போதும் பல்வேறு காரியங்களுக்காகவும் சிலர் நிகிலாவைச் சந்தித்தனர்.

பெண்கள் முன்னேற்ற அமைப்புகள், வாழ்விழந்தோர் மறுவாழ்வுச் சங்கம், சிறுவர் வேலை ஒழிப்பு, மத இணைப்பு சங்கம்... என்று பல சமூக முன்னேற்ற இயக்கங்களில் அவளைத் தலைவியாக ஏற்க முன்வந்தனர்.

அன்றும் அப்படித்தான். முதியோர் நலம் பேணும் அமைப்பில் பங்கெடுக்குமாறு அழைக்க வந்தார்கள்.

இதெல்லாம் எனக்கு, ஒன்றுமே தெரியாதே என்று சொல்ல வாயெடுத்துவிட்டு அதை மாற்றி யோசித்துச் சொல்வதாகப் பதில் கூறி அனுப்பினாள்.

வரவர ஒவ்வொரு நாளும் நரேந்திரனின் வரவை நிகிலா ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

மாலைக் காஃபி அருந்தியபடி வேலையின்போது நடந்த ஏதாவது சுவாரசியமான நடப்புகளை அவன் சொல்லக் கேட்பதும் அவளைச் சந்திக்க வந்தவர்களைப் பற்றி அவள் சொல்ல அவன் அபிப்பிராயம் கூறுவதுமாகப் பொழுது கழியும் விதம் அவளுக்கு உற்சாகத்தை அளித்தது.

யார்யாரிடம் எப்படிப் பழக வேண்டும் என்றும், நரேந்திரன் கற்பிப்பான்.

அன்று பதில் சொல்லி அனுப்பியதைப் பற்றி அவள் கூற "பலே!" என்றான் நரேந்திரன். "ரொம்பவுமே தேர்ந்து விட்டாய் மீண்டும் வந்து கேட்டால்... கட்டாயம் கேட்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நேரம் இல்லை என்று முடித்துவிடு. இப்படி முதியோர் நலம் காக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு பெரிய அளவில் வரி ஏய்ப்புச் செய்வதாக தகவல் வந்திருக்கிறது. மனைவியர் பெயரில் நடத்துகிறார்களாம். உன்னையும் இழுத்துப் போட்டுவிட்டால் வரி அதிகாரிகள்

துருவிப் பார்க்காமல் விட்டுவிடுவார்கள் என்பது அவர்கள் கணிப்பு!'' என்று எச்சரித்தான் அவன்.

''கொடுக்க வேண்டிய வரியை ஒழுங்காகக் கட்டினால் இவர்கள் என் முதியோர் நலம் காக்க வேண்டும்? அரசாங்கமே அதைச் செய்யுமே!'' என்று ஆத்திரமாகக் கேட்ட மனைவியைப் பார்த்து முறுவலித்தான் நரேந்திரன்.

''ஏன்? செய்யாதா?'' என்று கேட்டவளிடம் ''கைக்கும் வாய்க்கும் இடையிலேயே எவ்வளவோ தூரம் இருப்பதாகச் சொல்லுவார்கள். இதெல்லாம் திட்டம் போட்டு சட்டமாகி அதன் பலன் முதியோரைப் போய்ச் சேருவதற்குள் எத்தனை தலைமுறை, முதியோராகி மடிந்தேவிடப் போகிறார்களோ? அதற்கிடையே இதுபோல சங்கங்கள், ஆனால் உண்மையாக உழைப்பவை தேவைதான்'' என்று எடுத்துச் சொன்னான் அவன்.

''இதற்கு வா, அதற்கு வா என்று பலரும் கூப்பிடுகிறார்களே! இவற்றுள் எதில் நான் சேரட்டும்? அல்லது ஒன்றுமே வேண்டாம் என்று இருந்து விடட்டுமா?'' என்று கணவனிடம் வினவினாள் நிகிலா.

''அப்புறம் போரடித்துவிடும். அதைவிட....'' என்ற நரேந்திரன் மனைவிக்காகத் தேர்ந்தெடுத்தது சிறுவர் நலம் பேணுதல்.

சிறுவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தல், அவர்களுக்கு இலவச மருத்துவ முகாம் அமைத்தல், சிறுவர்களை வேலை வாங்குவதை ஒழித்தல் என்று சிறுவர் நலம் பேணுதலின் பல பிரிவுகளுமே அவளைக் கவர்ந்து விட அந்த அமைப்பில் அவள் மிகுந்த ஈடுபாட்டுடன் வேலை செய்யலானாள்.

''பாருங்களேன். ஏழு, எட்டு வயதுப் பிள்ளைகள் எலலாம் பீடி சுற்றிச் சம்பாதிக்கிறார்களாம். சங்கத்திலிருந்து போய்க் கேட்டால் 'பின்னே இந்தப் பிள்ளைகளுக்கு சோறு நீயா போடுவே' என்று கேட்கிறார்களாம். நான் போய்க் கேட்கப் போகிறேன். 'நீ பிள்ளையைப் படிக்க வை. உன் பிள்ளைக்கு அரசாங்கமே சோறு போடும்' என்று சொல்லப் போகிறேன். அப்போது என்ன பதில் கூற முடியும் என்று பார்க்கிறேன்'' என்று ஒரு நாள் நிகிலா பொறுமினாள்.

''வேறென்ன? பள்ளியில் சேர்க்க முடியாத, இந்தக் கைப்பிள்ளைக்கு நீயா சோறு போடுவே என்று கேட்பார்கள்! ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல'' என்று நரேந்திரன் கூறவும், அவள் திகைத்தாள்.

''வேறென்ன?''

''மூக்கு முட்டக் குடித்துவிட்டு, மூலையில் உருண்டு கிடக்கும் கணவனுக்குச் சாராயத்துக்குத் துட்டு வேண் டாமா?''

அதிர்ந்து போய், ''என்ன நரேன், நீங்கள்? பெற்றவர்களே பிள்ளைகளுக்கு இந்த அநியாயம் செய்வார்களா? நம்ப முடியவில்லையே! கழுத்தைப் பிடித்து அவனை வெளியே தள்ளி சம்பாதித்து வரச் சொல்லாமல்... ஊகூம் நான் நம்ப மாட்டேன்!'' என்றாள் அவள்.

''வேலைக்குப் போய்ச் சம்பாதித்து வந்த போதும் வெளி உலகமே தெரியாமல் இருந்திருக்கிறாய் என்று தெரிகிறது! கள்ளிப்பால் புகட்டிப் பெண் குழந்தையைக் கொல்வதை யாவது படித்திருப்பாய் என்று நினைக்கிறேன். தடுக்கப் போனால் இந்தப் பெண் வளர்ந்த பிறகு நீயா கட்டிக் கொடுப்பாய் என்று கேட்பார்கள். இரண்டாம் திருமணம்

செய்திருப்பான் கணவன். சக்களத்தியோடு சேர்ந்து புருஷனுக்கு ஊட்டுவாளே தவிர, போலீசில் புகார் கொடுக்க மாட்டாள். நாமாகப் போய்க் கேட்டாலும் என் வாழ்வு ஒரேயடியாகப் போய்விடும் என்பாள். இப்படி எத்தனை நடக்கிறது, தெரியுமா?''

''இதையெல்லாம் சட்டத்தால் தடுக்க முடியாதா?''

''சட்டத்தின் பார்வைக்குள் வருவதை ஏதோ செய்யலாம். ஆனால் ஒவ்வொரு குற்றமாகத் தேடி அலைவது சிரமம். இதை விட அடிப்படையைக் களைய முயற்சிப்பது மேல். எல்லோருக்கும் கல்வி அறிவு கொடுத்தாலே அது நடந்துவிடும். இன்றையச் சிறுவர் சிறுமியர் எல்லோரையும் படிக்க வைத்துவிட்டால் அடுத்த தலைமுறை கல்வி அறிவுள்ளதாகிவிடும் இந்த மாதிரிக் குற்றங்களும் அருகி விடும்!''

''அப்படியானால் என்னைச் சிறுவர் கல்வியிலேயே முழுக் கவனம் செலுத்தச் சொல்லுகிறீர்களா?'' என்று நிகிலா கேட்டபோது நரேந்திரன் யோசனையோடு வானத்தைப் பார்த்தான்.

வெளியே தோட்டத்தில் அமர்ந்து மாலைக் காஃப்பி அருந்திக் கொண்டிருந்தார்கள்.

''செய்யலாம். ஆனால் சிறுவர்களை வேலை செய்ய வைப்பதைத் தடுத்தால்தான் அவர்களால் படிக்க முடியும். சிறுவர்களை வேலை வாங்குவது. சட்டப்படி குற்றமும் கூட. அப்படி வேலை வாங்குகிறவர்கள், சில பேரைப் பிடித்துத் தண்டனை கொடுத்துவிட்டால் மற்றவர்களும் பயப்படு வார்கள். நீ அந்த விவரம் சேகரியேன். சிறுவர் வேலை என்பது வெறும் பீடி சுற்றுவது மட்டும் அல்ல. சுமை தூக்குவது,

வயலுக்கு உரம் அடிப்பது, ஆடு, மாடு மேய்க்க அனுப்புவது. ஏன் வீட்டு வேலைக்குப் பயன்படுத்துவது கூடக் குற்றம்தான். அதிலும் கிராமப் புறங்களில் உள்ள பிள்ளைகளை முன்னேற்றுவதுதான் மிகவும் அவசரமும் அவசியமுமான பணி என்பது என் கருத்து. அங்கேதான் கொஞ்சம் கூட உறுத்தலே இல்லாமல் சிறு பிள்ளைகளை வேலை செய்ய வைக்கிறார்கள்.''

நல்ல பணிதான்! ஆனால் நரேந்திரன் அவளிடம் சொல்லாமல் விட்டதும் ஏதோ கொஞ்சம் இருப்பது போல் ஓர் உறுத்தல் நிகிலாவுக்கு ஏற்பட்டது. ஆனால் அவனாகச் சொல்லாததைத் தானாகக் கேட்க மனமின்றிப் பேசாமலே இருந்து விட்டாள்!

## 11

அன்று நரேந்திரன் வெளியே ஒரு டின்னருக்குப் போக வேண்டியிருந்தது.

அது போன்ற தருணங்களில் நிகிலா, தனக்காகத் தனியாக எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்லி விடுவாள். வேலை எதுவும் இல்லாமல் சும்மா இருக்கும் நேரத்தில் தங்கம்மா வந்து உட்கார்ந்து ஏதாவது பேசிக் கொண்டிருப் பாள்.

அன்று வேடிக்கையாகச் சொன்னாள். ''முன்னே எல்லாம் அய்யா சும்மா சும்மா 'காம்ப்பு காம்ப்பு' என்று வாராவாரம் போய்க்கொண்டு இருப்பாங்க. இப்பத்தான் கலியாணம் ஆன புதிசு இல்ல? ஒரு மாசமா வீட்டோடவே இருக்கிறாங்க. உங்களை விட்டுவிட்டுப் போக மனசில்ல'' என்று சொல்லி வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

அவளுக்காக வெட்கப்படுவது போல நடித்த போதும் நிகிலாவின் மனம் சற்றுச் சோர்ந்து போனது.

கணவன் என்பவன் காதலனாக இருப்பது இயற்கை. ஆனால் நிகிலாவுக்கு அந்த அதிருஷ்டம் கிடைக்க வில்லையே. இந்த நரேந்திரன் மட்டும் அவளைக் காதலித்து மணந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருக்...ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்த நிகிலா, திடுக்கிட்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

அவளது காதல் மணவாளனாக இருந்திருக்க வேண்டிய வன் சுகேசன். நரேந்திரனுக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம்?

அன்றிரவு வீடு திரும்பிய நரேந்திரன் நிகிலா தோட்டத்தில் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டதும், நேரே அவளிடம் சென்றான். ''என்னம்மா பனியில் நின்று கொண்டு இருக்கிறாயே குளிரவில்லை?'' என்று கனிந்த குரலில் கரிசனமாக வினவவும் அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

''வா. உள்ளே போகலாம். சாப்பிட்டாயா?'' என்றெல்லாம் வேறு கேட்கவும், அன்று மாலையில் அவளுக்கு ஏற்பட்ட சோர்வு கிட்டத்தட்ட மறைந்தே போயிற்று எனலாம்.

திருமணம் ஆனபின் முதல் காம்ப் பற்றி மறுநாள் காலையில் நரேந்திரன் நிகிலாவிடம் தெரிவித்தான். ''சற்று கிராமப்புறம்தான். அங்கே, ஒரு பணக்கார மிராசுதார் சட்டவிரோதமாக நிறையச் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. ஏழைகளுக்குக் கிணறு வெட்ட என்று அரசாங்கம் கொடுத்த பணத்தை பினாமியில் வாங்கு

கிறார்களாம். அதேபோல் ஏகப்பட்ட நிலமும் பினாமியில் தானாம். வேலை செய்கிறவர்கள் ஏதாவது குரல் எழுப்பினால் சவுக்கடியாம். இன்னும் எவ்வளவோ சொல்கிறார்கள். நிறையப் புகார் வந்திருக்கிறது. விசாரிக்கப் போகவேண்டும். அநேகமாக மூன்று நாள் முகாமிட வேண்டியிருக்கும்!'' என்று அவன் கூறவும் நிகிலாவின் முகம் வாடியது.

மூன்று தினங்கள் தன்னந்தனியே மொட்டுமொட்டென்று உட்கார்ந்திருக்க வேண்டும்! மாலையானால் நரேந்திரன் வரமாட்டான். வந்து சுவாரசியமான கதைகள் சொல்ல மாட்டான். என்ன அநியாயம்?

ஆனால் ''என்ன நிகிலா, முதல் 'காம்ப்'. அதுவும் கிராமத்துப் பக்கம். தாமிரபரணி ஆறு வேறு. நீ துள்ளிக் குதித்துக் கொண்டு கிளம்புவாய் என்று பார்த்தால் 'உம்'மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக் கிறாயே?'' என்று நரேந்திரன் தொடர்ந்து கேட்கவும், நிகிலாவின் காதுக்குள் குயில்களும், கிளிகளும் போட்டி போட்டுக்கொண்டு கூவின.

''நானும் வருகிறேனா?'' என்று முகம் மலர்ந்தாள். ''எப்போது கிளம்ப வேண்டும்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

முறுவலித்து ''சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஒருவாரம் பத்து நாட்கள் ஆகக் கூடும். அதன் பின் கிளம்பி விடலாம்'' என்றான் நரேந்திரன்.

பின்னர் சிறு யோசனையுடன் அவளை நோக்கி, ''என் மனைவியைப் பார்த்து எல்லோரும் அசந்து போக வேண்டும். அதற்குச் சரியாக எல்லாம் எடுத்து வைத்துக் கொள்!'' என்றான்.

கன்னங்களைத் தொட்டுப் பார்த்துவிட்டு "வேண்டுமானால், பார்லருக்குப் போய் ஃபேஷியல் செய்து கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள் அவள்.

ஒரு விரல் நீட்டி அவள் கன்னத்தை வருடினான் நரேந்திரன். அவள் பிரமித்து அமர்ந்திருக்கையிலேயே "ஊகூம், உன் முகத்துக்கு அதெல்லாம் அவசியம் இல்லை. உடைகள் மட்டும், சற்றுப் பளிச்சென்று இருக்குமாறு எடுத்து வைத்துக்கொள். அது போதும்" என்று முடித்தான்.

இப்போதும் அவன் முழுவதும் சொல்லாதது போன்ற உணர்ச்சிதான் நிகிலாவுக்கு. சொல்ல வேண்டியது என்றால் அவனே சொல்லியிருக்க மாட்டானா என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டாள்.

சில தினங்கள் முடிந்தன.

'காம்ப்' செல்ல வேண்டிய நாள் முடிவு செய்யப்பட்டது.

கொண்டு செல்ல வேண்டிய துணிமணிகள் கூட எடுத்து வைத்தாயிற்று.

நிகிலாவின் ஆடைகளை நரேந்திரன் தேர்வு செய்தான். "எல்லாமே உனக்கு அழகாத்தான் இருக்கும். ஆனால் இவைகளை அணியும்போது நம் திருமணம் வேறுமாதிரித் திருமணம் என்பதைச் சிரமப்பட்டு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது."

கேலியாகத்தான் சொன்னான் என்றாலும் அவளுக்கு முகம் சிவந்து போயிற்று. உள்ளூர ஏற்பட்ட துள்ளலை அவன் அறியாமல் மறைக்க அவள் அரும்பாடுபட வேண்டியிருந்தது. எப்படியும் அழகைப் பற்றிப் பாராட்டினால் அதுவும் வேண்டியவர் பாராட்டினால் ஆனந்தமாகத்தான் இருக்கும் போலும்!

அன்று காலையில் நரேந்திரன் அலுவலகத்துக்கு கிளம்பிச் சென்று சற்று நேரம் ஆன பிறகு பணியாள் வந்து "உங்களைப் பார்க்க ஒரு அம்மா வந்திருக்காங்கம்மா. நிறைய்ய நகையெல்லாம் போட்டுகிட்டு பளபளன்னு பட்டுச் சேலை கட்டிக்கிட்டு ரொம்பப் பணக்காரங்க மாதிரி இருக்கும்மா." என்று விவரம் தெரிவித்தான்.

கலெக்டர் மனைவியாகி விட்ட பிறகு பணக்காரர்களைச் சந்திப்பது ஒன்றும் நிகிலாவுக்கு அரிதான விஷயம் அல்ல. ஆனால் மெய்யான பணக்காரர்கள் யாருமே அந்தப் பணத்தை இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டி நிகிலா பார்க்கவில்லை. காதில் ஒரு தோடுதான் இருக்கும். ஆனால் அது வைரமாக இருக்கும். கழுத்தில் கிடக்கும் ஒற்றை ஆரம் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியதாக இருக்கும். ஆடையும் தோற்றத்தை எடுத்துக் காட்டுவதாக இருக்குமே தவிரப் பணத்தைப் பறை சாற்றுவதாக இராது. பல சமயங்களில் அவர்களைப் பற்றி நரேந்திரன் விவரம் சொல்லும்போது இவ்வளவு பணக்காரர்களா? என்று நிகிலாவுக்கு பிரமிப்பாக இருக்கும்!

இப்போது வந்திருக்கும் இந்த நகை காய்ச்சி மரம் யாராக இருக்கக்கூடும்?

சுவரில் அலங்காரமாக மாட்டுதற்கென்று செய்து கொண்டிருந்த பூவேலையை மடித்து வைத்தபடி "அது யார்?" என்று அமைதியாகக் கேட்டாள் நிகிலா.

யார் என்று அறியாமல் கண்டவரையும் உள்ளே அனுமதிப்பது இல்லை. அதற்காக முன்னறையில் அரசாங்க அலுவலரே ஒருவர் இருப்பார்.

"ஆமாம்மா பெரிய பண்ணையார் துரைசாமி அய்யாவோட மகளாம். அப்படீன்னு சொன்னாளே போதும்

என்று சொல்லச் சொன்னாங்க. அந்த அம்மா!'' என்று மரியாதையாகக் கையைக் கட்டிக் கொண்டு சொன்னான் பணியாள்.

இன்னமும் மாரிக்கு அந்தப் பெண்ணின் நகைகளைப் பார்த்த பிரமிப்பு அடங்கவில்லை என்று ஊகித்து தன்னுள் நகைத்துக் கொண்டாள் நிகிலா.

''ஏதாவது ஜூஸ் கொடு'' என்று மாரியை அனுப்பிவிட்டு எழுந்து கண்ணாடியில் தன்னைச் சரி பார்த்துக்கொண்டாள்.

மணிவேலைப்பாடு செய்த யோக்கும் குட்டைக் கையும் உள்ள சுரிதார் செட் அழகான மரகதப் பச்சை அதே வண்ணப் பொட்டு. வாட்ச் ஒரு கையில், அடுத்ததில் சற்றே அகலமான பட்டை வளையல், கழுத்தில் தாலிகோத்த சங்கிலி போதும்!

செருப்பை மாட்டிக்கொண்டு நிகிலா முன்னறைக்குச் சென்றாள்.

ஓரளவு எதிர்பார்த்த போதும் அந்தப் பெண் அணிந்திருந்த நகைகளின் பளபளப்பில் நிகிலாவுக்கே கண் கூசிவிட்டது!

நல்ல வேளையாகத் தலையில் சந்திரப் பிரபை, சூரியப் பிரபை, நெற்றிச் சுட்டி, ராக்கொடி என்று வைக்கவில்லை, மற்றபடி காதுகளில், பெரிய தோடு, தொங்கட்டான், கழுத்தில் நெக்லஸ், மூன்று பட்டை நாலு பட்டை, காசுமாலை உட்படப் பல்வேறு நீளங்களில் ஏழெட்டு வகைச் சங்கிலிகள் விரல்களில் பல மோதிரங்கள், முழங்கைவரை வளையல்கள்!

உட்கார்ந்திருந்த தினுசில் சேலையின் அகலமான தங்க ஜரிகைக் கரைக்குக் கீழே நீட்டிக் கொண்டிருந்த காலில் அகலமான பட்டைக் கொலுசும் பார்வையில் பட்டது. அதாவது அப்படிப் படுமாறு வைக்கப்பட்டிருந்தது!

அதாவது வந்திருப்பவள் வேண்டுமென்றே தன் செல்வச் செழுமையைக் காட்டுகிறாள்! ஏன்?

மனதில் யோசனை ஓடுவதை வெளிக்காட்டாமல் லேசான முறுவலுடன் சென்று ''வாருங்கள்'' என்று ஜன்னல்புற சோஃபாவில் அமர்ந்தாள் நிகிலா.

நரேந்திரன் கற்றுக் கொடுத்தது, அது. ஜன்னல் பக்கமாக அமர்ந்தால் நம் முகத்தில் வெளிச்சம் அதிகம் விழாது. அதனால் நம் முகத்திலிருந்து எதையும் அடுத்தவர் ஊகிக்க முடியாது. அதே சமயம், ஜன்னலின் எதிரே உட்கார்ந் திருக்கும் மற்றவரின் முக பாவங்கள் நமக்குத் தெளிவாகத் தெரியும்...

எதிரே அமர்ந்திருந்தவளும் நிகிலாவை ஏற இறங்க நோக்கிப் பார்வையால் அலசிக் கொண்டுதான் இருந்தாள் வெளிப்படையாக!

கிராமப்புற வெகுளித்தனமா? அல்லது திமிரா?

இரண்டாவதுதான் என்பது அவளது பேச்சில் வெளிப்பட்டது.

வேண்டிய அளவு பார்த்து முடித்துவிட்டு ''நான் கலெக்டர் பெண்டாட்டியைப் பாக்க வந்தேன். போய் அவுகளை வரச்சொல்லு'' என்றாள் உத்திரவிடுவது போல்.

புன்னகை மாறாமல் ''நான்தான் கலெக்டர் மனைவி'' என்றாள், நிகிலா அமைதியாக.

''என்னது?! நீயா? சும்மா உருவி விட்டாப்புல ஒரு நகையும் இல்லாம வரிச்ச கட்டை மாதிரிக்கு இருந்துகிட்டு மெய்யாலும் நீயேதான் கலெக்டர் பெண்டாட்டியா?...'' என்று கேட்டு சந்தேகம் தெளிந்து கொண்டாள்.

''நானேதான்!'' என்று சிறு அழுத்தத்துடன் தெரிவித்துவிட்டு ''நீங்கள் யார்?'' என்று நிகிலா விசாரித்தாள்.

''நாந்தான் சொல்லி அனுப்பிச்சேனே!'' என்றாள் வந்திருந்தவள். ''நான்தான் செல்வி! எங்க அப்பாருதான் பெரிய பண்ணை துரைசாமி அய்யா! ஊருலே முக்காவாசி எங்களுதுதான். சும்மா வரிக்காக கவருமெண்டு கடனை வாங்குறதுக்காக பத்திரம் அடுத்தவுங்க பேரிலே இருக்கும். ஆனா எல்...லாமே எங்களுதுதான்.'' என்றாள் பெருமையாக.

ஓர் அரசாங்க அதிகாரியிடமே, இப்படிப் பெருமை யடிக்க எவ்வளவு அகம்பாவம் இருக்க வேண்டும்?

''பத்திரத்தை வைத்துக்கொண்டு நிலமே தன்னதுதான் என்று யாராவது தகராறு செய்தால்? அப்போது என்ன செய்வீர்கள்?'' என்று கிண்டினாள் நிகிலா.

''காலைத் திரிச்சுப்பிட மாட்டோமா?'' என்றாள் வந்தவள், அலட்சியமாக. ''அதுக்கெல்லாம் அப்பாரு பக்காவா ஏதாச்சும் செஞ்சி வெச்சிருப்பாங்க. வெத்துப் பத்திரத்துல கையெழுத்து வாங்கி வச்சுக்கிடறது. பாதிப் பேருக்கு அவங்க பேருல பத்திரம் இருக்கதே தெரியாதில்ல? இந்த எச்சிக்கலை நாயிங்களை ரொம்ப நம்பவும் படாதுங்க. சாக்கிரதையா இருந்தால்தான் பணம் சேரும். பணம் இருந்தாத் தானே வாள்க்கை? கலெக்டரையே மடக்கிப் பிடிச்சிக் கட்டியிருக்கீக. உங்களுக்குத் தெரியாதா?''

சுருசுருவென்றதைக் காட்டிக் கொள்ளாமல் ''இப்போது எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டாள் நிகிலா.

''உங்ககிட்டே தனியாகப் பேசணுமே. உள்ளார ரூம்புக்குப் போயிரலமா?'' என்று எழுந்தாள் வந்தவள்.

சற்றும் அசையாமலே "இல்லை, இங்கேயே பேசுங்கள். நான் கூப்பிடாமல் வேறு யாரும் உள்ளே வர மாட்டார்கள்." என்றாள் நிகிலா.

"எங்க வூட்டுக்காரரு மாதிரி இலக்கோணமாத்தான் பேசுறீக" என்று மீண்டும் அமர்ந்து கொண்டாள், அவள் அந்தச் செல்வி.

பாவம் அவன் படித்தவன் போலிருக்கிறது என்று எண்ணியவள், செல்வியை நோக்கி "என்ன விஷயமாக வந்தீர்கள் என்று இன்னமும் நீங்கள் சொல்லவே இல்லையே?" என்று கேட்டாள்.

"யாரும் வர மாட்டாங்கன்னு நீங்க சொன்னாச் சரிதான். ஏன்னாக்க மத்த நாயிங்களுக்குத் தெரிய வேண்டாமின்னு பார்த்தேன்..." என்றபடி செல்வி மீண்டும் உட்கார்ந்தாள்.

வசதியாக அமர்ந்து கொண்டு கையில் வைத்திருந்த பையிலிருந்த ஒரு நகைப் பெட்டியை எடுத்துத் திறந்து காட்டினாள்.

கனமான சங்கிலி ஒன்று உள்ளே அமர்ந்திருந்தது.

சங்கிலியைக் கையில் எடுத்து "இந்தாங்க உங்களுக்குத்தான். சீதேவியைக் கொணாந்திருக்கேன். முதல்லே கழுத்திலே போட்டுக்கிடுங்க" என்று நீட்டினாள்.

இந்த மாதிரி நேரடி அணுகல் நிகிலாவுக்கு இதுதான் முதல் தடவை.

சற்று யோசித்துவிட்டு நகையை அதன் பெட்டியுள் போடுமாறு சைகை செய்தாள். "எதற்காக எனக்கு இதை நீங்கள் வாங்கித் தர வேண்டும்?" என்று நிதானமாகக் கேட்டாள்.

"ஆங்... எதுக்காகவான்னு கேட்டா... கலியாணம் விசாரிக்கச் சும்மாவா வருவாக? பெரிய வூட்டு அடையாள மின்னு ஏதாச்சும் தர வேண்டாமா? அதுக்காவத்தான்! இன்னும் நீங்க மட்டும் நல்லா நடந்துக்கிட்டீங்கன்னு வையுங்க.... நான் போட்டிருக்கிற மாதிரி அல்லாம் உங்களுக்கும் கிடைக்கும்..!"

இதுதான் இவள் நகை காய்ச்சி மரமாக வந்திருப்பதன் ரகசியமா? இதுபோல வேண்டும் என்றே நிகிலாவின் ஆசையைத் தூண்டிவிடுவதற்காக!

ஆனால் இவள் அணிந்திருக்கும் விதம் அருவருப்பூட்டுகிறதே தவிர ஆசையைத் தூண்டவில்லை என்று எடுத்துச் சொன்னாலும் கூட இவளுக்குப் புரியுமா?

இன்னும் இவள் வந்த விஷயத்தைச் சொல்லவில்லை!

"அப்படியானால் கல்யாணம் விசாரிக்கத்தான் இப்போது வந்தீர்களா? அப்படியானால்....." என்று விடை கொடுக்க எழுவது போல் அசைந்து கொடுத்தாள் நிகிலா.

பத்து பவுன் சங்கிலியைக் கலெக்டர் மனைவி சும்மாவே அமுக்கிக்கொள்ள முயற்சிக்கிறாள் என்று எண்ணிவிட்டாள் செல்வி. ஆனால் சங்கிலி நம் கையில்தான் இருக்கிறது என்ற ஆறுதலுடன் "அதுக்காவ மட்டும் வீட்டைப் போட்டுட்டுக் கிளம்பி வருவாகளா? அங்கிட்டு நம்மூருக்கு என்னமோ விசாரிக்க உங்கூட்டுக்காரவுக வாராகளாமில்லே? ஊரிலே நாலு பொறாமை பிடிச்ச நாயிக ஏதாச்சும் எளுதிப் போடத்தான் செய்யும். அதுக்கெல்லாம் மெனக்கெட்டுப் போவாகளா? வேண்டாமின்னு கலெக்டரைக் கட்டிப் போடுங்க. அட கட்டில்ல கிடந்து 'வா'ன்னா எந்தப் புருஷன் விட்டுப் போட்டுப் போவான்? புடிச்சு இங்கிட்டே

வச்சிக்கிடுங்க. அதுக்குத்தானே இந்தச் செயினு'' என்று விஷயத்தைக் கக்கினாள், செல்வி.

விஷத்தை என்று தோன்றியது நிகிலாவுக்கு.

இப்போது என்ன செய்ய வேண்டும்?

தன்னால் கணவனுக்குக் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது என்பது அவளுக்கு.

உரத்த பேச்சுக் கூடாது. 'எடுத்துப் போ' என்று விரட்டினாலும் கூட பேரம் படியாததால் தகராறு என்று யாரேனும் கூறலாம், அதுவே ஊரெங்கும் பரவலாம்!

பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்கள், தவறு செய்யாதிருப் பது மட்டும் போதாது. பிறர் அவர்களைத் தவறாக நினைக்கக் கூட முடியாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தன் முக்கிய சீடரான விவேகானந்தரிடம் ஒருதரம் கூறியதாகப் படித்தது நிகிலாவுக்கு நினைவு வந்தது.

நேர்மையாளன் என்று பெயர் வாங்கிய நரேந்திரன் புகழ் அவளால் மாசுபட்டுவிடக் கூடாது! சிறிதளவு கூட.

நிதானமாக மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்துவிட்டு ''அடடா நேரமாகி விட்டதே. எஸ்.பி. பெரிய போலீஸ் அதிகாரியுடைய மனைவி வீட்டிற்கு வருவதாகச் சொல்லி யிருந்தார்கள். நீங்கள் கிளம்புகிறீர்களா? போகும்போது அந்தச் சங்கிலியை எடுத்துப் போய்விடுங்கள்'' என்றுரைத்த வாறு எழுந்தாள்.

செல்வி திகைத்துப் போனாள்.

இவள் சங்கிலியை எடுத்துப் போகச் சொல்லுகிறாளே. அப்படியானால் வந்த காரியம் தோல்வி என்று அர்த்தமா?

அதெப்படி இவ்வளவு பெரிய நகையை ஒருத்தி வேண்டாம் என்று சொல்லுவாள்?

நகை, பணம் என்றால் இந்த அன்னாடம் காய்ச்சிக்குப் புரியவில்லையா?

''இதப் பாரும்மா இது பத்து பவுன் சங்கிலி. இன்னைக்கு விலைப்படி நாப்பதாயிரம் ரூவா! வர்ற சீதேவியை வேண்டாங்காதே. உன் புருஷனுக்கு அப்படி என்ன சம்பளம் இருக்கும்? நினைச்சா திடுதிப்புன்னு வாங்க முடியுமா? எடுத்து உள்ள வச்சுகிட்டு நான் சொன்னாப்பிலே...''

''கவனியங்கள் செல்வி. வருவது போலீஸ் அதிகாரியுடைய மனைவி. மனைவியைக் கொணர்ந்து விட்டுவிட்டுப் போக கணவர்தான் கூட வருகிறார். அவர் வந்து இந்தச் சங்கிலியோடு உங்களைப் பார்த்து... தேவை தானா? கிளம்புங்கள். இனிமேல், இந்த மாதிரி எதையாவது தூக்கிக் கொண்டு இங்கே வராதீர்கள். அதோ, கார் சத்தம் கேட்பது போலில்லை?''

அதற்கு மேல், நில்லாமல் செல்வி கிளம்பிவிட்டாள். கையில் இரும்புக் காப்பு அணிந்து கொள்ள அவள் என்ன முட்டாளா? தங்கம் என்றால் எவ்வளவும் அணியலாம்!

செல்வி விஷயத்தை நிகிலா கணவனிடம் சொன்னபோது முதலில் அவன் சிரித்தான். ''இனிமேல் நான் கற்றுத்தர ஒன்றுமே இல்லை போலத் தோன்றுகிறதே!'' என்றவன் பார்வையை மனைவி முகத்தில் பதித்து ''எந்த ஊருக்கு நான் போகாமல் தடுக்க வேண்டும் என்று கேட்டாயா?'' என்று மெதுவான குரலில் விசாரித்தான்.

''இல்லை'' என்று சொல்லும்போதே ஏதோ என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. ''எந்த ஊர்'' என்று கேட்கும்போதே அவளுக்குச் சத்தமே எழும்பவில்லை.

## 12

சுகேசனைப் பழிவாங்குவதே அடிப்படை நோக்கமாகக் கொண்டுதான் நிகிலா நரேந்திரனைத் திருமணம் செய்ததே. மணமாகிக் கழிந்துவிட்ட இந்த ஒரு மாத காலத்தில் அவளாக இது பற்றி கேட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனோ அது பற்றிக் கேட்க வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு இதுவரை தோன்றவே இல்லை.

ஒரு வேளை அவனை அவள் மன்னித்து விட்டாளா? அதனால் பழி வெறியும் மடிந்து விட்டதா?

யோசித்துப் பார்க்க முனைந்தால் அவளுக்கே உள்ளூரக் குழப்பம்தான்.

அந்த அளவுக்கு அவனை அவள் நினைத்துப் பார்க்கவே இல்லையே!

திருமணம் செய்வதாகச் சொன்னானே அதை நம்பி வீட்டை விட்டு வெளியேறி வந்தோமே; நிர்க்கதியாக விட்டுவிட்டுப் பணக்காரியைத் திருமணம் செய்தானே என்றெல்லாம் அதே நினைவாகக் குமுறிக்கொண்டே இருந்திருந்தால் பழி வாங்கும் வெறியும் கூட இப்போதும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்குமோ என்னவோ?

ஆனால் முழுக்க முழுக்க மாறுபாடான புது வாழ்க்கையும், அதற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்வதுமாக அவளது மூளைக்கு வேலை சரியாக இருந்ததால் பழி விஷயம் அவள் மனதில் நிலைத்து நிற்கவே இல்லை போலும்!

மற்றபடி அவ்வளவு இலகுவாக சுகேசனை மறந்துவிட முடியுமா என்ன? கிட்டத்தட்ட ஓர் ஆண்டாக அவனை வருங்காலக் கணவனாக எண்ணி வந்தவள் இப்போதும் கூட நினையாதது ஆச்சரியம்தான்!

யோசிக்கையில் இன்னும் கூடச் சில விஷயங்கள் மனதில் தெளிவாயின.

அன்று 'காம்ப்' பற்றிச் சொல்லும்போது கணவன் எதையோ சொல்லாமல் விட்டுவிட்ட உணர்வு ஏற்பட்டதன் காரணம் புரிந்தது.

அது சுகேசனுடைய மாமனாரின் ஊர். இப்போது சுகேசனதும் கூட. அதனாலேயே நரேந்திரன் அது பற்றி முழுமையாகச் சொல்லத் தயங்கி இந்த விவரத்தைக் கூறாமல் விட்டிருக்கிறான்!

அத்தோடு முக்கியமான இன்னொன்று இன்று வந்த அந்த நகை காய்ச்சி மரம்தான் சுகேசனுடைய மனைவி!

இந்த செல்விக்காகவா சுகேசன் அவளைக் கைவிட்டான்? இல்லை செல்வியின் பணத்துக்காக!

ஆனால் பணம் அவ்வளவு பெரிதா?

சே, என்று திரும்பும்போது நரேந்திரனின் பார்வை அவள் மீதே இருப்பது தெரிந்தது.

அங்க மொழி அது இதென்று பயின்று வைத்திருப்பவன்! இப்போது அவள் நினைத்ததையும் அறிந்து கொண்டிருப் பானோ?

அவனைப் பற்றித் தப்பாக ஒன்றும் நினைக்கவில்லையே, என்று எண்ணியபடி "இன்று வந்தவள்தான் சுகேசனுடைய மனைவியா?" என்று கணவனிடம் கேட்டாள்.

''ம், ஆமாம். பூவிளைக்குத்தான் நாம் 'காம்ப்' போவதாக இருக்கிறது. அதைத் தடுக்கத்தான் அவள் வந்தது. ஆனால் பெரிய பண்ணையார் இந்த வழி சென்றதாக இதுவரை தகவல் இல்லை. சின்ன அளவிலேயே உருட்டி, மிரட்டி, விரட்டி விடுவார் என்று கேள்வி. படித்த மருமகன் அல்லவா? புதிய வழி சொல்லிக் கொடுத்திருக்கிறார்! பாவம், அவனுக்கு உன்னைப் பற்றியும் தெரியவில்லை. கலெக்டர் மனைவியைப் பற்றியும் தெரியவில்லை!'' என்றான் நரேந்திரன் எகத்தாளமாக.

சொல்வதறியாமல் நிகிலா பேசாதிருந்தாள்.

பொதுவாக நரேந்திரன் உணர்ச்சிகளை எளிதில் வெளிக்காட்டுகிறவன் அல்ல. நல்ல நகைச்சுவை ததும்பப் பேசுவான். மற்றவரின் கேலியையும் ரசித்துச் சிரிப்பான். தப்பு சரியில் தெளிவு இருந்தாலும் அதற்காக ஆத்திரப்பட்டுக் கத்துவது இல்லை. குத்தல் குமுறல் எதுவும் இவன் பேச்சில் இராது.

வேண்டாத எந்த உணர்ச்சியையும் அவன் காட்டியது இல்லை. சிறு வயதிலேயே தாயை இழந்த அவ்னை அவனுடைய தந்தை மிகவும் பண்பட்ட மனிதனாக வளர்த்திருக்கிறார் என்று நிகிலா அவ்வப்போது நினைத்திருந்தாள்.

ஆனால் சுகேசனிடம் மட்டும் அவனுக்கு ஆழ்ந்த வெறுப்பு இருந்தது. முன்பின் அறியாத ஒருத்தியை அவள் சுகேசனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் என்ற ஒரே காரணத்துக்காக திருமணம் செய்கிற அளவுக்குத் தீவிரமான வெறுப்பு!

சுகேசனைப் பழி வாங்குவதற்காகவே அன்று திருமணம் நடந்தது. இப்போது இந்த முகாமும் அதற்காகத்தான்!

பழி வாங்கும் படலம். அவளுக்காக மட்டுமன்று.. அவனுக்காகவும்தான்!

ஏனோ மனம் சோர்ந்தது. அவளுக்கு அதை வெளிக்காட்டாமல் "அங்கே முதல் படி ஏறப் போகிறோம்" என்று அவன் கூறியபோது முயன்று முறுவலித்தாள்.

கலெக்டரின் வருகையைக் கொண்டாடுவதற்காகப் பூவிளை ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு சில நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பள்ளி ஹாலில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்த கலெக்டர் தம்பியை ஊர்ப் பிரமுகர்கள் கூடி நின்று மாலை மரியாதை செய்து வரவேற்றனர்.

நிகிலாவின் பொதுப்படையான பார்வையில் ஒரு புறமாக யாரோ, விறைத்து நிமிர்வது பட்டது.

ஆனால் யார் என்று கூர்ந்து பாராமல் பார்வையை திருப்பிக் கொண்டாள் அவள்.

அதற்குள்ளாக அருகில் நின்றவர்கள் அறிமுகம் செய்யத் தொடங்கிவிடவும் அவளது கவனத்தை அதில் செலுத்தும் படியும் ஆயிற்று.

பூவிளையின் சுற்றுப்புறங்களில் பலவிதமான தொழில் கள் வெற்றிகரமாக நடந்தன. அதாவது நடத்தினார்கள்.

தென்னந்தோப்பு வைத்து கொப்பரை எடுத்து எண்ணை தயாரித்து ஏற்றுமதியே செய்தார் ஒருவர்.

கரும்பு வளர்த்து, வெல்லம் தயாரித்தார், இன்னொருவர்.

மாடர்ன் அரிசி மில் வைத்து கோட்டைக் கணக்கில் அரிசி அளந்தார் கிழக்குப் பக்கத்துக் கிராமத்துக்காரர்.

ஒன்றியத் தலைவர், சற்றுத் தொலைவில் இருந்த காகித ஆலைக்கு காதிதக் கூழ் செய்வதற்காக மரம் அனுப்பினார்.

அனைவரைப் பற்றிய விவரங்களையும் நரேந்திரன் அறிந்து வைத்திருந்தது எல்லோருக்குமே அதிசயமாக இருந்தது.

ஆனால் அதற்குக் காரணம் இருந்ததை நிகிலா பிறகு உணர்ந்தாள்.

இவர் பெயர் இது என்று தொடங்கியதுமே அவர் செய்யும் தொழில் என்னவென்று எடுத்துரைத்து மனைவிக்கு அறிமுகப்படுத்துவான் நரேந்திரன்.

''எங்களைவிட நீங்கள் எங்களைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்களே சார்!'' என்று வியந்து பாராட்டினார் ஒருவர்.

''அதனால்தான் அய்யா கலெக்டராக இருக்கிறார்'' என்று பதிலிறுத்தார், இன்னொருவர்.

''குறைந்தபட்சம் இங்கே வரும்போதாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டும்தானே?'' என்று நரேந்திரன் கூற எல்லோரும் நகைத்தனர்.

குள்ளமாக குண்டாக இருந்த ஒருவரைக் காட்டி ''இவரை இங்கே யாரும் பெயர் சொல்லிக் குறிப்பிடுவதே கிடையாது பெரிய பண்ணை என்றால் எல்லோருக்குமே தெரியும். பெரிய துரைசாமி என்று பதிவேட்டில் இருக்கிறது. ரொம்ப பெரிய நிலச்சுவான்தார். ஆற்றுப் பாசன வயல்கள்! எல்லாம் முப்போகம் விளைகிறவை. இவரைச் சேர்ந்தவர், இவருக்குச்

சொந்தக்காரர் என்பதே ஒரு பெருமைதான்'' என்று நரேந்திரன் பெரியதாக விவரித்தபோது அவருக்கு வாயெல்லாம் பல்லாயிற்று.

அடுத்து நின்றது, சுகேசன் என்பது தரை நோக்கிய பார்வையில் பட்ட வெண்ணிறக் கை, பாதங்களின் மூலம் நிகிலாவுக்குத் தெளிவாயிற்று.

''இவர்....'' ஒருவர் தொடங்கவும் இடையில் குறுக்கிட்டு ''இவரைப் பற்றிய விவரங்கள் அதிகம் இல்லை. ஆனால் சற்று முன் சொன்னேனே, அதுபோலப் பெரிய பண்ணையாருடைய உறவினர் என்றாலே பெருமைதானே என்று, பண்ணை யாருடைய மகளை மணந்து பெரிய மனிதர்கள் வரிசையில் புதிதாகச் சேர்ந்து கொண்டவர். அந்தப் பெருமை தவிர அவரைப் பற்றிச் சொல்வதற்கு எதுவுமே இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை.'' என்று ஸ்டைலாகத் தோளைக் குலுக்கி நரேந்திரன் முறுவலித்தபோது நிறையப் பேர் உரக்கவே சிரித்தனர்.

அந்த அறிமுகத்தை சுகேசனுடைய மாமனார் கூட தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. கலெக்டர் தன்னைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறார் என்று அவருக்கு அதிலும் ஒரு பெருமைதான். ''ஹ.ஹ.ஹ.'' என்று கனைத்தபடி த்ன் அகன்ற மீசையை முனையில் முறுக்கிவிட்டுக் கொண்டார்.

ஆனால் சுகேசன் முகம் செங்குரங்காய்ச் சிவந்து போனதைக் கண்ட நிகிலாவுக்கு உள்ளூர ஒரு மாதிரியாகிக் கஷ்டமாகிவிட்டது.

அடுத்தவர் முன் அவமானப்படுவது சாதாரண விஷயம் அல்ல. உள்ளத்தோடு உடம்பும் கூசிக் குறுகிக் குன்றிப்

போய்விடும். அதை அடுத்தவர் அறியாமல் மறைத்தாக வேண்டும் என்பது உண்மையிலேயே மிகப் பெரிய சித்திரவதை!

கணபதி அவளை வீட்டை விட்டு வெளியே தள்ளிய போது அவளே அனுபவித்த வேதனை! ஆனால் அதாவது இரவில் நடந்தது. அடுத்தவர் பார்த்துவிடுவார்களோ, என்ற கூச்சம்தான். ஆனால் பட்டப் பகலில் இத்தனை பேர் நடுவில் அவமானப்படுவதும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இளித்த படி நிற்க வேண்டியிருப்பதும் கொடுமையிலும் கொடுமை!

நரேந்திரன் சொன்ன முதல் படியே இப்படி என்றால் அடுத்த படி எப்படி இருக்கும்? அதை சுகேசன் எப்படித் தாங்கப் போகிறான்?

அல்லது தாங்கிக் கொள்வானா? ஒரு பெண்ணை மணந்து கொள்கிறேன் என்று ஓர் ஆண்டுகாலம் நம்ப வைத்துவிட்டு அவளிடம் ஒரு வார்த்தை கூடத் தெரிவியாமல் இன்னொருத்தியை மணப்பவன் இதையும் தாங்கித்தான் ஆக வேண்டும்! இல்லையா?

வெறும் பத்து நாட்கள் பயிற்சிதான் என்றாலும் பள்ளிச் சிறுவர்கள் அருமையாகச் செய்தார்கள். ஆனால் வேறு விஷயங்களில் மனம் குழம்பிக் கொண்டிருந்ததால் நிகிலாவால் எதையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை.

பரிசு கொடுக்கச் சொல்லி அவளைக் கூப்பிட்டபோதும் இன்ன இடம் என்று குறிப்பிட்டுச் சொல்லமாட்டாமல் மொத்தமாக நன்றாகச் செய்தான் அல்லது செய்தாள் என்று வாழ்த்திப் பரிசைக் கொடுத்து சமாளித்தாள்.

அவர்கள் தங்கியிருந்த அரசாங்கப் பயணிகள் விடுதிக்குத் திரும்பி வருகையில் நரேந்திரன் சிறுவர்களின் கலை நிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசினான்.

"என்ன அருமையான தத்துவம் பார், நிகில், 'உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும். அதுபோலத் தப்பைச் செய்தவன் தண்டனை அனுபவித்துத் தான் ஆக வேண்டும்' என்று எவ்வளவு அழகாக நடித்துக் காட்டினார்கள். ஆனால் இந்தக் கதையின் நீதி யார் மனதிலாவது பதிந்திருக்குமோ என்னவோ? பதிந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்! ஆனால் பார்க்கிற நாடகத்தில் இருந்து வாழ்க்கைக்கு உரிய நீதியைக் கிரகித்துக் கொள்கிற பழக்கம்தான். மகாத்மா காந்தியோடு முடிந்துவிட்டதே!" என்று அவன் வருத்தம் காட்டியது, பொதுப் படையாக அல்ல; சுகேசனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை நியாயமானதே என்று தனக்கு அறிவுறுத்துவதற்காகவே என்றே நிகிலாவுக்குத் தோன்றியது.

கூடவே ஒரு குற்ற உணர்ச்சியும் உண்டாயிற்று. பாதி அவளுக்காகவும்தானே நரேந்திரன் இந்தப் பழி வாங்கும் படலத்துக்கு ஏற்பாடு செய்தது? அவள் பாட்டில் சுகேசனுக்காகப் பரிதாபப் படுவது எப்படி நியாயமாகும்?

நான் நீ என்று போட்டி போட்டவர்களின் விருந்து உபசாரங்களை மரியாதையுடன் மறுத்துவிட்டு பங்களாவில் தயாரிக்கப்பட்ட உணவையே இருவரும் உட்கொண்டார்கள். அதற்காகவே தங்கம்மாவையும் அழைத்துச் சென்றிருந்தார் கள்.

"விருந்துபசாரம் என்று ஒரேயடியாகத் திணிக்க முயற்சிப்பார்கள். தேவை இவ்வளவுதானே என்று யோசிக்க மாட்டார்கள். மேலே மேலே இலையில் வைத்துக்கொண்டே இருப்பதுதான் சரியான விருந்துபசாரம் என்கிற தவறான கணிப்பு நம்மவர்களில் பெரும்பான்மையோர்க்கு உண்டு. நமக்குத்தான் வெறுத்துவிடும். அத்தோடு, யார் வீட்டுக்

கென்று போவது? அதனால் வசதி இருக்கும் இடங்களானால் ஹோட்டலில் வாங்கி வரச் சொல்லுவேன். இல்லாவிட்டால் தங்கம்மாவை உடன் அழைத்துப் போய் விடுவது'' என்று நரேந்திரன் ஏற்கனவே விளக்கம் கொடுத்திருந்தான்.

மதியத்துக்கு மேல் கலெக்டர் பொது மக்களைச் சந்திப்பதற்கும் அவர்களிடம் புகார் மனுக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

உணவின் பிறகு சற்று நேரம் அமர்ந்து குறிப்புகளை பார்த்து விட்டு மக்களைச் சந்திக்கவென்று நரேந்திரன் கிளம்பினான்.

கிளம்புமுன், ''இதெல்லாம் உனக்குப் புதிதல்லவா? போகப் போகப் பழகிவிடும் என்றாலும், இப்போது கொஞ்சம் களைப்பாக இருக்கும். பேசாமல் சற்று நேரம் படுத்துத் தூங்கு. உன்னை யாரும் தொந்தரவு பண்ணாதிருக்க, ஏற்பாடு செய்து விட்டுப் போகிறேன். எதற்கும் துணை தேவைப்பட்டால் தங்கம்மாவைக் கூப்பிட்டு அருகில் வைத்துக் கொள்'' என்று விட்டுப் போனான்.

'இம்'மெனுமுன் வாடி விடுவதற்கு நான் என்ன அனிச்ச மலரா என்று முதலில் உள்ளூரச் சிரித்த போதும் உடனேயே நிகிலாவுக்கு வேறு யோசனை வந்தது.

எதற்காக இந்த ஏற்பாடு?

ஏனெனில் நரேந்திரன் ஒன்று சொன்னான், செய்தான் என்றால் அதில் அவன் வெளிப்படையாகச் சொல்லாத விஷயங்களும் மறைந்திருப்பதை, அவள் பலமுறை பார்த்திருக்கிறாள்.

அது கெடுதலாக இருந்தது இல்லை. பெரும்பாலும் கூடுதல் நன்மை பயப்பதாகவும் இருக்கும். ஆனால்,

வெறுமனே கண்ணைக் காதை எட்டுவதை விட வேறுபலவும் இருப்பதே வழமை!

இப்போது என்ன?

வேண்டாத யாரும் அவளைச் சந்திக்க முயற்சிக்கக்கூடும் என்று நரேந்திரன் எதிர்பார்க்கிறானோ? அந்த 'வேண்டாத நபர்' சுகேசனாக இருக்குமோ?

ஆனால் அவ்வளவு மோசமாக அவளிடம் நடந்து கொண்ட பிறகு எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு சுகேசன் அவளைச் சந்திக்க முயற்சிப்பான்?

சொந்த மூஞ்சியை வைத்துக் கொண்டுதான் என்று சுகேசன் விரைவிலேயே அவளுக்குப் புரிய வைத்தான்!

## 13

தன் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்ளத்தான் சுகேசன் முயற்சிப்பான் என்று எண்ணியதால் நிகிலா அவனை அங்கே எதிர்பார்க்கவே இல்லை எனலாம்.

எனவே பயணத்தாலும் தொடர்ந்து செய்த சமையல் வேலையாலும், சற்று அலுத்திருந்த தங்கம்மாவைப் படுத்துத் தூங்கச் சொல்லிவிட்டு தான் கையோடு கொண்டு வந்திருந்த கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்.

எவ்வளவு நேரம் படித்தாளோ, எவ்வளவு நேரம் கண்ணயர்ந்திருந்தாளோ, அவளுக்கே தெரியாது. ஏதோ சிறு சத்தத்தில் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தால் எதிர்ப்புறம் இருந்த கண்ணாடி ஜன்னலை லேசாகத் தட்டிக் கொண்டிருந்தான் சுகேசன்.

வாயிலில் நிற்கும் காவலனைக் கவராத அளவில் மெல்லிய தட்டல்!

நேர் வழியில் வராமல் ஒளிவு மறைவாய் இதென்ன? இப்படி ஜன்னல் வழியே இருவரும் பேசுவதை யாராவது பார்த்தால் என்ன எண்ணுவார்கள் என்று எரிச்சல் மூண்டது அவளுக்கு.

ஆனால் ''வாயில் வழியே வருவதற்கென்ன?'' என்று அவள் கேட்டதற்கு உள்ளே விட மறுப்பதாக அவன் கூறவும் அவளது எரிச்சல் கணவன் புறம் பாய்ந்தது.

அப்படிப் பாதுகாக்க வேண்டிய அளவுக்குத் தன்னைப் பார்த்துக் கொள்ளத் தெரியாத முட்டாளா அவள்?

வாயிலுக்கு வருமாறு சைகை செய்து விட்டு எழுந்து முன்புறம் சென்றாள்.

காவலுக்கு நின்றவன் ''என்னம்மா?'' என்று முன் வந்தவன் அதற்குள் வாயிலுக்கு வந்துவிட்ட சுகேசனைப் பார்த்ததும், ''காலையில் கூட்டத்துக்கு வந்திருந்தீர்கள். அல்லவா? உங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா? உள்ளே வாருங்கள்?'' என்று சரளமாகப் பேசியவாறு கலெக்டர் மனைவி வந்தவனை உள்ளழைத்துச் செல்லவும், பேசாமல் ஒதுங்கி நின்று விட்டான்.

உள்ளே சென்றதும், ஒரு சோஃபாவை அவனுக்குக் காட்டி விட்டு எதிர்புற இருக்கையில் தானும் அமர்ந்து, ''என்ன விஷயம்? இப்போது இங்கே எதற்காக வந்தீர்கள்?'' என்று விசாரித்தாள் அவள்.

அவளது தோரணையைக் கண்டு சுகேசன் திகைத்தான்.

இது அவளது பதவியின் சக்தியா அல்லது நரேந்திரன் கொடுத்த பயிற்சியா?

எதுவாக இருப்பினும் அவள் தன்னிடம் அப்படிப் பேசுவதை சுகேசனால் பொறுக்க முடியவில்லை. நீயே கதி என்று கிளம்புவதாக எழுதியவளுக்கு இந்தத் திமிர் எப்படி வந்தது?

அவள் வந்து நின்று விடுவாளோ என்று உள்ளூர அஞ்சினானே! நல்லவேளை! வரவில்லை என்று கூட மகிழ்ந்தானே. வந்திருந்தால் இந்த அழகை ஒரு சின்ன வீடாக வைத்து மகிழ்ந்திருக்கலாமே என்று இப்போது அவன் மனம் தவித்தது!

சிறு வயதிலிருந்தே சுகேசனுக்குப் பணத்தின் மீது அதிக மோகம் உண்டு.

வளருகிற காலத்தில் எண்ணி எண்ணிச் செலவு செய்த போதும் விரும்பிய எதையுமே அடைய முடியாது போனது, அவனுள் ஒரு வெறியையே கிளப்பி விட்டிருந்தது.

முனைந்து படித்து நல்ல வேலையில் அமர்ந்த போதும் அவன் விரும்பிய அளவு பணம் அதில் சம்பாதிக்க முடியவில்லை!

வெகுவாக யோசித்து பணக்காரனாவதற்கு அவன் கண்டுபிடித்த வழி அவனது திருமணம்தான்.

யாராவது பணக்காரப் பெண் வாரிசாகப் பார்த்து மணம் புரிய வேண்டும் என்று அவனால் முடிவு செய்ய முடிந்தது. ஆனால் அப்படி ஒருத்தியைக் கண்டுபிடிக்க அவனால் முடியவில்லையே!

இருபத்தி ஒன்பதாவது பிறந்த நாள் வந்த போது அவனது நம்பிக்கை அடியோடு ஆட்டம் கண்டுவிட்டது.

இதுவரை வராத பணக்காரி இனி எங்கிருந்து வரப்போகிறாள்?

அதன் பின் மீண்டும் யோசித்து அவன் எடுத்த முடிவு அவனைப் போல வேலை செய்கிற ஒருத்தியை மணப்பது. இருவர் ஊதியமும் சேர்ந்தால் அவன் விரும்பிய அளவுக்கு இல்லை என்றாலும் ஓரளவேனும் கட்டி வராதா?

அவன் அந்த மனநிலையில் இருந்த போதுதான் நிகிலா பற்றிய விவரம் தெரிய வந்தது.

போய்ப் பார்த்த போது அழகாக இருந்தாள்.

அதில் சிறு மயக்கம் வந்த போதும் அவளது வருமானம்தான் அவனை முடிவுக்கு வர வைத்தது.

நிகிலாவுக்கு இப்போதே ஓரளவு நல்ல வருமானம்தான் என்பதோடு, பெரும் முன்னேற்றத்துக்கு வாய்ப்பும் இருந்தது. ஓரளவு நகைகள் செய்து வைத்திருந்தார்கள்.

இவளை விடப் பெரிய இடத்துக்கு ஆசைப்பட்டு இவளையும் விட்டு விடக்கூடாது என்றும் தோன்றவே திருமணத்துக்குச் சம்மதம் சொல்லிவிட்டான்.

ஆனால் திருமணத்தைத் தள்ளிப் போட்டான். காரணமாகக் கிழவி ஒப்பும் விதமாக வீடு வீட்டுப் பொருட்கள் என்றான். இவைகளைச் சேர்க்க இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகக் கூடும். இடைக் காலத்தில் யாராவது பணக்காரப் பெண் வந்தால் அவள்; அப்படி யாரும் வராவிட்டாலும் அவ்வளவு நாள் சேர்த்த பணமாக ஓரிரு லட்சங்களுடன் நிகிலா இருப்பாள்.

நாள் தள்ளுகிறதே என்று பாக்கியமும் இருப்பதையெல்லாம் திரட்டிச் சின்ன மகளுக்குக் கொடுக்கலாம்!

சென்னையிலும் இருக்கும் அக்காக்காரி கூடப் பெரிதாக ஏதாவது செய்யலாம்.

பல்வேறு விதமாக அவன் கணக்கிட்டுக் கொண்டிருந்த போதுதான் சுகேசனுக்கு இடமாற்றல் கிடைத்தது. கிராமப் புறத்திலும் பணம் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

அவன் விரும்பிய விதமாக பெண் வாரிசும் இருந்தாள்.

தோற்றத்தைப் பார்க்கையில் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்த போதும் பணம் அதை ஈடு கட்டி விட நிகிலாவைத் தூக்கி எறிவது சுகேசனுக்கு எளிதாகத்தான் இருந்தது.

ஆனால் அதே நிகிலா அவனது மாவட்டக் கலெக்டர் மனைவியாக அங்கேயே வந்து நின்றது அவனை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

அதுவும் புத்தம் புது ரோஜாப்பூ மாதிரி!

கலெக்டர் மனைவியின் அழகைப் புகழ்ந்து, மற்றவர்கள் பேசப் பேச அவனுக்கு உள்ளே எரிந்தது.

இந்த அழகு, அவனுக்குச் சொந்தமாகியிருக்க வேண்டியது!

மாறாகக் குந்தாணி மாதிரி அவனுக்கு ஒரு மனைவி!

அந்த மனைவி அவனது சொந்தத் தேர்வுதானே என்பதெல்லாம் அப்போது நினைவுக்கு வரவில்லை!

நரேந்திரனின் கிண்டல் வேறு, அவனுள் தீயாய் எரிந்தது.

அவன் தூக்கி எறிந்ததைப் பொறுக்கிக் கொண்டு கேலி வேறா?

நிகிலாதான் கலெக்டர் மனைவி என்று அறியாமல், பத்து பவுன் சங்கிலியோடு மனைவியை அவளிடம் அனுப்பியதை எண்ணும்போது உள்ளம் வெந்தது.

ஒரு சமயம் கதை எழுதி நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று கதைக் கருக்களுக்காக சுகேசன் நிறையப் புத்தகங்கள் படித்தான். விரைவிலேயே கதைகளின் கரு அப்படிக் கிடைப்பதில்லை என்று உணர்ந்து, அந்த முயற்சியை விட்டு விட்டான்.

அப்படி அவன் படித்தவற்றுள் பிரபல எழுத்தாளர் அகிலனின் புகழ் பெற்ற சரித்திர நாவலும் ஒன்று.

ஒரு மன்னனால் அழிக்கப்பட்ட ஒருத்தி அந்த அரசனுடைய மனைவியை அவன் கண்ணெதிரில் தனக்குச் சாமரம் வீசவைத்துப் பழி வாங்கியதாக அதில் வரும்.

அந்த மன்னன் எப்படித் தவித்திருப்பான் என்று இப்போது சுகேசன் உணர்ந்தான்.

தன்னால் அலட்சியம் செய்யப்பட்டவளிடம் காணிக்கையோடு அவனே மனைவியை அனுப்பி வைத்தானே! லஞ்சம் என்றால் என்ன? காணிக்கை என்றால் என்ன? எல்லாம் தாழ்ந்த கையிலிருந்து மேலே கொடுப்பது தானே?

லஞ்சத்தை வாங்கி விட்டால் தாழ்த்தி விடலாம். வாங்காத வரை?

'முப்பத்தைந்து வயதில் வலையில் விழுந்திருக்கிறான். பொண்டாட்டி பேச்சைத் தட்ட மாட்டான். அவளைப் பிடி' என்று அவனே அனுப்பி வைத்தது. சும்மா சும்மா நினைவு வந்து அவனைத் தீயாய் எரித்தது.

இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்! செய்தே ஆக வேண்டும்!

சென்னையை விட்டுக் கிளம்பப் போவதாக நிகிலா எழுதியிருந்த கடிதம் அவனுக்குக் கிடைத்திருந்தது.

மாமனார், மனைவிக்குத் தெரிந்துவிடக் கூடாது என்று உடனே கிழித்தெறிந்து விட்டான். அவள் தொடர்பான அத்தனையையும் அழித்த முட்டாள்தனத்தை எண்ணி இப்போது வருத்தமாக இருந்தது.

கையில் இருந்தால் அது பொக்கிஷம் அல்லவா? எத்தனையோ வழிகளில் பயன்படக் கூடுமே!

எப்படியும் ஓர் ஆண்டு காலமாக அவனை வருங்கால நாயகனாக எண்ணி வந்தவளுக்கு அந்த நினைவு கொஞ்சம் கூடவா இல்லாமல் போகும்?

அந்த நினைவைத் தூண்டி விடுவதற்காக அவள் காலைப் பிடிக்கவும் சுகேசன் தயாராக இருந்தான்.

ஆனால் நிகிலாவின் தோரணையான பேச்சு, அவனைத் திகைக்க வைத்தது.

இவளிடம் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு "உனக்கு என் கடிதம் கிடைத்ததா நிகிலா?" என்று கரகரப்பான குரலில் கேட்டான்.

"என்ன கடிதம்?"

"அதுதானம்மா. என் நிலைமையை விவரித்து உனக்கு எழுதினேனே அது!"

"என்ன நிலைமை?"

"அப்போது என் கடிதம் கிடைக்கவில்லை என்றா சொல்லுகிறாய்? என் தந்தை அவருடைய நண்பருக்காக ஜாமீன் கையெழுத்துப் போட்டு அந்த நண்பர் தலைமறைவாகி விட கடனை அப்பா கட்டும்படி ஆனது.

கட்டப் பணம் இல்லாமல் அவர் தற்கொலைக்கு முயன்றது. வேறு வழியில்லாமல் பணத்துக்காக நான் இந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருப்பது எல்லாவற்றையும் விவரமாக எழுதியிருந்தேனே! ஆறு பக்கம். உன்னை மணக்கும் பாக்கியம் கை விட்டுப் போகிறதே என்று அந்தத் தவிப்பை மட்டும் ஒரு பக்கம் முழுவதும் எழுதியிருந்தேனே! அதைப் படித்தால், உன் பூ மனம் நிச்சயமாக என்னை மன்னிக்கும் என்று உறுதியாக எண்ணினேனே! எந்தப் பாவியாவது கதை எழுதப் பயன்படும் என்று அந்தக் கடிதத்தைத் திருடி விட்டானா? கடிதம் வேறு எப்படித் தொலைந்து போகும்? நிச்சயமாக உனக்கு என் கடிதம் கிடைக்கவே இல்லையா நிக்கிம்மா?" என்று கண்களில் நீர் மல்க சுகேசன் உருக்கமாகக் கேட்டான்.

அவனது கண்ணீரும் பேச்சும் மனதை உருக்க இல்லை என்பது போல நிகிலா தலையை அசைத்தாள்.

"அய்யோ!" என்று முகத்தைப் பொத்திக் கொண்டு உடல் குலுங்கினான் சுகேசன். "இது ஒன்றும் தெரியாமல் இத்தனை நாள் எப்படித் தவித்தாயோ? காலையில் அறிமுகத்தின் போது உனக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்க லாம்? அய்யோ நிக்கிக் கண்ணு!" என்று மீண்டும் கலங்கி னான்.

நிகிலா திகைத்துப் போனாள். அவளுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்ற எண்ணமே இல்லாமல் சுகேசன் பேசிக் கொண்டே போனது அவளை என்னவோ செய்தது.

மேலும் இவன் இந்தப் பாடு பட்டிருக்கிறான். அவளானால் சுகேசனைப் பழி வாங்குவதற்காகவே திருமணமே செய்து கொண்டிருக்கிறாளே!

தன்னைப் பற்றி நினைத்து அவள் கூசிக் கொண்டிருந்த போது சுகேசன் மேலே பேசினான். "ஆனால் நிக்கிம்மா, எனக்கு வாழ்வு கசந்து விட்டது. உன்னை என்னால் மறக்கவே முடியவில்லை. நிற்கும் போதும், நடக்கும்போதும், எப்போதும் உன் நினைவுதான். வேண்டுமானால், நீயே தொட்டுப் பார். என் இதயம் கூட, 'நிக்கி நிக்கி' என்றுதான் துடிக்கும்" என்றவன், சட்டென அவள் கையைப் பற்றி அவன் நெஞ்சின் மீது வைத்து அழுத்திக் கொண்டான்!

நிகிலாவுக்கு விதிர் விதிர்த்து விட்டது.

"சுகேசன் என்ன இது? கையை விடுங்கள்!" என்று அவள் கூறியது அவன் காதுகளில் விழுந்த மாதிரியே இல்லை.

அவள் கையை அவன் விடவும் இல்லை!

தன் போக்கில், "என் உயிர்க்காதல்" என்று ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்துப் பரிதாபம் ஒரு பக்கம். யாரும் பார்த்துத் தப்பாக நினைக்குமுன், கையை எப்படி விடுவிப்பது என்ற தவிப்பு ஒரு புறமுமாக, நிகிலா தவித்துக் கொண்டிருந்த போது, "ஹலோ மிஸ்டர் சுகேசன் வாருங்கள், வாருங்கள்! எப்போது வந்தீர்கள்?" என்று நரேந்திரனின் குரல் கேட்கவும் இருவருமே திகைத்துப் போயினர்.

சுகேசன் துள்ளிக் குதித்து விலகி நிற்க, நிகிலா அப்படியே சிலையென உறைந்தாள்.

# 14

நரேந்திரன் அந்த நேரத்தில் திரும்பி வருவான் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

பங்களாவில் என்றால் பியூன் ஒருவன் நரேந்திரன் பின்னோடு வந்து அவனது கைப் பெட்டியைக் கொணர்ந்து வைத்து விட்டுப் போவான். நல்லவேளையாக இங்கே அப்படி யாரும் வரவில்லை என்று எண்ணினாள் நிகிலா.

வந்திருந்தால் சுகேசன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நின்றதை அவனுமல்லவா பார்த்திருப்பான்? பார்த்து என்னென்ன கதை கட்டியிருப்பானோ?

நரேந்திரன் என்ன சொல்லப் போகிறானோ என்றும், அவளுக்குக் கவலைதான். ஆனால் அவனுக்கு விஷயம் எல்லாம் தெரியும். அதுவும் சுகேசனின் விளக்கத்தை அறியும் போது அவனும் இளகி விடக்கூடும்.

ஆனாலும் கணவன் என்பதால் கௌரவம் பற்றி யோசிப்பானோ? ஏனெனில் கௌரவத்துக்குப் பங்கம் வராதபடி கவனித்து நடந்து கொள்ள வேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறான்.

ஏதேதோ எண்ணி, நிகிலா குழம்பிக் கொண்டு இருந்த போது எதுவுமே நடவாதது போல நரேந்திரன் பேசினான். "என்னம்மா நிகில் மிஸ்டர் சுகேசன் நின்று கொண்டே இருக்கிறார்? நீ உட்காரச் சொல்லவில்லையா? உட்காருங்கள் சுகேசன். இதையெல்லாம் இந்தக் காலத்தில் எதிர்பார்த்துக்

கொண்டிருக்கக் கூடாது. ஓர் இடத்துக்குப் போனதுமே, 'சக்'கென்று உட்கார்ந்துவிட வேண்டும். சரி ஏதாவது சாப்பிட்டீர்களா? இல்லையா? என்னம்மா இது? பாவம். அவர் தொண்டை வறண்டு போய் நிற்கிறார். நீ எதுவும் கொடுக்கவில்லை போல இருக்கிறதே. என்ன சுகேசன், டீ? காஃபி? என்ன பிடிக்கும்?... அட சொல்ல மறந்துவிட்டேனே உங்களைத் தேடி உங்கள் மனைவி அங்கே ஆள் அனுப்பினாள். இங்கேதான் இருந்ததாகச் சேதி அனுப்பி விடட்டுமா?'' என்று உற்சாகமாகவே கேட்டான்.

என்ன செய்வது என்று ஒன்றுமே புரியாமல் என்ன நடக்கிறது என்றும் புரியாமல் விட்டால் போதும் என்ற நிலையில் இருந்தான் சுகேசன்.

தான் நிகிலாவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்ததை நரேந்திரன் பார்க்கவில்லையோ என்ற சந்தேகம் அவனுக்கு. இல்லாவிட்டால் இவ்வளவு சகஜமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டான்!

ஆனால் சற்று யோசித்தால் போதும். அவன் இல்லாத நேரத்தில் இன்னொருவன் ஏன் வந்தான்? அவ்வளவு நெருக்கமாக ஏன் நின்றார்கள்? இந்த இரண்டையும் யோசித்துப் பார்த்தால் உண்மை புரிந்து விடும்!

அப்படிப் புரிந்து விட்டால் அப்புறம் சுகேசன் முழுத் தோலோடு வீடு செல்வது அரிது.

ஏனெனில் இங்கே, சுற்றிலும் இருப்பவர்கள் கலெக்டருடைய ஆட்கள். கலெக்டர் ஒரு வார்த்தை சொன்னால் போதும் பின்னி விடுவார்கள்!

அரைகுறைத் தோலோடு வீடு சென்றால், அங்கே செல்வியின் வாயிலிருந்து மீள்வதும் அரிதே.

எனவே முடிந்தவரை விரைவாக ஓடி விடுவது மேல் என்று எண்ணியவன் சந்தேகத்தைத் தூண்டாமல் எப்படி ஓடுவது என்று அறியாமல் முள்ளின் மீது நிற்பதுபோலத் தவித்துக் கொண்டிருந்தான் அவன்.

இப்போது அந்த வாய்ப்புக் கிடைத்தாற்போல், "இ... இல்லை சார். வீட்டில் ஒரு வேலை அதற்காகத்தான் மனைவி தேடியிருக்கிறாள். நான் உடனே போய்ப் பார்த்தால்தான் நன்றாக இருக்கும். வரட்டுமா சார்? வருகிறேன் மேடம்!" என்றவன், பதிலுக்காகக் காத்திராமல் வேகமாக அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான்.

அவன் விரைந்து செல்வதைப் பார்த்திருந்து விட்டு, "ஓடுகிற வேகத்தில் பின்னங்கால் பிடரியில் அடித்து விடும் போலிருக்கிறதே!" என்று சொல்லிச் சிரித்தான் நரேந்திரன்.

நிகிலாவால் சிரிக்க முடியவில்லை. கணவன் சிரிப்பதைக் கேட்கவும் பிடிக்கவில்லை.

எனவே "நீங்கள் இவ்வளவு சீக்கிரமாக வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றாள்.

"வந்ததால்தானே கண்கொள்ளாக் காட்சி ஒன்றைக் கண்டு ரசிக்க முடிந்தது?" என்றான் அவன் ஏளனமாக, "அத்தோடு எதிர்பார்ப்பது மட்டுமே நடப்பதும் இல்லை என்பதை உன்னோடு நானும் தெரிந்து கொண்டேன்!" என்றான் தொடர்ந்து.

சுகேசன் அந்த அளவு நெருங்க இடம் கொடுத்தது தப்பு என்கிறான்.

கணவன் என்ற நிலையில் இருந்து அவன் சொல்வது சரிதான். உண்மை தெரிந்தால் இப்படிப் பேசமாட்டான். ஏனெனில் நரேந்திரன் நியாயஸ்தன்!

எனவே சுகேசன் தெரிவித்த விவரங்களைப் பற்றிக் கணவனிடம் நிகிலா எடுத்துரைத்தாள்.

''பாவம் தந்தை மேல் அநியாயமாக விழுந்த கடனைத் தீர்ப்பதற்காக சுகேசன் தன்னையே விற்கும்படி ஆகிவிட்டது!'' என்றாள் வருத்தத்துடன்.

''ஓகோ!'' என்றான் நரேந்திரன் யோசனையோடு. ''இருக்கலாம். இருந்தால் மிகவும் பாவம்தான். ஆனால் இது ஏதோ ஒரு மாதிரி, எங்கேயோ கேட்டுப் பழக்கப்பட்ட வசனம் மாதிரி இல்லை?''

உள்ளூரக் கலங்கி ''பொய் என்கிறீர்கள்?'' என்றாள் நிகிலா.

அவன் வாய் திறந்து எதுவும் சொன்னானில்லை.

ஆனால் அவளுக்குத் தெரிந்துவிட்டது. அன்று சுகேசனுடைய மனைவி 'கட்டிலில் கிடந்து' என்று சொன்னது. இப்போது நினைவு வந்தது. அவளோடு அப்படிப் பழகுகிறவன்தானே? பிறகு வாழ்வு எப்படிக் கசக்கும்? அவன் சொன்னால் அப்படியே நம்பி விடுவதா? அதுவும் இவ்வளவு வேதனையும் அனுபவித்து விட்டு?

இவ்வளவு நாள் கணவன் எவ்வளவோ கற்றுத் தந்து என்ன பிரயோஜனம்?

நிகிலாவுக்குத் தன்னை மீறி அழுகை வந்தது. அதை நரேந்திரனுக்குக் காட்ட மனமின்றி மறுபுறம் திரும்பி ஓசையற்றுக் கண்ணீர் சொரிந்தாள்.

ஓரிரு நிமிஷங்கள், அவளை அழ விட்டுவிட்டு நரேந்திரன் மனைவியின் பக்கம் வந்தான்.

அவளைத் தன்புறம் திருப்பி, ''உனக்கு மறந்துவிட்டது என்று நினைக்கிறேன். என்னிடம் பரந்து விரிந்த மார்பு இருக்கிறது. பெண்கள் முகம் புதைத்து அழுவதற்கு, அது ரொம்பவே வசதியாக இருக்கும்! முக்கியமாக உனக்கு'' என்றுரைத்து அவள் தலையை மெல்ல வருடினான்.

சிரிப்பும் அழுகையுமாக அவன் மார்பில் முகம் புதைத்தாள் நிகிலா!

சிரிப்பும் சேர்ந்து வந்து விடவே நிகிலாவின் கண்ணீர் அதிக நேரம் நிலைக்கவில்லை.

விரைவிலேயே முகத்தை துடைத்துக் கொண்டு ''தாங்க்ஸ்!'' என்றாள் அவள்

ஆனால், ''வெறும் 'தாங்க்ஸ்' மட்டும் போதாது'' என்றான் அவன்.

புரியாமல் விழித்தவளிடம், ''உன் பொறுப்பு கடமை யாருக்கு என்று உன் உள்ளம் அறிய வேண்டும். அதற்கொரு பாடமும் வேண்டும் கண்ணை மூடிக் கொள்!'' என்றான் நரேந்திரன்.

''எதற்குக் கண்ணை மூட வேண்டும்?''

''இதுவரை உனக்குக் கெடுதலாக ஏதாவது செய்திருக்கிறேனா? கேள்வி கேட்காமல் சொல்வதைச் செய்வதற்கென்ன?''

உடனே 'டப்'பென்று இமைகளை மூடிக் கொண்டாள் அவள்.

மனைவியின் முகத்தைக் கையால் மிருதுவாக வருடி, குனிந்து லேசாக முத்தமிட்டான் அவன்!

திகைத்து நோக்கியவளிடம், ''வெறுப்பாயிருந்ததா?'' என்று மெதுவாகக் கேட்டான்.

இல்லை என்று அவள் தலையசைக்கவும் முறுவலோடு மீண்டும் குனிந்தான் நரேந்திரன்.

சற்று அழுத்தமான இதழொற்றலின் பின் நிமிர்ந்து, ''இன்றையப் பாடம். இத்துடன் போதும்'' என்று கூறி விலகிச் சென்று சோஃபாவில் அமர்ந்து பக்கத்து இருக்கையைக் காட்டினான்.

நிகிலாவும் வந்து அமர்ந்ததும், ''தங்கம்மா!'' என்று உரக்க விளித்தான். ''காஃபி, டீ ஏதாவது இருக்கிறதா? தொண்டை காய்ந்து போயிற்று எங்களுக்கு.''

''நானே கொண்டு வருகிறேன்'' என்று எழ முயன்ற வளைக் கையைப் பற்றித் தடுத்தான்.

பற்றிய கையை விடாமலே, ''மிஸ்டர் மணி!'' என்று அழைத்தான்.

அந்த தாலுகாவின் தாசில்தார் என்று காலையில் அறிமுகப்படுத்தப்பட்டவர். கையில் கத்தை பேப்பர்களுடன் உள்ளே வந்தார். சற்று முன் கேட்ட 'பைக்' சத்தம் இவரதாக இருக்க வேண்டும் என்று நிகிலா ஊகித்தாள்.

''உட்காருங்கள்'' என்றவன் மனைவியின் கையைப் பற்றியிருந்ததை மறந்தே விட்டவன் போல அவருடன் உரையாடத் தொடங்கினான்.

அதற்கு முன்னதாக வாயிலில் நின்ற சேவகனை மணியடித்து அழைத்து ''உள்ளே காஃபி தயாரித்துக் கொண்டிருப்பார்கள். மூன்று கப்பாகக் கொண்டு வரச் சொல்லு'' என்று உத்தரவிட்டான்.

''ஹி, எனக்கு எதற்கு சார்? நீங்கள் சாப்பிடுங்கள். நான் இப்போதுதான் குடித்தேன்...'' என்று வழிந்த தாசில்தாரிடம் ''பரவாயில்லை இங்கே எங்களுடனும் ஒரு கப் குடியுங்கள்'' என்று உபசரித்து விட்டு அவருடன் வேலையைத் தொடங்கி னான்.

''நினைத்த அளவு மனுக்கள் வரவில்லையே. மணி சார்? இதை விட அதிகம் எதிர்பார்த்தேன். அல்லது இங்கே நடப்பதாக எனக்கு வந்த தகவல்கள் தான் தப்பா? மிகைப் படுத்திக் கூறி விட்டார்களா?''

''தப்புகள் நடப்பது உண்மைதான் சார். ஆனால், வெளிப்படையாகச் சொல்லப் பயப்படுகிறார்கள் என்பது தான் என் கருத்து. ஏதாவது ஒரு வகையில் கட்டுப்படுத்தி விடுகிறார்கள். இவர்களுக்கும் ஒரு பக்கம் பயம் அடுத்த பக்கம் பல தலைமுறைகளாக அங்கேயே வேலை செய்து விட்ட விசுவாசம். ஆனால் இப்போதெல்லாம் பெரும்பாலும் பயம்தான் சார்.''

பேச்சின் போதே, அந்த மணியின் பார்வை இணைந்திருந்த கைகளின் பக்கமாக அவ்வப்போது பாய்ந்து மீள்வதை நிகிலா கவனித்தாள். அவர் பார்த்துப் பழகும் வட்டாரத்தில் கணவனும் மனைவியும், அடுத்தவர் முன்னிலையில் இப்படிக் கையைப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

தன்னியல்பாக நடப்பது போலக் கையை உருவிக் கொள்ளலாம் என்று பார்த்தால் அதற்கு அவனது பிடியின் அழுத்தம் இடம் தரவில்லை!

ஊரெங்கும் போய்ச் சொல்லப் போகிறார். கலெக்டரும், அவருடைய மனைவியும், என்னேரமும் ஒட்டிக் கொண்டே

கிடக்கிறார்கள் என்று, இங்குள்ள மூலை முடுக்கெல்லாம் பரவப் போகிறது... என்று எண்ணமிடும்போதே அதுதான் நரேந்திரனின் விருப்பமும் என்று நிகிலாவுக்குப் புரிபட்டுப் போயிற்று.

அதன் காரணமும்தான்!

சுகேசன் வந்ததும் சற்று நேரம் அவளுடன் மட்டுமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு நரேந்திரன் வந்ததும் விழுந்தடித்து வேகமாகச் சென்றதும், வெளியே நின்ற பியூன்களுக்குத் தெரியும். அவர்களில் ஒருவன் தாசில்தார் அலுவலகத்து ஆளே.

சுகேசன் நச்சுப் பாம்பு. அவன் வெளியே போய் என்னவெல்லாம் சொல்லப் போகிறானோ?

இங்கேயே இருந்து மறுத்துச் சொல்லிக் கொண்டிருக்கவா முடியும்? அதை விடச் செய்கையால் இன்னொரு வதந்தியைக் கிளப்பி முன்னதை அடிக்கிறான்!

கணவனின் சாமர்த்தியம் பூரிப்பைத் தந்த போதும், தன்னை நினைத்து நிகிலா உள்ளூரக் குன்றிப் போனாள்.

பார்த்த முதல் நாளே, சுகேசன் இப்படி நெருங்க முயற்சிப்பான் என்று நரேந்திரன் அவளை எச்சரித்திருந்தான். இன்றும் அவனது வரவை எதிர்பார்த்து அதைத் தடுக்கவும் ஏற்பாடு செய்திருந்தான்.

ஆனால் எதையும் புரிந்து கொள்ளாமல், இப்படி ஓர் இடும்பையை அவளே இழுத்துக் கொண்டாளே!

தனக்குத் தெரியாதா என்று வீராப்பு வேறு!

நரேந்திரன் அவளைப் பற்றி என்ன நினைப்பான் என்பது வேறு, அவளுக்கு அவமானமாக இருந்தது.

முகம் கன்றத் தொடங்குவதை உணர்ந்து கால் பெருவிரலை நிலத்தில் அழுந்த ஊன்றி, அதைச் சமாளித்தாள். வேகமாக வேறு யோசித்தாள்.

அனுபவமின்மை காரணமாக, நிகிலா தவறு செய்திருக்கலாம். ஆனால் அவள் ஒன்றும் முட்டாள் அல்லவே!

அதற்குள் காஃபி வந்தது.

காஃபி அருந்தி முடித்ததும் காலி கப்புகளுடன் 'ட்ரே'யை உள்ளே கொண்டு போய் வைத்து விட்டுத் திரும்பி வந்தவள். மீண்டும் கணவன் அருகிலேயே ஒட்டினாற்போல் அமர்ந்தாள்.

மற்ற இருவரின் பேச்சில் ஓர் இடைவெளி வந்த போது கணவன் முழங்காலில் கை வைத்து, ''நரேன் சின்னப் பிள்ளைகளைக் கூட இந்தப் பக்கம் அதிகம் வேலை வாங்குவதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் வேலை வாங்குவது யார் யார் என்ன வேலை செய்ய வைக்கிறார்கள் என்பது பற்றி முழு விவரம் சரிவரத் தெரியவில்லை. சொல்லப் பயப்படுகிறார்கள் என்கிறார்கள். அது பற்றி எங்களுக்கு இவர் ஏதாவது உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டாள்.

அவள் கையைத் தன் கையால் மூடி, லேசாக அழுத்தி ''நிச்சயம் செய்வார்'' என்றான் நரேந்திரன் உற்சாகக் குரலில். ''மாவட்டத்துக்குக் கலெக்டர் போலத் தாலுக்காவுக்குத் தாசில்தார்தானே? தவறு நடப்பதைத் தடுக்கும் பொறுப்பு அவரதும்தான்.''

''உண்மைதான் சார். மேடத்துக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்ய, நானும் காத்துக் கொண்டு இருக்கிறேன் சார்'' என்றார் அவர்.

பிறகு அவளிடம் திரும்பி, ''சொல்லுங்க மேடம் இதுவரைக்கும் உங்களுக்கு என்னென்ன தக்வல் வந்திருக் கிறது? தகவல் கொடுத்தது யார்? இதெல்லாம் தெரிந்தால் வந்த தகவல் மெய்யா, பொய்யா என்று ஓரளவு கண்டுபிடிக்கலாம்'' என்றார் தாசில்தார்.

தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் அவரிடம் சொல்ல நிகிலா விரும்பவில்லை.

இவர் கைக்கூலி வாங்காதவர் என்று என்ன நிச்சயம்?

அப்புறம் வேண்டாத இடத்துக்கு விஷயம் போய் உதவி செய்தவர்களுக்கே ஆபத்தாக முடியலாம்.

அப்படியின்றி நல்லவராக இருந்தாலும் கூட வாய் தவறி எதையாவது சொல்லி வைத்து அது தகவல் கொடுத்தவர் களுக்கு கெடுதலாக முடியலாம் அல்லவா?

எனவே, ''சொன்னவர்கள் இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படி, ஒருவர் இரண்டு பேர் என்று இல்லை. பொதுவாக, எங்கள் சங்கத்துக்குப் புகார்க்கடிதங்கள் நிறைய வருகின்றன. கூடவே சமூக சேவைக்காக அங்கே இங்கே போகிற இடங்களிலும் காதில் விழுகிறது. அதையெல்லாம் சேர்த்துப் பார்த்துக் கண்டுபிடிக்கிறோம். அப்படித்தான் சாவடி பக்கத்தில் பிள்ளைகளைப் பீடி சுற்ற வைத்தவர்களைப் பிடித்து வழக்கு நடக்கிறது'' என்றாள் அவள்.

''ஆனால்...'' என்று தொடங்கியவர் அதை நிறுத்தி, ''சரியாகச் செய்தீர்கள் மேடம்'' என்றார் மரத்த குரலில்.

''குடும்ப வருமானம் பற்றி சார் யோசிக்கிறார்'' என்றான் நரேந்திரன்.

''அதற்கும் எங்கள் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது மிஸ்டர் மணி. சின்னப் பிள்ளைகளுக்கு அரை ஆள் சம்பளம் போதும் என்றுதானே, பிள்ளைகளைப் பிடிக்கிறார்கள்! பெரியவர்களுக்கு நல்ல வருமானம் வருகிற மாதிரி குடிசைத் தொழில் செய்ய வகை செய்து கொடுக்கிறோம். மெழுகு வர்த்தி, பத்தி, திடீர் சாம்பிராணி இப்படி பள்ளி முடிந்து வரும் பிள்ளைகள், பெற்றோருக்குக் கொஞ்சம் உதவுவதும், அந்தந்தத் தொழிலில் பயிற்சி பெறுவதும், அவரவர் விருப்பம். பள்ளி சென்று பயில முடியாமல் செய்து முதுகை ஒடிக்கும் எட்டு மணி நேரத்துக் கட்டாயப்பணி அல்ல'' என்றாள் நிகிலா.

''இது நல்ல ஐடியா அம்மா'' என்றார் தாசில்தார், குரலிலும் முகத்திலும் புது மரியாதையுடன்.

மனைவியைப் பெருமையுடன் பார்த்து, ''சமூக சேவை என்று ஒரு நாள் சேரிக்குச் சென்று பெருக்கிப் பிள்ளை குளிப்பாட்டி, அதை ஃபோட்டோ எடுத்துப் பத்திரிகையில் பிரசுரிக்கும் அமைப்புகள் போன்றதல்ல, இவர்கள் சங்கம். சும்மா போலீசுக்குக் கைகாட்டி விட்டால் தீர்ந்தது என்று இருக்கிறவர்களும் அல்ல; ஒரு நல்ல முடிவு காணும் வரை முனைந்து வேலை செய்கிறவர்கள்!'' என்று பெருமிதமாகக் கூறி விட்டு மீண்டும் மணியிடம் திரும்பினான் நரேந்திரன். ''உங்களால் முடிந்த உதவி செய்யுங்கள் சார் உங்கள் பெயர் வெளியே வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''கட்டாயம் செய்கிறேன் சார். அது என் கடமை இல்லையா? வாங்குகிற சம்பளத்துக்கே செய்ய வேண்டியது.

உதவியாகவாவது செய்யமாட்டேனா?'' என்று உணர்ச்சி பூர்வமாகக் கூறினார் அவர்.

மேலும் சிறிது நேரம் அன்றையப் பணி பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர் கிளம்புகையில்.

''அடுத்த ஆண்டு ஓய்வு பெறப் போகிறேன் சார். மனசைத் தொட்டுச் சொல்லுகிறேன். உங்களைப்போல, எல்லாவகை யிலும் பொருத்தமான கலெக்டர் தம்பதியை நான் பார்த்ததே இல்லை! பார்ப்பதற்குக் கண் நிறைந்து இருப்பதை மட்டுமாக நான் சொல்லவில்லை. ஒருத்தருக்கு ஒருத்தர் என்னமாக உதவி செய்கிறீர்கள். எப்படி ஒரே மனசாக இருக்கிறீர்கள். இப்படியே நீங்கள் எழுபது எண்பது வருஷம் நன்றாக வாழ வேண்டும்'' என்று வாழ்த்தி விட்டுப் போனார்.

முயற்சி வெற்றிதான். ஆனால் நிகிலாவுக்கு உள்ளூர உறுத்தியது.

ஏனெனில், அவர்கள் இருவரும் உள்ளம் ஒத்த தம்பதி அல்லவே!

மணி காது கேளாத தூரம் சென்றதும், ''நரேன்!'' என்று அவளைப் போலவே சொல்லிக் காட்டிச் சிரித்தான் நரேந்திரன்.

உடனேயே, ''நிகில்'' என்று நிகிலா, அவன் மாதிரியே சொல்லிக் காட்டினாள். இருவருக்குமே சேர்ந்து சிரிப்பு வந்து விட்டது.

## 15

'பூவிளை'யில் முகாம் இட்டுத் திரும்பியதிலிருந்து நரேந்திரனோடு தன் உறவு சற்று முன்னேறி இருப்பதுபோல் நிகிலா உணர்ந்தாள்.

சுகேசனின் தவிப்போடு, அவனைப் பழி வாங்குதல் முற்றுப் பெற்றதாகத் தோன்றி, பழைய காயம் முற்றிலும் ஆறிவிட்டது நிச்சயமாயிற்று.

கணவனோடு, முன்னை விட சகஜமாகப் பேசிக் கொள்ள முடிந்தது.

சாதாரணமாக அவன் அருகில் போய் அமர்வதும், அவன் அவள் கையைப் பற்றி கொள்வதும், இயல்பாயிற்று. 'நரேனும்', 'நிகிலும்' கூட அப்படித்தான்.

சலகலப்பான பேச்சு, சிரிப்பின் இடையில் நீலா, கணபதி, சுகேசன் எல்லோருமே முற்பிறவியில் அறிந்தவர்கள் போல நினைவே மறந்து போகலாயிற்று.

சின்னஞ்சிறார்களைக் காணும் போது குழந்தை வனிதா நினைவு மட்டும் அவ்வப்போது வரும். மற்றபடி, எந்த நினைவுக்கும், அவளை வாட்டும் சக்தி இல்லாது போயிற்று!

இதன் நடுவே அவளது பணிகளும் தீவிரமாக நடந்தன.

வெல்ல உருண்டை செய்யும் ஆலை ஒன்றில் இருபது சிறுவர்களை அடைத்துப் போட்டு சூடான பாகை உருண்டை பிடிக்க வைப்பதாகத் தகவல் வந்திருந்தது.

கடன்பட்ட பெற்றோர் செயலற்றிருக்க, பாகுச் சூட்டுக்குப் பயந்த சிறுவர்களை, அடித்து உதைத்து, வேலை செய்ய வைத்தார்களாம்.

எந்த இடம் என்பது வரை கிட்டத்தட்டத் தெரிந்து விட்டது.

வெறுமனே, பிள்ளைகளை மீட்டு என்ன பயன்?

இன்று மீட்டால், நாளை போய் இதே வேலையைச் செய்யப் போகிறார்கள்! பெற்றோரின் கடன் என்கிற பெரும் ஆயுதம், உரிமையாளர் கையில் இருக்கும் போது வேறு என்ன நடக்கும்?

அதை விட வில்லனைக் கையும் களவுமாகப் பிடிப்பது மேல் என்பது, நரேந்திரனின் அபிப்பிராயம்.

அப்படிப்பிடிக்கும் போது அந்த வழக்கு நடக்கும் போதே மறுபடியும் அதே குற்றத்தைச் செய்யத் தைரியம் வராதல்லவா?

எனவே சரியான நேரத்துக்காகக் காத்திருந்தார்கள்.

ஆனால் எப்படியோ மோப்பம் பிடித்தோ, என்னவோ கொஞ்ச நாட்களாக வெல்ல ஆலை மூடப்பட்டே கிடந்தது. செய்வது அறியாமல், சங்கத்தினர் திகைத்தனர்.

நரேந்தனுக்கும் மூச்சு முட்ட வேலை இருந்தது.

வகுப்புக் கலவரம் ஒன்று ஆங்காங்கே வெடிக்க அவன் ஒவ்வொர் இடத்துக்கும் ஓட வேண்டியிருந்தது.

பின்னின்று தூண்டி விட்ட அரசியல்வாதிகளை ஒதுக்கி, இரண்டு இனத்தாரையும் சேர்த்து வைத்துப் பேசி ஒருவாறு

சமாதானப்படுத்தி முடிக்கையில் இயற்கை சீறத் தொடங்கியது.

மாவட்டத்தின் தென் பகுதியில் பொய்த்து விட்டுப் போன ஆண்டுக்கும் சேர்த்து வைத்து மழை கொட்டோ, கொட்டென்று கொட்டி, ஊரெல்லாம் வெள்ளக்காடாகியது. ஆறுகள் குளங்கள் எல்லாம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. மணல் மூட்டை அடுக்கி காவல் போட்டு கவனிக்கும்படி ஆயிற்று.

எந்தத் துன்பத்திலும் தன் ஆதாயம் தேடும் சமூகவிரோதிகள் மீதும் ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

எல்லா ஏற்பாடுகளையும் முடித்து விட்டு அவன் வீடு திரும்பும் போது சில சமயங்களில் நள்ளிரவு கூடத் தாண்டிப் போயிற்று.

அவன் வந்து சேரும் வரை உண்ண உறங்க முடியாமல் தவித்த நிகிலா எரிச்சலுற்று 'நல்லவேளை நமக்குப் பிள்ளைகள் இல்லை. இருந்திருந்தால் ''காலைச் சாப்பாட்டுக்கு மட்டும் வரும் அந்த அங்கிள் யாரம்மா? என்று என்னைக் கேட்டிருப்பார்கள்!' என்று அலுப்புடன் கூறி விட்டு, ''இந்தாருங்கள் பாலை மட்டுமாவது குடித்து விட்டுப் படுங்கள்!'' என்று ஃப்ளாஸ்கில் எடுத்து வைத்திருந்த பாலை ஊற்றிக் கொடுத்தாள்.

கையில் வாங்கிக் கொண்டு ''ஏன்? அந்தப் பிள்ளைகளில் ஒன்று உனக்கே தெரியாமல் விழித்துக் கிடந்து 'இரவு வந்து பாலைக் குடித்து விட்டுப் போகும் அங்கிள் யாரம்மா?' என்று கேட்காதா?'' என்று வினவ, சட்டென இருவருமே விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர்.

அவசரமாகப் பால் டம்ளரை அருகிருந்த மேஜை மீது வைத்து விட்டுச் சிரித்தவன், சிரித்து முடித்து விட்டுப் பாலை எடுத்துக் கொண்டு, "என்னம்மா இது? விட் அடித்தால் சொல்லி விட்டு அடிக்கக் கூடாதா? பால் கொட்டி விட இருந்ததே" என்று அவசரமாகவே பாலையும் குடித்தான்.

"என்ன அவசரம்?" என்று கேட்டவளிடம் பொறு என்பது போல சைகை செய்தான்.

குடித்து முடித்து விட்டு "அப்பா! முடித்தாயிற்று. இனி நீ தாராளமாக விட் அடிக்கலாம்" என்றான். நரேந்திரன்.

"எங்கே?" என்று தோளைக் குலுக்கினாள் நிகிலா. "நீங்கள்தான். 'விட் அடிப்பதானால் சொல்லி விட்டுத்தான் அடிக்க வேண்டும்' என்று உத்திரவு போட்டு விட்டீர்களே! அதனால் விட் அடிக்கப் போகிறேன் என்று டேப்பில் பதிய வைத்து விட்டு அவ்வப்போது ஓட விட்டு விட்டு அதன் பிறகு விட் அடிக்கலாம் என்று தீர்மானித்து விட்டேன். அதனால் இப்போதைக்குக் கவலை வேண்டாம்!" என்றாள் அவள்.

மீண்டும் ஒரு தரம் சிரித்து விட்டு, "நீ சாப்பிட்டாயா?" என்று கனிவான குரலில் விசாரித்தான்.

"இம் நீங்கள் சொன்னது மாதிரி ஒன்பது மணிக்குள் நீங்கள் வரவில்லையானால், 'டாண்' என்று தட்டை எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்து விடுவேன். இல்லாவிட்டால்தான் திட்டி விடுகிறீர்களே!" என்றாள் அவள் குறையோடு.

"பின்னே? அங்கே மற்றவர்களுக்காகவாவது வாங்கி நானும் வேறு வழியில்லாமல் சேர்ந்து சாப்பிட்டு விடுகிறேன். நீ மட்டும் பட்டினி கிடந்தால் எனக்கு எப்படி இருக்கும்?

அதுதான் கோபம் வந்து விட்டது. சாரிம்மா'' என்று கையை நீட்டி, அவளது கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டு ஒரு கொட்டாவி விட்டபடி குளியலறையை நோக்கிச் சென்றான்.

வாய் கொப்புளித்து விட்டு வந்தவன், உடை கூட மாற்றாமல் அப்படியே படுக்கையில் விழுந்து உடனே உறங்கி விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த நிகிலாவுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

எவ்வளவு களைத்துப் போயிருக்கிறான்!

சுளித்திருக்கும் புருவத்தை நீவி விடக் கூட வழியில்லை!

ஆனால்... அருகே போய் அவன் முகத்தை மிருதுவாய் வருடி விட்டால் போடீ என்று விரட்டியா விடுவான்?

ஊகூம். அந்த மாதிரியெல்லாம் அநாகரிகமாக நரேந்திரன் நடந்து கொள்ளமாட்டான்.

ஆனால் சுகேசனால் அவன் இழந்த அந்தப் பெண் அவன் மனதில் இன்னமும் இருப்பதால் மெல்ல அவளது கையை விலக்கி ரொம்ப அமைதியாக 'அதிகமாய்க் களைத்திருக் கிறாய். போய்த் தூங்கு' என்று அனுப்பக்கூடும்.

போடீ என்று விரட்டுவதை விட அது கேவலம்!

ஆனால், அவன் மட்டும் அவளுடைய கன்னத்தைத் தட்டி கையைப் பிடித்து தலையை வருடி எல்லாம் பண்ணவில்லையா? என்று வாதாடியது அவள் மனம்.

ஆனால் அதை மட்டும்தானே செய்கிறான் என்று எண்ணும் போதே நிகிலா சுதாரித்து விட்டாள்.

பைத்தியக்கார முளை! சும்மா மடத்தனமாக என்னென் னமோ எண்ணுகிறது! இங்கேயே நின்று கொண்டிருந்தால் இன்னும் ஏதாவது கிறுக்குத்தனம் பண்ணும்!

மறுநாள் காலையில் நரேந்திரன் சில நாட்களாக இருந்த அவசரமின்றி சற்று சாதாரணமாக இருந்தான்.

சரியான தூக்கமின்றி உருண்டு புரண்டு விட்டு இரண்டு மணிக்கு மேல் உறங்கிய நிகிலா, தாமதமாக விழித்து எழுந்து வந்த போது, அவன் பத்திரிகையோடு உட்கார்ந்திருந்தான்.

அவளைக் கண்டதும் முறுவலோடு "குட்மார்னிங்" சொன்னவன், தொடர்ந்து "உனக்கு ஒரு நற்செய்தி. நம் வில்லன் மறுபடியும் வேலையைத் தொடங்கி விட்டாராம். இடம் மாற்றி வெல்லம் செய்கிறார்கள். அதே சிறுவர்கள் சாப்பாடு கொடுக்கச் சென்ற ஒருத்தியைப் பின் தொடர்ந்து கண்டு பிடித்திருக்கிறார்கள். எஸ்.பி.யிடம் சொல்லியிருக்கிறேன். எஸ்.பி. மனைவியும், உங்கள் அமைப்புதானே? மேலே வேலையைத் தொடங்குங்கள்" என்று புன்னகை செய்தான்.

பற்கள் வரிசையாக இருந்தால் சிரிப்பும் அழகாகி விடும் போல என்று எண்ணமிட்டவளுக்கு அவன் பேச்சு உரைக்க, "ஏன் நரேன், நீங்கள் வரவில்லையா?" என்று வினவினாள்.

"இல்லையம்மா. நான் தெற்கே போக வேண்டும். இங்கே அவ்வளவாக மழை இல்லை என்றாலும் அங்கே கொட்டிக் கொண்டுதான் இருக்கிறது. அணைக்கட்டு வேறு நிரம்பி அதைத் திறந்து விட்டாக வேண்டிய நிலை. அந்தத் தண்ணீர் எங்கேனும் ஊருக்குள் பாய்ந்து விட்டால் ஆபத்து! பார்க்க வேண்டும்."

"ஆனால் அந்த மாதிரி அபாயம் வரக்கூடிய இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கையாக முன்னெச்சரிக்கை கொடுத்து மக்களை வெளியேற சொல்லியிருப்பீர்கள் அல்லவா?"

உச்சுக் கொட்டினான், அவன். ''எவ்வளவோ எச்சரிக்கை கொடுத்தாயிற்று. கேட்டால்தானே? சின்ன வயதிலிருந்து பார்த்து விட்டார்களாம். ஒரு நாளும் இந்தப் பக்கம் வெள்ளம் வந்ததே இல்லையாம். அதனால் இந்த வெற்று மிரட்டல்களுக்காக வீட்டை விட்டு விட்டுப் போகத் தேவையில்லையாம்! என்ன குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டா போக முடியும்? அப்புறம் யாராவது பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்து விட்டதாகப் புகார் வரும்!''

''ஐயோ. அப்படிக் கூடச் சொல்லுவார்களா, என்ன?''

''சொல்ல மாட்டார்களா? இப்போது காஷ்மீரில் சொல்லவில்லையா? தீவிரவாதிகள் பர்தாவுக்குள் ஒளிந்து கொண்டு இங்கும் அங்கும் தாராளமாகப் போய் வருவார்கள். சந்தேகப்பட்டு விசாரித்தால் இந்தியப் பாதுகாப்புப் படை வீரர்கள் எங்கள் இனப் பெண்களைக் கெடுத்துவிட்டார்கள் என்று உலகமெங்கும் பரப்பவில்லையா? தன் எண்ணம் ஈடேற என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பதுதான் இன்றைய தத்துவம்!''

வியப்புடன் நோக்கி விட்டு, ''எப்போதும் நம்பிக்கையோடு இருப்பீர்கள். இப்போது வேறு மாதிரிப் பேசுகிறீர்களே!'' என்றாள் நிகிலா.

சிறு பெரு மூச்சுடன் பத்திரிகையை மடித்து வைத்தான் நரேந்திரன். ''வரும் ஆபத்து புரியாமல் வெறும் வம்படிக்கிறார்களே என்றிருக்கிறது. மனித உயிர் என்பது எவ்வளவு விலைமதிப்பற்றது! போனால், திரும்ப வருமா? 'வருமுன் காப்போம்' கதையைப் பாடமாகவே வைத்திருக்கிறார்கள். என்ன பிரயோசனம்? இப்போது சும்மா இருந்து விட்டு அப்புறம் 'குய்யோ முறையோ' என்பார்கள். அரசாங்க

யந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று பத்திரிகைக்குச் செய்தி கொடுப்பார்கள்!''

அரசாங்க யந்திரம் என்றால் அது நரேந்திரன் கீழ் செயல்படுவது! அப்படியானால் பழி அவனுக்கல்லவா வந்து சேரும்!

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''இதெல்லாம் இயற்கையின் கையில் இருக்கிறது. கட்டாயம் ஆபத்து ஏற்பட்டுத்தான் தீரும் என்று நூறு சதவீதம் உறுதியாக நம்மால் சொல்ல முடியாது என்பதால் இப்போது யாரையும் எதுவும் செய்ய முடியாது. நல்ல பயிற்சி பெற்றவர்களை அங்கங்கே நிறுத்தி வைத்திருக்கிறேன். 'வருகிறபோது காப்போம்' வேலையையாவது, உருப்படியாகச் செய்யலாமில்லையா? பார்ப்போம்'' என்று எழுந்து கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தான் நரேந்திரன்.

உடம்பும் மனமும் சோர்ந்து களைத்துப் போயிருக்கிறான்.

இவனுக்கு ஏதாவது செய்ய முடியாதா என்று அவள் மனம் துடித்தது.

''வந்து நானும் உங்களுடன் வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''வந்து?'' என்று சிறு முறுவலுடன் கேட்டான் அவன்.

''வந்து அங்குள்ள பெண்களிடம் பேசிப் பார்க்கிறேன். பெண்ணுக்குப் பெண் பேசி அவர்கள் மூலம் ஆண்களை வேறிடம் செல்ல ஒத்துக் கொள்ள வைக்கலாம் என்று நினைத்தேன்.''

''சமூக சேவகிகளைக் கொண்டு இந்த முயற்சியும் செய்தாயிற்று. ஆனால் பலன்தான் இல்லை. விடும்மா. முடிந்தவரை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம். ஆனால் உதவ முன்வந்ததே, யானை பலம் தந்த மாதிரி இருக்கிறது தாங்க்ஸ்'' என்றவன் அவள் தோளைப் பற்றி ஒரு தரம் அழுத்தி விட்டுக் குளிக்கச் சென்று விட்டான்.

விரைவிலேயே வேலைக்குத் தயாராகி வந்தவன் ''காலை உணவு நான் அங்கேயே பார்த்துக் கொள்ளுகிறேன். நீ இங்கே உன் வேலையைக் கவனி. இந்த முறை தப்ப விட்டால், அப்புறம் நம் வில்லனைப் பிடிப்பது அரிது!'' என்று எச்சரித்தான்.

வாயிலில் சுந்தரத்தின் குரல் கேட்டது.

இதற்கு மேல் நரேந்திரனைச் சாப்பிடச் சொல்லிப் பயன் இல்லை என்று உணர்ந்து அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினாள் நிகிலா.

அன்றைய அளவில் நிகிலாவுக்கும் வேலை சரியாக இருந்தது.

எப்போதுமே குற்றவாளிகளைப் பிடிக்கும் போது அங்கே நேரடியாகச் சங்கத்து அங்கத்தினர் செல்வதற்கு நரேந்திரன் அனுமதித்தது இல்லை. போலீஸ் அதிகாரிகளும் அப்படித்தான்.

குற்றவாளிகள் பிடிபடும் நேரத்தில், தப்புவதற்காக என்ன செய்யவும் தயாராக இருப்பார்கள். கொலை கூட அதில் அடக்கம்தான். அதனால் உங்களுக்கு ஆபத்து நேரக் கூடும் என்று விடுவார்கள்.

''உங்களுக்கு ஆபத்து நேராதா? எங்களுக்கு மட்டும்தான் உயிர் வெல்லமா?'' என்று கூட சங்கத்தின் துணிச்சல்கார சக அங்கத்தினர் ஒருத்திக் கேட்டுப் ப்பார்த்தாள்.

''நாங்கள், இதுபோன்ற நிலைமைகளுக்காகவே பயிற்சி எடுத்தவர்கள். இவன் இன்ன செய்வான் என்ற சூட்சுமம் பெருமளவு தெரிந்தவர்கள். அப்படித் தெரிந்திருந்துமே ஓரொரு சமயங்களில் காயம் உயிர் இழப்புகளைத் தவிர்க்க முடிவதில்லை. அதனால் வேண்டாம்'' என்று விட்டு விட்டுப் போய் விடுவார்கள்.

''மற்ற நாடுகளில் ராணுவத்திலேயே சேர்த்துக் கொள்ளுகிறார்கள்! இங்கேதான் பூச்சி காட்டுகிறார்கள்!'' என்ற முணுமுணுப்புக்கு எஸ்.பி.யுடைய மனைவி பதில் சொன்னாள். ''இங்கேயும் போலீசில் பெண்களைச் சேர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாற்றம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் இரண்டு தலைமுறை சென்ற பிறகு நம் நாட்டிலும் அப்படித்தான் இருக்கப்போகிறது என்கிறார் என் கணவர்'' என்றாள்.

எல்லோருமாகச் சேர்ந்து ஏதேதோ பேசிக் கொண்டு காத்திருக்கையில், 'வெற்றி' என்று சேதி வந்தது.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளையும் ஒரு சில பெற்றோரை யும் ஏற்றிக் கொண்டு இரு போலீஸ் வண்டிகள் வந்தன.

பிள்ளைகளின் பொத்துப் புண்ணாகிக் காய்ப்புப் பிடித்திருந்த கைகளைப் பார்க்கையில் எல்லாருக்கும் கண்ணீர் வந்தது. அதற்கு மேல் சாட்டையடிக் காயங்கள் வேறு.

'சீக்கிரம் சீக்கிரம்' என்று சின்ன முதலாளி அடிப்பானாம்!

நல்லவேளையாக அவன் அப்படி அடித்து விரட்டிக் கொண்டிருந்த போதே சுற்றி வளைத்துப் பிடித்திருக்கிறார்கள்.

"எங்கே அந்த நாய்? மூஞ்சியில் காறித் துப்ப வேண்டும்" என்றாள் ஆத்திரத்துடன் ஒருத்தி.

"அந்த ஆளுடைய மாமனார் பேரிய ஆள். பின்னோடு ஜாமீனில் எடுத்துப் போக வந்து விட்டார். ஸ்டேஷனில் விட்டு விட்டு வந்தோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

சிறுவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி செய்து கூட வந்த பேற்றோரிடம் அவர்களுக்குச் சுய சம்பாத்தியம், பிள்ளைகளின் படிப்பு இவைகளுக்காகச் சங்கம் செய்யப் போகும் உதவி எல்லாமும் சோல்லி அவர்களை ஒப்ப வைத்து அனுப்பி விட்டு சங்கத்தினரும் கலைந்து அவரவர் வீடுகளுக்குக் கிளம்பியபோது, மாலை ஐந்து மணிக்கு மேல் ஆகி விட்டது!

களைப்பாக உணர்ந்தவள், 'ஷவரில் சற்று நேரம் நின்று குளித்து விட்டுக் கையில் காஃபி சூப்புடன் சோஃபாவில் அமர்ந்து நரேந்திரன் இப்போது என்ன செய்து கொண்டிருக் கிறானோ என்ற யோசனையில் மூழ்கியிருந்த போது, காளிகா தேவி போல உக்கிரத்துடன் சேல்வி வந்து நின்றாள்!

## 16

அப்போதும், அட்டிகை, பதக்கம், நாலு பட்டை, கை நிறைய வளையல்கள் என்று நிறைய நகைகளோடுதான் வந்திருந்தாள் என்றாலும் முன் போல நடமாடும் நகைக்கடையாக அவள் வரவில்லை.

நகைகளின் மங்கிய தோற்றம் இவை எப்போதும் அணியப்படும் நகைகள் என்பதை அறிவித்தன.

செயற்கை ஜரிகைக் கரையிட்ட சுங்கிடிச் சேலை, கலைந்த கூந்தல், எல்லாமாக வீட்டில் வேலையாக இருந்தவள் அப்படியே கிளம்பி வந்திருக்கிறாள் என்று புரிய வைத்தன.

திடுமெனக் கிளம்பி அவளை நாடி வந்திருக்கிறாள் என்றால் சுகேசனுக்கு ஏதேனும் ஆபத்தா?

ஆபத்துக்கு உதவி நாடி வந்தாள் என்றால், பாண்டியன் சபைக்குச் சென்ற கண்ணகி போல, முகத்தில் இந்தச் சீற்றம் ஏன் என்று நிகிலா யோசிக்குமுன், வாயிற்புறம் நிற்கும் சேவகன் அவளோடு பின்னோடேயே உள்ளே ஓடி வந்தான்.

''அம்மா, உள்ளாரப் போய்க் கேட்டுக்கிட்டு வாரேன்னு சோல்லிக்கிட்டு இருக்கப்பவே, நெரிச்சுக்கிட்டு உள்ளே ஓடியாந்திட்டாங்கம்மா''என்றுஉத்திரவின்றி செல்வி உள்ளே வந்து விட்டதற்கு விளக்கம் கூறினான்.

''பரவாயில்லை தெரிந்தவர்கள்தான். நீ போ'' என்று அவனை அனுப்பிவிட்டு அவன் சென்ற பின் நிகிலா செல்வியிடம் திரும்பினாள்.

''உட்காருங்கள், என்ன விஷயம்? களைத்துத் தெரிகிறீர்களே, ஏதாவது சாப்பிடுகிறீர்களா?'' என்று பரிவாக வினவினாள்.

ஆத்திரப் பார்வையுடன், ''ஆங் நல்ல பாம்பு விஷம் இருந்தாக் குடு சாப்பிடுறேன்'' என்றாள் அவள்.

என்ன கஷ்டமோ என்று மேலும் பரிதாபம் மிக, ''என்ன விஷயம் செல்வி? சுகே... உங்கள் கணவருக்கு ஏதும் கஷ்டமா?'' என்று விசாரித்தாள்.

ஆனால் செல்வி கொதிப்புடன் ''திமிராடீ?'' என்று கேட்கவும், திகைத்துப் போனாள்.

''எ... என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று தடுமாற்றத்துடன் கேட்டாள்.

''ஆமாண்டி சொல்லுறேன், சொரைக்காயிக்கு உப்பு இல்லேன்னு சொல்லுறேன்... ஆனா, சொரைக்காய்ப் பத்தியெல்லாம் உனக்கு என்னடி தெரியும்? எங்கயாச்சும் எவ புருசனாவது வெள்ளையாக கண்ணுக்கு லெட்சணமா இருந்தா, அது ஒன் கொள்ளிக் கண்ணுலே படும். பாவீ! நீ உருப்புடுவியா? உன்ன அப்படியே கழுத்தை நெரிச்சு கொல்லணுமின்னு வருதே. ஆனாக் கையை வைக்குமின்னே, வாசல்ல நிக்கிற தடியனுகள விட்டு என்னையக் கொன்னு போட்டுருவியே. அதுக்குப் பயந்து கிட்டல்லா சும்மா கிடக்க வேண்டியிருக்கு'' என்று செல்வி பொரிந்து கொட்ட, நிகிலா மேலும் திகைத்தாள்.

தலையோ வாலோ இல்லாமல் செல்வி திட்டித் தீர்த்ததில் நிகிலா புரிந்து கொண்டது இது தான்.

செல்வி வீட்டில் ஏதோ பிரச்சினை. எப்படியோ அதன் காரணம் நிகிலாதான் என்ற தப்பான முடிவுக்கு செல்வி வந்திருக்கிறாள். அதனால் இங்கே வந்து இப்படிக் குதறுகிறாள்.

மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சிடுவது போல், எங்கோ இருக்கும் அவள் பிரச்சினையில் நிகிலா எங்கே வந்து சேர்ந்தாள்?

அது சரியாகப் புரியாத போதும் மனைவி நம்பும் படியாக யாரோ ஏதோ கதை கட்டியிருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் நிகிலா வர நேர்ந்தது.

அவளையே திட்டிய போதும் குமுறித் தவிக்கும் செல்வியிடம் அவளுக்குப் பரிதாபமே மிகுந்தது.

முதலில் இவளை அமைதிப்படுத்தி அவளிடமிருந்து விஷயத்தை அறிந்து, அப்புறம் முடிந்த உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தவளாய், "பாருங்கள் செல்வி நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ தவறாக எண்ணிக் கொண்டு பேசுகிற மாதிரி தோன்றுகிறது. முதலில் உட்கார்ந்து பிரச்சினை என்னவென்று கூறுங்கள். அதற்கு என்ன செய்யலாம் என்று பிறகு பார்க்கலாம்" என்றாள் பொறுமையாக.

"அய்யய்யோ! வயித்துப் பிள்ள வழுவி விழுற மாதிரி என்னமாப் பேசுகிறே! அவுக சொன்ன மாதிரி நீ ரொம்ப சாமர்த்தியக்காரிதான். போ! செய்யிறதெல்லாம் செஞ்சிட்டு என்னா பிரச்சினை, அப்படீன்னா கேக்கிறே? இந்த சாமர்த்தியம் இல்லையானால் புருஷன் கூட வந்திரக்கப்பவே இன்னொருத்தனைப் படுக்கக் கூப்புடுவியா? அய்யோ! அவுக சொன்னப்ப நான் அத நம்பாமப் போனேனே! அந்தப் பொண்ணு அளகாயிருக்குதுன்னு எல்லாரும் சொல்லு தாகன்னு. இவுகளுக்கும் ஆசை வந்திட்டுது. பாக்கப் போயிட்டு அத மாத்தி இப்படிச் சொல்லுதாகன்னு நினைச்சேனே! பாத்தா அவுக சொன்னதுதானே நெசம் போல இருக்குது. ஏண்டி கலெக்டரு பொண்டாட்டியின்னா என்ன அக்குருமம் வேணுமுன்னாலும் செய்யலாமின்னு நினைச்சியா? ஏதோ எம் புருஷன் நல்லவரு, யம்மா என் பொண்டாட்டிக்கு துரோகம் பண்ண மாட்டேன்னுட்டாரு. அதுக்காவக் கரம் வச்சிக்கிட்டு அவரைப் பிடிச்சு உள்ள போட்டுவிட்டியே. பாவி நீ உருப்பிடுவியா?"

மூச்சுவாங்குவதற்காக செல்வி நிறுத்தியபோது கூட, நிர்மலாவால் பேச முடியவில்லை. அவ்வளவு திகைத்துப் போயிருந்தாள்!

தப்பு செய்த ஒருவன் தான் தப்பிப்பதற்காக இப்படிப் பொய் சொல்லுவானா?

தப்பு எண்ணத்தோடு வந்தவன் சுகேசன், அவனை அடித்து உதைத்து அசிங்கப்படுத்தாமல் அனுப்பி வைத்ததற்கு அவன் செய்யும் கைமாறா இது?

என்ன திமிர் இருந்தால் சுகேசன் அவளைப் பற்றி இவ்வளவு கேவலமாகப் பேசியிருப்பான்?

பொங்கி வந்த ஆத்திரம் தலைமுடி பறக்க சிவந்த கண்களுடன் சத்தமாக மூச்சு வாங்கிய செல்வியைப் பார்க்கப் பார்க்க மட்டுப்பட்டது.

ஒருவேளை மனைவி இப்படிப் பிலுபிலுவென்று பிடிக்கிறவளாக இருந்தால், கண்டதைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளத்தான் தோன்றுமோ என்னவோ? நிகிலாவை அவன் சந்திக்கத் தேவையில்லை. ஆனால் மனைவி முகத்தில் தினம் தினம் விழித்தாக வேண்டுமே?

பாவம்தான்

செல்வியின் முக அமைப்பைப் பற்றி எண்ணி அதற்காக சுகேசன் மேல் நிகிலா பாவப்பட்டு விடவில்லை. முக அமைப்பு கடவுள் கொடுத்தது. அதைக் குறை சொல்லக் கூடாது என்ற கோட்பாட்டோடு 'அழகில்லாத பெண் என்று யாரும் கிடையாது. அழகுபடுத்திக் கொள்ளத் தெரியாத பெண்தான் உண்டு' என்பதிலும் அவளுக்கு ஓரளவு நம்பிக்கை உண்டு.

ஆனால் செல்வியின் பேச்சு பேசும் போது அவள் முகத்தை வைத்துக் கொள்ளும் விதம் பேசுகிற வார்த்தைகள்!

மெய்யாகவே சுகேசன் பாவம்தான்!

ஆனால் அடுத்து செல்வி சொன்ன 'கரம் வைத்து' 'பிடித்து உள்ளே போட்டது' எல்லாம் என்னவென்று தான் நிகிலாவால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

செல்வியிடம் கேட்கவும் தயக்கமாக இருந்தது.

அவள் திரும்பவும் 'சாமர்த்தியக்காரர், அப்படி, இப்படி' என்றால்? அதுவும் ஓரிரண்டு வார்த்தைகளில் பேச்சை முடிக்கக் காணோம், மூச்சைப் பிடித்துக் கொண்டல்லவா பேசுகிறாள்!

செல்வி அதுவரை கூறியதிலிருந்து விஷயத்தைத் தானே கண்டுபிடிக்க நிகிலா முயன்றாள்.

'கரம் வைத்து' என்றால் வஞ்சம் தீர்ப்பது என்று வைத்துக் கொள்ளலாம்.

'பிடித்து உள்ளே போடுவது' என்றால் கைது செய்வதைத்தானே அப்படிக் கூறுவார்கள்?

சுகேசனை எதற்காகக் கைது செய்திருக்கக்கூடும்?

எங்கே யார் எதற்காக என்பதையெல்லாம் இவளிடம் கேட்டால் சரியாகப் பதில் சொல்லுவாளா?

எஸ்.பி.யுடைய மனைவி இருக்கும் போது வந்திருந்தா லாவது விசாரிக்கக் வசதியாக இருந்திருக்கும்.

இல்லை இல்லை அவர்கள் முன்னிலையில் இவள் இந்த மாதிரிப் பேசினால் மிகவும் அவமானமாக இருந்திருக்கும்.

இப்போது நரேந்திரன் இங்கே இருந்தால் அவனே பார்த்துக் கொள்வான். அவனிடம் நிகிலா மான அவமானம் பார்க்கத் தேவையில்லை. பாவம் எந்த மழை வெள்ளத்துக் குள் மாட்டிக் கொண்டுஅவதிப்படுகிறானோ?

வேறு வழியின்றி செல்வியிடமே, "பாருங்கள் செல்வி உங்கள் பேச்சிலிருந்து உங்கள் கணவரைக் கைது செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. என்ன குற்றத்திற்காக எங்கே கைது செய்தார்கள் என்பதையெல்லாம் சொன்னீர் களானால், அவரை விடுவிப்பதற்கு, என்னால் ஆன உதவிகளைச் செய்கிறேன்" என்று விவரம் கேட்டாள்.

ஆனால், "அடியேய் என்ன ஆனாலும் ஆவட்டும்னு உன்னக் கொன்னே போட்டுருதேண்டி" என்று கைகளை நீட்டிக் கொண்டு செல்வி அவளை நெருங்கவும் ஒரு கணம் மிரண்டு போனாள்.

ஆனால் உடனே சுதாரித்துக் கொண்டு "நில்லுங்கள் செல்வி. இதற்கு மேல் ஓர் அடி எடுத்து வைத்தாலும் பியூனைக் கூப்பிட்டு விடுவேன். மரியாதையாக அந்த சோஃபாவில் போய் உட்கார்ந்து நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். இல்லையானால் உங்களையும் பிடித்து உள்ளே போடச் சொல்லிவிடுவேன்" என்று மிரட்டினாள்.

சும்மாவே நொந்து வந்திருப்பவளிடம் இப்படி மிரட்ட நிகிலாவுக்கு மனமே வரவில்லைதான். ஆனால் செல்வியை அடக்குவதற்கு வேறு வழி எதுவுமே அவளுக்குத் தெரியவில்லை!

'பிடித்து உள்ளே போட' என்ற மந்திரம், செல்வியிடம் விளைவித்த மாற்றம் நேரில் பார்த்தாலன்றி நம்ப முடியாது. அந்த அளவுக்கு அவள் பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டாள்.

குடுகுடுவென்று போய் நிகிலா காட்டிய சோஃபாவில் கையைக் கட்டிக் கொண்டு, தரையைப் பார்த்தவாறு செல்வி அமர்ந்திருந்ததைப் பார்க்கையில் முன்னவளுக்குச் சிரிப்புக் கூட வந்தது. கூடவே பாவமாகவும் இருந்தது.

ஆனால் இரண்டில் எதைக் காட்டுவதும் நல்லதல்ல என்று உணர்ந்து அடக்கிக் கொண்டு "இப்போது சொல்லுங்கள் உங்கள் கணவரை ஏன் கைது பண்ணினார்கள்?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

விழி உயர்த்தி செல்வி பார்த்த பார்வையில் வெறுப்பும் கோபமும் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவையிரண்டையும் மீறிய அளவில் பயமும் இருக்கவே அடங்கிய குரலிலிலேயே பதில் கூறினாள்.

"புடிச்சி உள்ளாரப்போடச் சொன்னவுகளே இப்படிக் கேட்டாக்க நானு என்னாங்க சொல்லுறது?" என்றுகண்ணைக் கசக்கினாள்.

"புடிச்சி உள்ளாரப் போடச் சொன்னவுகளா?"

"நான்தான் கைது பண்ணச் சொன்னேன் என்று யார் சொன்னது?"

"பிடிச்சுக்கிட்டுப் போன போலீசுக்காரங்கதான்! 'பணத்தை வாங்கிக்கிட்டு விட்டுருங்க'ன்னு கேட்டதுக்கு. 'கலெக்டரம்மா நேரடியாப் போட்ட உத்திரவு. ஒண்ணும் பண்ண முடியாது' அப்படின்னு சொன்னாங்க" என்றாள் செல்வி.

கலெக்டர் மனைவி நேரடியாகப் போலீசுக்கு உத்திர விடுவது இல்லை. புகார்தான் கொடுக்க முடியும் என்பதை இப்போது இவளுக்குச் சொல்லத் தேவையில்லை.

ஆனால் அவன் சம்பந்தப்பட்டு கைது வரை போனது. இன்றைக்கு அந்தக் குழந்தைப் பணியாளர்கள் தொடர்பாகத் தான்.

அப்படியானால் சிறுவர்களை வெல்ல உருண்டைப் பிடிக்க வைத்தது சுகேசனா?

சாட்டையடியால் அந்தப் பிள்ளைகள் உடம்பில் ஏற்பட்டிருந்த காயங்கள் நினைவு வர நிகிலாவின் நெஞ்சு கொதித்தது.

அவளைப் பெண் பார்க்க வந்த சுகேசன் நினைவுக்கு வந்தான்.

அவனுள் இந்த அரக்கத்தனமா?

அல்லது இதில் எதாவது தப்பு நேர்ந்திருக்கக் கூடுமா?

"உங்களுக்கு ஏதாவது கரும்பாலை வெல்ல உருண்டை பிடிக்கிற இடம் இருக்கிறதா?" என்று செல்வியிடம் மெல்லக் கேட்டாள்.

"இருக்கே!" என்றாள் அவள் பெருமையுடன், "இருவது பசங்கள வச்சு, வெல்ல உருண்டை பிடிச்சுக்கிட்டிருந்தோம்."

"ஏன் சின்னப் பிள்ளைகளை உருண்டை பிடிக்கச் சொன்னீர்கள்? பெரியவர்கள் பெரிது பெரிதாக வேகமாகப் பிடித்து விட மாட்டார்களா?"என்றாள் நிகிலா உள்ளே வேதனையுடன்.

"செய்வாக. ஆனா, சின்னப் பிள்ளைங்க சின்னச் சின்ன தாப் பிடிப்பாங்க. சின்ன உருண்டையின்னா கால்கிலோ அரைக்கிலோன்னு நிறுக்க வசதியா இருக்குமில்லை? மேல பெரியவுகளுக்குக் கூலி எம்புட்டு? பாதிப் பயக, அவக அப்பனுங்க கடனுக்கு வட்டியாத்தான் வேலை செய்றானுவ."

நிகிலாவுக்கு புரிய வைப்பதற்காக செல்வி தெளிவாகவே விளக்கினாள். விஷயத்தை விளக்கிக் கணவனை விடுதலை செய்ய எண்ணினாள் போலும்!

நிகிலாவுக்கும், செல்விக்குப் புரிய வைத்து விடும் வேகம்.

''அவர்கள் சின்னப் பிள்ளைகள். இளம் தோல் கூட்டோடு உருண்டை பிடிக்கும் போது கை பொத்துப் போய் விடாதா?'' என்றுகேட்டாள்.

ஆனால் ''எச்சிக்கலை நாயிங்க. அவனுக பொத்தா என்ன, செத்தா என்ன?'' என்றாள் செல்வி அலட்சியமாக.

கோபத்தை அடக்கிக் கொண்டு ''சுகேசன், அவர்களைச் சாட்டையால் வேறு அடித்திருக்கிறார். அது தப்பு'' என்றாள் நிகிலா.

''அதெப்படிங்க தப்பும்பீங்க? அடி விளுகாட்டி களுதைங்க வேலையே செய்யாதுங்களே! அப்பாருக்கு வயசாவுது பலமா அடிக்க முடியல. அதனால் நாந்தான் இவுகளைப் போயி நல்லா அடிச்சி வேலை வாங்கச் சொல்லி அனுப்பிச்சேன். அடிக்காட்டி நமக்கு சுருக்கா வேலை நடக்காதே.''

அந்தச் சிறுவர்கள் மனிதப் பிறவிகள் என்கிற எண்ணமே இவளுக்கு இல்லையே!

கடைசி முயற்சியாக ''நன்றாக யோசித்துப் பாருங்கள். வருங்காலத்தில் உங்களுக்கும் ஒரு குழந்தை பிறக்கும்...'' என்று தொடங்கியவளை இடை மறித்து ''ஏங்க தோசித்தனமா ஒரு பிள்ளைங்கிறீங்க? எங்கம்மா என்னைய ஒத்தப் பிள்ளையாப் பெத்துப் போட்டுட்டுச் செத்துப் போனாப்புல, நானும் போயிருவேனா என்ன? அஞ்சாறு பிள்ளைங்க பெத்துக்கிடணுமின்னு இருக்கேன்'' என்ற போது செல்வியின் முகத்தில் கூட மலர்ச்சி தெரிந்தது.

அந்த மலர்ச்சியோடு ''அதுக்கு விடாம அவுகளை செயில்ல போட்டிராதீங்கங்க வெளிய விடச் சொல்லிருங்க'' என்றுவந்த நோக்கத்தை விடாமல் வற்புறுத்தினாள்.

''அதைப் பிறகு பார்க்கலாம். முதலில் இதற்குப் பதில் சொல்லுங்க. உங்கள் பிள்ளைகளை இந்த மாதிரி அடித்து சூடு பாகில் வெல்ல உருண்டை பிடிக்கச் சொன்னால் உங்களுக்கு எப்படி இருக்கும்?'' என்று கேட்டாள் நிகிலா.

ஆத்திரத்துடன் எழுந்து நின்றாள் செல்வி. ''அட ஏங்க திரும்பத் திரும்ப தோசித்தனமாவே பேசுறீங்க? எம்பிள்ளைங்க, பெரிய பண்ணையாரோட பேரப் பிள்ளைங்க. அந்தப் பிச்சைக்கார நாயிங்க செய்யிற வேலைய எம்பிள்ளைங்க எதுக்குச் செய்ய போவுதுங்க? இன்னொரு தடவை இப்படிப் பேசாதீங்க. எங்க அப்பாரு காதுல விழுந்திச்சின்னா வெட்டிருவாரு! ஜாக்கிரதை!'' என்றாள் மிரட்டலாக.

## 17

பெரிய பண்ணை துரைசாமி சிறு வயதிலேயே மனைவியை இழந்தவர். மகளுக்காகவே அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் அதற்காக ஒழுக்க சீலர் என்று சொல்லி விட முடியாது.

கண்டபடி அலைந்தவர். ஆனால் மகள் மனம் வருந்த விட மாட்டார். அதனாலேயே அவளுக்கு விவரம் தெரிந்த பின் பழைய பழக்க வழக்கங்களை விட்டு விட்டவர்.

ஆனால் அதற்காக ஒரேயடியாக நல்லவராகி விட்டதாகச் சொல்ல முடியாது. தன் மூர்க்கத்தை அவர் வேறு வழியில் காட்டினார்.

நிலம் நீச்சு என்று அவருக்கு நிறைய இருந்தது. ஏழை பாழைகளுக்குக் கடனைக் கொடுத்து விட்டு அவர்களிடம்

நிலத்தைப் பிடுங்குவதும், குறைந்த கூலிக்கு வேலை வாங்குவதும், எவனாவது எதிர்த்தால் அடித்து உதைப்பதும் அவர் அடிக்கடி செய்வது.

வெட்டு, குத்து என்று மற்றவர்களை மிரட்டி மகளுக்கும் பழக்கமே. எனவே செல்வி அதையும் நிகிலாவிடம் பயன்படுத்திப் பார்த்தாள்.

விரல் நகத்தில் கூட அழுக்குப் படாத இந்த மேனா மினுக்கி வெட்டு குத்து என்றால் நடுங்கி விடுவாள் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால் நிகிலாவுக்கு நரேந்திரனின் பயிற்சி இருந்தது. எனவே இந்த மிரட்டலுக்குப் பயப்படாமல் "வெட்டி விட்டு அவரும் சிறைக்குக் களி தின்னப் போகப் போகிறாரா?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

'போலீஸ்' 'கைது' 'சிறை' என்ற வார்த்தைகளிடம் அவளுக்கு இருந்த அச்சம்தான் நிகிலாவுக்குத் தெரியுமே!

அவள் எதிர்பார்த்தது போலவே செல்வி கப்பென்று அடங்கி விட்டாள். "அய்யய்யோ சாமியாணை. எங்க அப்பாரு யாரையும் வெட்டவே மாட்டார். சும்மா ஒரு பேச்சுக்கு சும்மாதான் சொன்னேன்" என்று திக்கித் திணறி சமாளித்தாள்.

"ஆனா நீங்க அவுகள விடவே மாட்டீகளா?"

சுகேசனுடைய மாமனார், ஜாமீனில் மருமகனை அழைத்துப் போக ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக ஏற்கனவே இன்ஸ்பெக்டர் சொல்லியிருந்தார்.

ஜாமீனில் வெளி வருவதையே தந்தை தன் கணவனைச் சிறை மீட்டு விட்டதாக இவள் எண்ணிக் கொள்ளக் கூடும்.

மீண்டும் அதே பிழையை அதிகப்படி துணிச்சலுடன் செய்யவும் கூடும்!

எனவே சற்று அமர்த்தலான குரலில் "இப்போது விட்டு விடுவார்கள். ஆனால், இதே தப்பையே மறுபடியும் செய்தால் அப்புறம் சுகேசனுக்குப் பத்து ஆண்டு தீட்டி விடுவார்கள்" என்று மிரட்டியே அவளை அனுப்பி வைத்தாள்.

செல்வி சென்ற பிறகு வெகு நேரம் நிகிலாவுக்கு அந்தச் சிறுவர்களின் நினைவாகவே இருந்தது.

உரிய வளர்ச்சி இல்லாத எட்டு வயது, பத்து வயதுப் பிள்ளைகள்!

இவர்களை யாருமே மனிதர்களாகவே நினைக்க வில்லையே!

பண்ணையார், செல்வி, சுகேசன்!

இவர்கள் எல்லாரையும் விட நரேந்திரனும் கூட அவர்களை மனிதர்களாக மதிக்காதததுதான் அவளை மிகவும் பாதித்தது.

எவ்வளவோ மனிதாபிமானம் மிக்கவன் என்று நிகிலா கருதிய நரேந்திரன், அவர்களை ஒரு பழி வாங்கும் கருவியாக மட்டும்தானே நினைத்தான்.

சமூகப் பணிக்கு எத்தனையோ துறைகள் இருக்க இந்தக் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை எடுத்துக் கொள்ளும்படி அவன் சொன்னதே அவள் மூலமாக சுகேசனை மாட்டி வைக்கத்தான்!

சுகேசன் தப்பு செய்தவன்தான். அவன் தண்டனை அடைய வேண்டியவனும் கூடத்தான்.

ஆனால் அதனோடு தன் சொந்தப் பழி வாங்குதலை நரேந்திரன் இணைத்ததுதான் நிகிலாவுக்கு ஆத்திரமூட்டியது.

இந்தப் பழி வாங்குதல் பற்றி முதல் நாள் அவன் என்ன சொன்னான்?

அவனால் தூக்கி எறியப்பட்ட பெண் உயர்ந்த நிலையில் மெருகேறி ஜொலிப்பதைப் பார்த்து ஏங்க வைப்பதே, அவனுக்குரிய தண்டனை. அவனைப் பழி வாங்க அதுதான் சரியான வழி என்றான்.

பூவிளையில் 'காம்ப்'போட்ட போது, அவன் சொன்ன மாதிரியே அது நிறைவேறி பழி வாங்கு படலமும் அத்தோடு முடிந்து விட்டதுதானே?

அப்படித்தானே நிகிலா நினைத்திருந்தாள்.

பழி வாங்குதல் முடிந்த பின் மன நிலைகள் மாறக்கூடும். அப்போது மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நரேந்திரன் சொன்ன மாதிரி மனநிலைகள் மாறத் தொடங்கி விட்டதாகக் கூட எண்ணினாளே!

அவ்வப்போது மெய்யான குடும்ப வாழ்வு பற்றிய சிந்தனைகள், கனவுகள் கூட வரத் தொடங்கியிருந்தன! கனவுகளின் பின்னர் மனம் சோர்ந்து போகாமல் இனிமையான எதிர்பார்ப்புகளோடு சந்தோஷமான மனநிலையில் உற்சாகமாகவே தான் இருந்தாள்.

கணவனும் அதே மனநிலையில் இருப்பதாகத்தான் அவள் நினைத்தது.

அப்படி அல்ல என்பதே அவளுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

அத்தோடு நரேந்திரன் பழி வாங்குதலை மறக்கவில்லை என்பதோடு அதற்கு அவளையே கருவியாகப் பயன்படுத்திக் கொண்டான் என்பது அவளுக்கு மிகவும் ஆத்திரமூட்டியது.

அதுவும் அவளுக்குத் தெரியாமல்!

சினத்தில் சீறிக் கொண்டிருந்த நிகிலா கணவன் வருகைக்காக வெகு நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

கார் வந்து நின்ற சத்தம் கேட்டு சோஃபாவில் சாய்ந்து கிடந்த நிகிலா மெல்ல எழுந்து பார்க்குமுன் அவளைக் கவனியாதவன் போல, நரேந்திரன் நேராக அவனது படுக்கையறைக்குச் சென்று கொண்டிருந்தான்.

தெரிந்திருக்கும்! இன்று. சுகேசனைக் கைது செய்தது அவனுக்குத் தெரியாமல் இராது! கேட்பாளே என்று ஓடுகிறான்.

பின்னோடு சென்று கேட்க முடியாமல் அப்படி என்ன இமயமலை தாண்டியா ஓடி விடுவான்?

ஆத்திரத்துடன் பின் தொடர்ந்து சென்று "குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பான குற்றவாளி சுகேசன் என்று என்னிடம் ஏன் சொல்லவில்லை?" என்று கோபமாகக் கேட்டாள்.

சட்டை பட்டனைக் கழற்றத் தொடங்கியிருந்தவன், உணர்ச்சியற்ற பார்வையை உயர்த்தி இவள் என்ன சொல்லுகிறாள் என்பது போல அவளைப் பார்த்தான்.

ஆகா! ஒன்றுமே தெரியாத மாதிரி என்ன நடிப்பு?

இதிலெல்லாம் ஏமாந்து விட அவள் என்ன முட்டாளா?

சினம் மிக "புரியவில்லை? சுகேசன்! சுகேசன் அவரைக் கைது செய்ய என்னையே பயன்படுத்தி இருக்கிறீர்களே. அது ஏன் என்று கேட்கிறேன். அவர் என்ன நினைப்பார்? நான்தான் பழி வாங்குவதாக எண்ணமாட்டாரா? உங்களுக்கு வேண்டுமானால் நீங்கள் நேரடியாக மோத வேண்டியதுதானே? எனக்கே தெரியாமல் என்னை வைத்து அது என்ன மோசடி வேலை?" என்று வாயில் வந்தபடி கத்தத் தொடங்கினாள்.

சட்டெனக் கையை நீட்டி அவளைப் பற்றி இழுத்து தன்முன்னே அவன் நிறுத்திக் கொண்ட போதுதான், அவள் பேச்சு நின்றது.

இறுகிய முகத்துடன் அவளை ஓரிரு கணங்கள் வெறித்தவன். ''அடுத்த பாடம் ரொம்பவே பின் தங்கிப் போயிற்று போலும்!'' என்று அவளை இறுக அணைத்து அழுந்த முத்தமிட்டான்.

சற்று நேரம் அது சில வினாடிகளாகவே இருக்க வேண்டும். நிகிலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

இதுபோன்ற நிலைகளை ஓரளவு அவள் கற்பனை பண்ணத் தொடங்கியிருந்தது, உண்மையே. ஆனால், அந்தக் கற்பனையில் நரேந்திரன் அவளைக் கண்ணில் காதலோடு அல்லவா கட்டி அணைப்பான்?

இப்படி முகத்தைக் கல் மாதிரி வைத்துக் கொண்டு அல்லவே!

மனம் ஏதேதோ சிந்தித்த போதும், கணவனின் அணைப்பு நிகிலாவை என்னவோ பண்ணத் தொடங்கியது.

ஆனால் அவள் நெகிழத் தொடங்கிய நேரத்தில், திடுமெனப் பற்றியிழுத்த மாதிரியே சட்டென அவளை விட்டு விலகிய நரேந்திரன் அறையின் ஒரு புறமாக இருந்த 'சிட் அவுட்'டுக்குப் போய் அங்கே போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் தொப்பென விழுந்தான்!

இப்போதும் நிகிலாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

எதிர்பாராத போது ஏன் அணைத்தான்?

ஏற்கத் தொடங்கிய போது ஏன் விலகினான்?

உள்ளூர ஏதோ வலி மாதிரி நமநமத்தது.

இப்போது என்ன செய்ய வேண்டும்? அவன் பின்னோடு சென்று விளக்கம் கேட்பதா என்றால், அதற்கும் அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

தவிப்புடன் அவள் நிற்கும் போது "மேடம்!" என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது.

அவசரமாக ஹாலுக்கு வந்து பார்த்தால் பி.ஏ. சுந்தரம் நின்று கொண்டிருந்தார்.

"என்ன சார் இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா? வழக்கமாக உங்களை வீட்டில் விட்டு விட்டுத்தானே, சார் வருவார்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமாம்மா. சாருடைய நல்ல மனசு இன்றைக்கு இந்தப் பக்கமாக வந்ததால் அவரை இறக்கி விட்டு விட்டு அப்புறமாக நான் போய்க் கொள்கிறதாகச் சொன்னேன்."

"பின்னே?"

"உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போக வேணும் என்று இருந்தேன். சார் இன்றைக்கு நாள் முழுக்க இப்போது காரில் வந்தது தவிர உட்காரக் கூட இல்லையம்மா. சாப்பிடவும் இல்லை."

"ஏன்? ஓ! அவர் பயந்தது போல வெள்ளம்."

"வெள்ளம்தான். ஆனால் அந்த வெள்ளம் மட்டும் இல்லையம்மா. அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருந்ததால் சேதம் இல்லாமல் எல்லாரையுமே காப்பாற்ற முடிந்தது. ஆனால் இன்னோர் இடம்! மழை நீர் சேர்ந்தால் ஓடையாக வருமே! அது போலச் சிலது சேர்ந்து காட்டாறு மாதிரியாகி ஒரு கிராமத்தையே சூழ்ந்து விட்டது. ஒவ்வொர் இடமாக வேலை நடப்பதைக் கவனித்தபடி ஜீப்பில் சுற்றிக் கொண்டிருக்கிறோம். வழியில் பார்த்தால் இப்படி ஜீப்பில் நீச்சல் தெரிந்தவர்கள் சாரும் இன்னொரு நோஞ்சானும்

மட்டும்தான். அங்கே குஞ்சும் குளுவானுமாக ஒரு கூட்டம். அங்கங்கே கூரை மேல் தொங்கிக் கொண்டு இருக்கிறது. நல்லவேளையாக மழை நின்று விட்டதால் தண்ணீரில் அதிக இழுப்பு இல்லை. ஆனால் தண்ணீர் உயரம் ஏறிக் கொண்டே போகிறது. ஷூவைக் கழற்றிப் போட்டு விட்டு சார் வெள்ளத்தில் இறங்கி விட்டார். நெல்லைப் பையன் இரண்டு 'ட்ரிப்'போடு நின்று விட்டான். கடைசி ஆளைக் காப்பாற்றி வரும் வரை சார் ஓயவில்லை. அசதியிலே பட்டினியாகவே படுத்தாலும் படுத்து விடுவார். அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைத்தேன். வரட்டுமாம்மா?'' என்று விடை பெற்றுச் சென்றார் அவர்.

மனம் சுட்டது அவளுக்கு.

நரேந்திரன் என்ன மாதிரியான வேலையாகப் போகிறான் என்பது அவளுக்கு தெரியாததில்லை. அதையும் கூட அவன் பல மடங்காகச் செய்து விட்டு வந்திருக்கிறான்!

களைத்து வந்தவனிடம் இதமாகப் பேசாமல் கண்டபடி கத்தி விட்டாளே!

வேகமாக உள்ளே சென்று பார்த்தாள்.

பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்தவன் தலை தொங்க அப்படியே உறங்கி விட்டிருந்தான்!

ஓடிப் போய் ஒரு தலையணையை எடுத்து வந்து ஒருகையால் தலையை மென்மையாகத் தாங்கி மறு கையால் தலையணையை அண்டை கொடுத்துத் தலையை நேராக வைத்தாள்.

சமையல் அறைக்குச் சென்று ஆராய்ந்தாள். சாதம் இருந்தது.

'ஃப்ரிஜ்ஜில்' இருந்த தயிர் சேர்த்துப் பிசைந்து கிண்ணத்தில் ஊறுகாயும், கூடவே ஸ்பூனும் எடுத்து வந்தாள்.

மோடாவை இழுத்துப் போட்டு உணவு வகையறாவை அதில் வைத்து விட்டு மெல்ல அவன் நெற்றியை வருடினாள்.

அரைக்கண்ணாக விழித்தவனிடம், ''கொஞ்சம் ஒரு நாலு வாய் சாப்பிட்டு விட்டுத் தூங்குங்கள். வெறும் வயிற்றோடு படுத்தால் நாளைக்கு அசதியாக இருக்கும்'' என்று மென் குரலில் உரைத்தாள்.

புருவம் சுளித்த அவன் வாய் திறந்து மறுக்குமுன், வாய்க்குள் ஒரு ஸ்பூன் சாதத்தை வைத்தாள்.

நாலைந்து வாய் சாதம் இப்படியே வாங்கியபின், சற்று நிமிர்ந்து அமர்ந்து சாதக்கிண்ணத்தைத் தன் கையிலேயே வாங்கிக் கொண்டு சாப்பிடலானான்.

உண்டு முடித்து, ''தாங்க்ஸ்'' சொல்லி விட்டு எழுந்து குளியலறைக்குள் மறைந்தான்.

நரேந்திரன் திரும்பி வருமுன் அவனது இரவு உடையை எடுத்து வைத்து விட்டுப் படுக்கையிலும் தலையணையைச் சரிப்படுத்தி வைத்தாள்.

முன்தினம் போலவே, படுத்ததும் நரேந்திரன் உறங்கி விட, மெல்லிய போர்வையை எடுத்து அவனை மூடி விட்டு விட்டு, நிகிலா ஓசைப்படாமல் தன்னறைக்குச் செல்லலானாள்.

வாயில் கதவை எட்டியிருப்பாள். ஒரு மெல்லிய முனகல் சத்தம் அவளைத் தடுத்து நிறுத்தியது.

நரேந்திரனா?

உதட்டைக் கடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தால் அவன்தான். உடம்பை முறுக்கிப் புரண்டவாறு முனகிக் கொண்டிருந்தான்.

உடம்பில் என்னவொரு வலியிருந்தால், இப்படி முனகுவான்?

திரும்பிச் சென்று கட்டிலில் ஓர் ஓரமாக அமர்ந்து, அவன் கால்களை மெல்லப் பிடித்து விடலானாள்.

சற்று நேரம் அமைதியாக உறங்கியவன் இப்போது கைகளை முறுக்கினான்.

நிகிலா சற்று முன் நகர்ந்து நரேந்திரனின் கரங்களை அமுக்கி விடலானாள்.

நீச்சல் என்றால் உடம்பு முழுவதுமே வேலை செய்வது அல்லவா?

முதுகு, வயிறு, தோள், மார்பு... கணவன் அசைந்தும் நெளிந்தும் கொடுக்க இடத்துக்குத்தக்க, அவனுக்கு இதமாக அவளும் வருடியும் தடவியும் அமுக்கியும் கொடுத்தாள்.

அவன் முதுகைச் சற்று எம்பி அழுத்தித் தடவிக் கொடுத்தபடி தான் இருந்த நிலையை எண்ணிப் பார்த்த நிகிலா, அப்படியே திகைத்துப் போனாள்!

கிட்டத்தட்ட அவனை அணைத்த நிலை!

கணவனுக்கு இதமாகத் தடவி விடுவதற்காக அங்குமிங்கும் நகர்ந்ததில் எப்படியோ இந்த மாதிரியாகி விட்டிருக்கிறது.

நல்லவேளை! நரேந்திரன் அயர்ந்து தூங்குகிறான்.

அவன் மட்டும் விழித்து இந்த நிலையில் அவளைப் பார்த்தால் அவளைப் பற்றி என்ன நினைப்பான்! அதற்கு முன் மெல்ல நகர்ந்து விட வேண்டும் என்று எண்ணியவாறே பார்வையை அவன் முகத்துக்குத் திருப்பியவள் மீண்டும் திகைத்தாள்.

ஏனெனில் நரேந்திரனின் திறந்திருந்த கண்கள், அப்போது அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தன!

சற்று நேரம் சிந்திக்க செயல்பட எதுவுமே முடியாமல் மூளை, உடம்பு எல்லாமே மரத்துப் போய் விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

திறந்த கண் திறந்தபடி அவனையே பார்த்தபடி கிடந்தவளுக்கு ஒருவாறு சுரணை வரத் தொடங்கி இமை தட்டியபோது, கண்ணில் கேள்வியுடன் அவனது கரங்கள் அவளை மெல்ல அணைத்தன.

அப்போதும் அவள் விரும்பியிருந்தால் விலகிப் போயிருக்கலாம் தான்; அவன் தடுத்திருக்கமாட்டான். அவளது விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்திருப்பான் என்றுதான் தோன்றியது.

ஆனால் அவள் போகவில்லை!

## 18

மறுநாள் காலை மிகவும் அழகாக விடிந்திருப்பது போல நிகிலாவுக்குத் தோன்றியது.

மாவட்டத்தின் தென் பகுதியை வெகுவாகப் பாதித்த பெருமழைக்கு ஒத்து ஊதுவதுபோல, முன் தினம் வரை, மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம் வெளி வாங்கி காலைச் சூரியன் அழகாக உதயமானான்.

கலெக்டர் பங்களாவைச் சுற்றிலும் இருந்த பெரிய மரங்களில் வசித்த பறவைகள் மிக இனிமையாக ஒலி யெழுப்பி, நிகிலாவிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன.

நிகிலாவுக்குத் தாயின் நினைவு வந்தது.

இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள அன்னை இல்லையே!

ஆனால் அன்னை எங்கே இருந்தாலும் இப்போது தன்னை ஆசீர்வதித்துக் கொண்டுதான் இருப்பாள் என்பது மட்டும் அவளுக்கு நிச்சயம்!

இப்போதும் கணவன் மனைவி இருவருக்குள்ளும் எல்லாமே சரியாகி விட்டது என்று சொல்லி விட முடியாதுதான்! ஆனால் இனி எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கை உருவாகி விட்டது.

மாமரத்துக் குயில் இனிமையாகக் கூவியது!

ஜன்னல் வழியே பார்த்த போது நரேந்திரன் பங்களாவைச் சுற்றி ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

உடம்பைக் கச்சிதமாக வைத்துக் கொள்கிறான் என்றால் சும்மாவா?

வீட்டைச் சுற்றி ஓடுவதும், அதற்கு மேல் தொடர்ந்து சற்று நேரம் உடல் பயிற்சி செய்வதும், அவனது தினசரி வழக்கம்.

மற்றவர்கள் போல வெளியே போய் ஓடாமல் வீட்டைச் சுற்றி ஓடுவதற்கு நரேந்திரன் ஒரு காரணம் கூடச் சொல்லுவதுண்டு.

கலெக்டர் தினமும் பங்களாவைச் சுற்றிச் சுற்றி வருவதால்தான் தோட்டம் இவ்வளவு சுத்தமாக இருக்கிற தாம். இல்லாவிட்டால் அங்கங்கே குப்பை சேர விட்டு விடுவார்களாம்!

அவளையும் கூட ஓட வருமாறு அழைப்பான்.

"கலெக்டரம்மாவும் சேர்ந்து ஓடினால், அப்புறம் புல் பூண்டுகூட இல்லாமல் ஒரேயடியாகச் சுத்தம் செய்து

விடுவார்கள். அதனால் வேண்டாம்'' என்று நிகிலா மறுத்துவிடுவாள்.

வீட்டுக்குள்ளேயே யோகா செய்யத்தான் அவளுக்குப் பிடிக்கும். உடலுக்கும் உள்ளத்துக்கும் சேர்ந்த பயிற்சி என்று செய்வாள்.

நரேந்திரன் அடுத்த சுற்று வந்து கொண்டிருந்தான்.

ஜன்னல் அருகே நின்றவளைப் பார்த்துப் பல் தெரியச் சிரித்துக் கையாட்டி விட்டுப் போனான்.

பதிலுக்குப் புன்னகை செய்த போதும் அவளது கன்னங்களில் சிவப்பும் ஏறிற்று!

நிகிலா குளித்து விட்டு வந்த போது நரேந்திரன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

மாவட்டப் பத்திரிகைகள் எல்லாமே அவன் புகழ் பாடியிருந்தன.

'திருநெல்வேலி கலெக்டரின் தீரச் செயல்' என்று எட்டுப் பத்திச் செய்தியாகக் கூட பிரசுரித்திருந்தார்கள்.

பத்திரிகையை டீபாய் மேல் போட்டு விட்டு டீ ஷர்ட் காலரைத் தூக்கி விட்டுப் பெருமை காட்டி விட்டுச் சிரித்தான் நரேந்திரன்.

ஆவலோடு செய்தியைப் படித்தாள் நிகிலா.

முதல் நாள் சுந்தரம் சொன்னதுதான். இன்னும் கொஞ்சம் விவரமாகப் போட்டிருந்தது. காப்பாற்றப்பட்டவர்கள் சிலரின் பேட்டியும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மாநிலப் பத்திரிகைகளிலும், சின்னதாக விவரம் வெளியிட்டிருந்தார்கள். நிகிலாவுக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

தன் மகிழ்ச்சியைக் கணவனுக்குக் காட்ட விரும்பியவள், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவன் கன்னத்தில் ஒரு தரம் இதழ் பதித்து விட்டு முகம் சிவக்க உள்ளே ஓடிப் போனாள்.

பின்னோடு சென்று அவளை இறுக அணைத்தான் அவன்.

"நிகில்..." என்று அவன் ஏதோ பேசத் தொடங்குமுன் டெலிஃபோன் மணியடித்தது.

வந்து எடுத்தவனின் முகத்தில் வியப்பும் மரியாதையும் பரவின.

எதிர்முனைப் பேச்சைச் சற்று நேரம் கேட்டு விட்டு, "உங்கள் ஆசி, ஐயா" என்று மரியாதையுடன் கூறி விட்டு ரிசீவரை வைத்தான் நரேந்திரன்.

"யார்? யார் பேசியது?" என்று ஆவலும் வியப்புமாகக் கேட்டாள் அவள். ஏனெனில் சட்டென்று யாரையும் அவன் 'ஐயா' என்றழைத்துப் பேசி விடுவதில்லை.

"முதலமைச்சர்! பத்திரிகையில் பார்த்துவிட்டு 'இன்டலி ஜன்சி'ல் விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டு பாராட்டினார்" என்றான் அவன்.

"அவர் சொன்னதை அப்படியே சொல்லுங்களேன், ப்ளீஸ்."

மனைவியின் ஆர்வத்தைப் பார்த்துச் சிரித்து விட்டு அவன் சொன்னான். "சின்ன வயதிலேயே இவ்வளவு உயர்ந்திருக்கிறீர்கள். இன்னும் மிகப் பெரிய நிலைக்கு வர வேண்டும். இன்றையக் கோட்பாடுகளையே இதே மாதிரி கடைப்பிடியுங்கள்" என்றார்.

நிகிலாவின் பூரிப்பு, அவள் முகத்தில் தெரிந்தது.

அவள் முகத்தைப் பார்த்தபடி, "எனக்கு ஒரு சந்தேகம், நிகில்" என்றான் அவன்.

அவள் கேள்வியாய் நோக்கவும் "தமிழில் பானை பிடித்தவள் பாக்கியம் என்று சொல்வார்கள். சரியாக சொல்லப் போனால் நேற்றுத்தானே நாம் உண்மையான கணவன், மனைவி ஆனோம்? இந்தப் பாராட்டெல்லாம் அதன் விளைவாக இருக்குமோ? ம்?" என்று கண் சிமிட்டி, அவன் கேட்கவும், சட்டெனச் சிவந்து "ச்ச் போங்கள்!" என்று குழைந்தாள் அவள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் சற்றே யோசனை படிந்தது.

தொடர்ந்து அவள் முகத்திலும் அதன் எதிரொலி தெரிந்தது.

சுவர்க் கடிகாரத்தை எட்டிப் பார்த்து விட்டு, "கிளம்ப வேண்டும்... நேற்றே கேட்டாயே! இன்று என்னோடு வருகிறாயா? இன்று நீயும் உதவி செய்யலாம். நானும் ஒரேயடியாக ஓட வேண்டியிராது" என்று அழைத்தான்.

இடையில் தனிமை கிடைத்தால் சொந்த விஷயம் பேச நினைக்கிறானோ என்று தோன்றியது நிகிலாவுக்கு! தெளிவுபடுத்திக் கொள்ளுதல், அவளுக்கும் அவசியம் தானே? அது முடியாவிட்டாலும் அவன் கூடவே இருக்கலாம்.

என்னவோ அவனைப் பிரிந்திருக்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒருவேளை அவனுக்கும் அப்படித்தான் இருக்கிறதோ என்று எண்ணுகையில், உள்ளூரப் பூ மலர்ந்தது.

எழுந்து "எவ்வளவு நேரத்தில் தயாராக வேண்டும்?" என்று கேட்டாள்.

"உன்னிடம் எனக்குப் பிடித்தது இது ஒன்று. அனாவசியக் கேள்விகளில் நேரத்தை வீணாக்கமாட்டாய்" என்றான் அவன் பாராட்டும் பார்வையுடன்.

தலை சரித்து ஓரக் கண் பார்வையில் குறும்புடன் அவள் நோக்கும்போதே, ''இது ஒன்றுதான் என்று சொல்லவில்லை தாயே!'' என்றான் அவன் பயந்தவன் போல.

''அதுதானே பார்த்தேன்!'' என்று அழகாகத் தலையசைத்துச் சிரித்தாள் அவள்.

தனிமை கிடைக்காதது மட்டும் அல்ல. பெருமளவு நேரம் இருவரும் பிரிந்துதான் இருக்க வேண்டியிருந்தது.

நரேந்திரன் செய்திருந்த முன்னேற்பாட்டு நடவடிக்கை களால் உயிர்ச் சேதம் ஏற்படாமல் தடுக்க முடிந்தது. ஆனால் பொருட்சேதத்தை ஒன்றும் பண்ண முடியவில்லை!

இயற்கையின் சீற்றத்தை யார் என்ன செய்ய முடியும்?

வெள்ள நீருக்குள் மூழ்கி நின்ற பயிர்கள், சாய்ந்து விட்ட வாழை மரங்கள் சுவர் அரிக்கப்பட்டு விட்ட குடிசைகள் தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டுவிட்ட ஆடுமாடு கோழிகளோடு சேமிப்புகள்!

சேதத்தைக் கணக்கிட வேண்டியிருந்தது.

வீடிழந்தோருக்குத் தங்க நிழலுக்கும், உணவுக்கும் முதலில் ஏற்பாடு செய்தார்கள்.

பள்ளிக் கூடங்கள் எல்லாம் மக்கள் தங்குவதற்குப் பயன்பட்டன.

காயம் பட்டவர்களுக்கு முகாம் அமைத்து மருத்துவ உதவி செய்தார்கள்.

அரசு வண்டிகள் மட்டுமின்றி வசதியுள்ள சில நல்லவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கொடுத்த கார், ஜீப்புகளும் மக்களை இங்கும் அங்கும் ஏற்றிச் சென்றன.

நரேந்திரன் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு அலைந்தான்.

பதினோரு மணிக்கு மேல் காலை உணவை நிகிலாவுடன் நின்று கொண்டே சாப்பிட்டான்.

மருத்துவ முகாமில் அவளை விட்டு விட்டு "முடிந்தால் மதியம் பார்ப்போம்" என்று சொல்லிச் சென்றான்.

அவன் அப்படிச் சொன்னதும் அதை அவள் ஆவலாக எதிர்பார்த்ததும் நிகிலாவைப் பெரும் ஆபத்தில் கொண்டு போய்ச் சேர்த்தன!

காலையில் சமாளிக்க முடியாத அளவுக்கு வந்த துன்புற்றோர் கூட்டம் நேரம் ஆக ஆக மெல்ல மெல்லக் குறைந்து ஒரு மணிக்கெல்லாம் ஓரிருவர் என்ற அளவில் வந்து நின்றது.

பணி புரிய வந்த எல்லோரும் இலகுவாகப் பேசிக் கொள்ள முடிந்தது.

நரேந்திரனின் முந்தைய நாள் சாகசம் பற்றிய பேச்சுதான் ரொம்பவும் அடிபட்டது.

நிகிலா நரேந்திரன் திருமணமும் சமீபத்தில் தான் நடந்தது எனவும் கேலியும் கிண்டலுமாக பேச்சே தொடங்கி விட்டது.

மதியம் சுமார் ஒன்றரை மணியளவில் சாம்பல் வண்ணக் கார் ஒன்று வந்தது. "கலெக்டர் அய்யா உங்களைச் சாப்பிடக் கூப்பிட்டு வரச் சொன்னார்" என்றான் கார் டிரைவர்.

"இல்லையே. அவர்தானே இங்கே வருவதாகச் சொன்னார்" என்றாள் நிகிலா.

"அவுகளுக்கு வர முடியல்லையம்மா. அதான் உங்களை அங்கிட்டு கூட்டி வரச் சொன்னாக!" என்றான் டிரைவர் மறுபடியும்.

"என்ன கல்யாணம் நடந்து நாலு மாதம்தானே ஆகிறது. சாப்பிடுகிற பத்து நிமிஷம் உங்களோடு பேசிக் கொண்டே

சாப்பிட ஆசைப்படுகிறார் போல போங்களேன் மேடம்! ரொம்பத்தான் பிகு பண்ணிக் கொள்ளுகிறீர்கள்!'' என்றாள் அவ்வளவு நேரத்தில் சிநேகிதியாகி விட்ட டாக்டர் தமயந்தி.

''ஆமாம் மேடம். இப்போது, நோயாளிகள் வருவதும், கிட்டத்திட்ட நின்று விட்டது. நாங்களே, சமாளித்து விட முடியும். நீங்கள் கவலைப்படாமல் போய் வாருங்கள்'' என்றான். இன்னோர் இளம் வைத்தியன்.

அப்போதும், அந்தக் காரைப் பற்றிய எதுவோ, நிகிலாவை உறுத்தியது.

உள்ளூர வேகமாக யோசித்தவள், ''இது, அரசு வண்டி இல்லை போலிருக்கிறதே?'' என்று கேட்டாள்.

கொஞ்ச காலமாக, அரசு வண்டிகளிலேயே, பயணம் செய்து விட்டு, நம்பர் தகட்டில் 'அ'வைக் காணாமல் வித்தியாசமாக இருக்கிறது போலும் என்று எண்ணினாள்.

காரோட்டி ஒன்றும் சொல்லாமல் நிற்க, ''நிறையப் பேர் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளவென்று, இலவசமாகக் கார் கொடுத்திருக்கிறார்கள், மேடம் அதில் இதுவும் ஒன்றாக இருக்கலாம்'' என்றாள் தமயந்தி.

''அப்படித்தானுங்க. எங்க பெரிய அய்யா அப்படிக் கொடுத்ததுதானுங்க'' என்றான் டிரைவர்.

''மேடம், நீங்கள் சீக்கிரம் கிளம்புங்கள். அல்லது நீங்கள் போய்ச் சேருமுன், கலெக்டர் சாப்பிட்டு முடித்து விட்டு, அடுத்த இடத்துக்குக் கிளம்பிப் போய் விடுவார்!'' என்று, இளம் டாக்டர் மிரட்ட, ''ஆமாங்க கலெக்டர் அய்யா கூட, அப்படித்தான் சொல்லி அனுப்பிச்சாங்க'' என்று காரோட்டியும் கூறினான்.

கடைசியாக, அதுவே நிகிலாவை முடிவெடுக்கச் செய்து, அந்தக் காரில் ஏறவும் வைத்தது.

முகாமில் இருந்த மற்றவர்களுக்குக் கையசைத்து விடை பெற்று விட்டு, முன்புறம் திரும்பிய நிகிலா, சற்றுத் திகைத்தாள்.

''டிரைவர், கார் தப்பாகப் போகிறது போல இருக்கிறதே. இந்தப் பக்கம் தானே வெள்ளம் பாதித்த இடம்? நீங்கள் எதிர்ப்புறம் போகிறீர்களே'' என்று கேட்டாள்.

''இல்லைங்கம்மா. இந்தப் பக்கம்தான் எங்க அய்யா வீடு. அங்கேதான் உங்களுக்குச் சாப்பாடு'' என்றான் காரோட்டி.

''இந்த மாதிரி நேரத்தில் விருந்தா!''

நிகிலாவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ஆனால், எதிர் நோக்கியிருப்பது ஆபத்து என்று அவள் தெளிவாகத் தெரிந்து கொள்ள மேலும் அரை மணி நேரம் ஆயிற்று!

## 19

**கா**ர் கிளம்பிப் பதினைந்து நிமிஷங்களிலேயே, ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்று நிகிலாவுக்குப் புரிந்து விட்டது.

காரை நிறுத்துமாறு, அவள் கூறியதை, உத்திரவிட்டதை, கத்தியதை எதையுமே, அந்தக் காரோட்டி காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை!

கார், நேரான ரோடுகளில் செல்லவில்லை. முடிந்த அளவு வேகமாகச் சென்றது. சுற்றி வளைத்து ஆள் நடமாட்டம் இல்லாத வழிகளில் சென்றது.

உதவி கேட்டு அவள் கத்தினால் அது யார் காதிலும் விழுந்து விடக் கூடாது என்று அந்த டிரைவர் நினைத்திருக்க வேண்டும் என்று புரிந்தது!

பல இடங்களில் வண்டித் தடத்திலும், ஒற்றையடிப் பாதையிலும் கூடக்காரை ஓட்டிச் சென்றான் அவன்.

ஆங்காங்கே முளைத்திருந்த பனை மரங்களில் ஒன்றில், இந்தக் கார் கட்டாயம் மோதப் போகிறது என்று கூட ஒரு சமயம் நிகிலா நிச்சயமாக நினைத்தாள்.

ஒருவேளை, இந்தப் பயணத்தின் முடிவில் அவளுக்குக் காத்திருக்கும் விதிக்கு அப்படி மோதிச் சாவதே மேலானதாக இருக்குமோ என்று கூட ஒரு தரம் அவளுக்குத் தோன்றியது. ஏனெனில், யாரோ அவளைக் கடத்திப் போவது இப்போது அவளுக்கு உறுதியாகி விட்டது.

ஆனால் சாவைப் பற்றிய எண்ணம் தோன்றியதும் நிகிலாவுக்குத் தைரியமும் வந்து விட்டது.

'சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டம்' என்று சொல்வார்கள். அவள் சாவுக்கே முயன்றவள் அல்லவா?

என்னதான் நடக்கிறது என்று பார்த்து விடலாம் என்ற திடம் உண்டாயிற்று.

அத்தோடு நரேந்திரனும் அவ்வளவு எளிதாக அவளுக்குத் துன்பம் நேர விட்டு விட்டுச் சும்மா இருந்து விடமாட்டான்!

கார்க் கதவைத் திறந்து கொண்டு குதித்து விடலாமா என்று யோசித்து விட்டு, அந்த யோசனையைக் கை விட்டாள்.

சும்மாவே உருட்டிப் புரட்டினாலும் வேகமாகச் செல்லும் கார். இதிலிருந்து குதித்தால் கை, கால் உடைவதுதான் மிச்சமே தவிர தப்பிப்பது முடியாது. பயணத்தின் முடிவில் போராடுவதற்கு உடைந்த உறுப்புகளை விட உருப்படியாக இருக்கும் கை, கால்கள் தானே நல்லபடியாக உதவக் கூடும்?

ஒரு புறம் அமைதியாக யோசித்தாலும் மறுபுறம் நிகிலாவின் இதயமும் பந்தயக் குதிரை போல, தடதடத்துக் கொண்டுதான் இருந்தது.

இருந்திருந்து இப்போது போய் இப்படி நேர வேண்டுமா? ஏக்கம் வேறு!

கடைசியாகத் தென்னை மரங்கள் மிகுந்திருந்த ஒரு தோப்பின் நடுவே இருந்த சிறு வீட்டின் முன் காரை நிறுத்தினான் அதை ஓட்டி வந்தவன்.

கார்க் கதவைத் திறந்து விட்டு, "எங்கயாச்சும் ஓடிடலாம் அப்படின்னு நினைச்சு, ஓடக் கிளம்பிராதே. அப்புறம் நாலு சாத்து சாத்தி இழுத்துக்கிட்டு வந்து போடும்படியாய் போயிடும். வாயைத் திறந்து கத்தினாலும் இங்க யாரும் வரமாட்டாங்க. ஏன்னா இது எங்க அய்யா இடம். இனிமே இதிலேதான் உனக்கு சமாதி. என்னா திமிரு இருந்தா எங்க சின்னய்யாவப் பிடிச்சுக் கொடுப்பே!" என்று சீறினான் காரோட்டி.

சின்னய்யா! சின்னய்யாவைப் பிடித்துக் கொடுப்பது!

சட்டென நினைவு வந்தது நிகிலாவுக்கு! இந்தக் கரும் சாம்பல் நிறத்து அம்பாசிடர்தான் அன்று செல்வி வந்த கார். பங்களாவின் உள்ளே இருந்து பார்க்கும் போது எண்கள் தெரியாவிட்டாலும் வண்ணம் நன்றாகவே கண்ணில் பட்டது!

ஆனால் அது இப்போது ஞாபகம் வந்து என்ன பிரயோஜனம்?

ஆக அவள் ஓரளவு எதிர்பார்த்தது போல, இது சுகேசன் செல்வியுடைய குடும்பத்து வேலைதான்! விரோதி என்று அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

செல்வி மிரண்ட விதத்தில் அவர்களுக்கு அந்த அளவு தைரியம் வருமா என்று சந்தேகம் இருந்தது. தைரியம் வந்திருக்கிறது!

இவர்களிடம் பேசியே சமாளித்து விடலாம் என்று நினைக்கும் போதே 'சமாதி' என்கிறானே என்று நிகிலாவுக்குக் கலக்கமாகவும் இருந்தது.

நரேந்திரனுக்கு விஷயம் தெரிந்து அவன் அவளைத் தேடிக் கண்டுபிடிக்கும் வரை தாங்க வேண்டுமே?

அதுவரை சமாளித்தாக வேண்டும்!

இந்த அடியாளிடம் அனாவசியமாகத் தகராறு வைத்துக் கொள்ள நிகிலா விரும்பவில்லை. அவனுக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை அவளை இங்கே கொண்டு வந்து சேர்ப்பது. தப்பி ஓட முயன்றால், அவன் சொன்னதுபோல் நாலு சாத்து சாத்தப் போகிறான்!

அவனுடைய சின்னய்யா செய்த குற்றத்தைப் பற்றி அவனிடம் எடுத்துச் சொன்னாலும் பயன் ஏதும் இருக்கும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

ஏற்கனவே அவனுடைய எஜமானியிடம் சொல்லிப் புரிய வைக்க முயன்று தோற்றதுதானே? இவன் மட்டும் என்ன புரிந்து கொண்டு விடப் போகிறான்?

அத்தோடு எல்லா விஷயமும் தெரிந்துதானே அவளைக் கடத்தியும் வந்திருக்கிறான்.

எனவே, அந்தச் சிறு வீட்டினுள் செல்லுமாறு அவன் கூறிய போது, மறுக்காமல் நிகிலா அவனுக்குப் பணிந்து உள்ளே போனாள்.

கதவை வெளியே பூட்டிக் கொண்டு காரோட்டி காவலிருந்தான்.

மிஞ்சி மிஞ்சி அரை மணி நேரம் இருக்கும். ஒரு பைக் வந்து நின்ற சப்தம் கேட்டது.

சாவித்துவாரத்தின் வழியே நிகிலா பார்த்தாள்.

சுகேசன்தான்.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு நோட்டுக் கட்டை காரோட்டியிடம் கொடுத்து "பைக்கைக் கொண்டு மண்டியில் வைத்து விட்டுப் போ. குறைந்தது ஒரு மாதம் இந்தப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்காதே! இங்கே ஆரவாரம் எல்லாம் அடங்கியதும் கடுதாசி எழுதுகிறேன். அப்புறமாக நீ இங்கே வந்தால் போதும்!" என்று சொல்லி அனுப்பினான்.

'அப்படியானால் சுகேசனை மட்டும் சமாளித்தால் போதும்! சுலபம்தான்!

நிகிலா நினைத்தது அப்படித்தான்!

ஆனால், பைக் கிளம்பிச் சென்ற சத்தத்தை அடுத்துக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த சுகேசன் வெறி கொண்டவனாக இருந்தான்.

உள்ளே வந்தவன் முதலில், க்தவின் உட்புறத் தாள்பாள்களைப் போட்டான்.

மீண்டும் திரும்பி நிகிலாவைப் பார்த்தான்.

பிறகு, அவன் கையிலிருந்த பத்திரிகையைக் காட்டினான். அதிலும் நரேந்திரனின் புகைப்படம் இருந்தது பக்கத்தில் செய்தி.

"இது தென்காசிப் பதிப்பு. இதில் உன் புருஷனைப் பற்றிய செய்தியோடு நிறுத்திவிடவில்லை. பெரிய பண்ணையைப் பற்றிய செய்தியும் இருக்கிறது. என்ன தெரியுமா? பெரிய பண்ணை மருமகன் சின்னப் பிள்ளை

களைக் கொடுமைப்படுத்தியதாக அதைக் கண்டுபிடித்து கைது செய்ய ஏற்பாடு செய்த கலெக்டர் சம்சாரத்தையும் பாராட்டி இருக்கிறான் பரதைப் பயல்!

"ஆனால் இவன்கள் என்ன உன்னைப் பாராட்டுவது? இப்போது நான் உன்னைப் பாராட்டப் போகிறேன். முழுசாக. ஓர் ஆண்மகன் ஒரு பெண்ணை எப்படியெப்படிப் பாராட்ட முடியுமோ, அப்படியெல்லாம் பாராட்டப் போகிறேன். புரியவில்லை? அடச்சீ, வாடி இங்கே! பெரிய பத்தினி மாதிரி பின்னாடியல்ல போகிறாள். என்ன திமிர் இருந்தால் என்னைக் காட்டிக் கொடுப்பாய்? பதிலுக்கு மரியாதை செய்ய வேண்டாம்? சொன்ன பேச்சு கேட்டு மரியாதையாக வந்தாயானால் உனக்கு நல்லது. இல்லாவிட்டால் உடம்பு புண்ணாகி விடும்!" என்று கடும் குரலில் எச்சரித்தான் அவன்.

"சுகேசன் அங்கேயே நில்லுங்கள். கொஞ்சம் நிதானமாக யோசியுங்கள். சும்மாவே நீங்கள் குற்றவாளி. இதுவும் சேர்ந்தால் எத்தனை ஆண்டுகள் களி தின்ன நேரும் தெரியுமா? அத்தோடு, நரேந்திரனும் உங்களைச் சும்மா விடமாட்டார். நினைவிருக்கட்டும்" என்றாள் நிகிலா மிரட்டலாக.

"அடடே! நீ சொல்லுவியா கண்ணு? சொல்லு! அதையும் இந்தப் பத்திரிகைக்காரர்கள் விரிவாப் போடுவார்கள். அதை விட உன் புருஷனிடம் நீ சொல்லும் போது உங்கள் இருவர் மூஞ்சிகளையும் நான் பார்க்க வேண்டுமே!" என்று சுகேசன் எகத்தாளம் செய்ய நிகிலா திகைத்தாள்.

அவன் சொல்வது சரிதானே?

உழைத்து உயர்வான செயல் புரிந்து உன்னதமான புகழ் பெற்றிருக்கும் நரேந்திரனின் பெயரல்லவா நாறி விடும்? தப்பேதும் செய்யாமலே நாறிப் போகும்!

அவள் முகத்தைப் பார்த்து விட்டு எள்ளி நகைத்தான் சுகேசன்.

"புரியுதில்லை? முரண்டு பண்ணாதே கண்ணு. ஏன், நமக்கு நிச்சயமான கல்யாணம் நடந்திருந்தால் இப்படியா விலகிப் போவே? அடி வாடி என்றால்" என்று சட்டென ஒரு தாவலில் நிகிலாவின் கைகளைப் பற்றிக் கொண்டான் அவன்!

சுகேசனின் முதல் பிடியிலிருந்து நிகிலா உடனேயே தன்னை விடுவித்துக் கொண்டாள். ஆனால் தேங்காய் பறித்துப் போடுவதற்காக அமைக்கப்பட்ட சின்ன அறை அது. ஒரு புறம் முழுமையும் தேங்காய்க் குவியல் வேறு அடைத்துக் கிடந்தது. மீதி இடத்தில் எவ்வளவு தான் ஓட முடியும்?

மீண்டும் சுகேசன் அவளை நெருங்கிப் பற்றியபோது, இருவருக்கும் அருகே ஏதோ விழுந்தது.

அனிச்சையாய் நோக்கிய இருவரும் அதே அனிச்சைச் செயலாய் நாலடி பின் நகர்ந்தனர்.

ஏனெனில், ஓட்டுக் கூரையிலிருந்து கீழே விழுந்தது ஒரு தேள்!

செருப்பைத் தூக்கிக் கொண்டு சுகேசன் அதை அடிக்க வருமுன், பாய்ந்து சென்று தேளைக் கையில் தூக்கி விட்டாள் நிகிலா.

"ஏய், அது தேள்; கொட்டி விடும் தூரப் போடு" என்று கத்தினான் சுகேசன்.

"போடத்தான் போகிறேன். ஆனால், உன் மேல், உன்னைக் கொட்டட்டும் அது!" என்றபடி தேளின் கொடுக்கைப் பிடித்துக் கொண்டு அவனை நோக்கி மெதுவாக நகர்ந்தாள் அவள்.

''போ. போய்க் கதவைத் திற. சீக்கிரம்'' என்று அதட்டினாள்.

''சும்மா மிரட்டாதேடி. உனக்கும் பயம்தானே? முகம் வியர்த்து விட்டதே'' என்றான் சுகேசன், கவனத்துடன் பின்னே நகர்ந்தபடி.

''எனக்கு ஒன்றும் பயமில்லை. போய்க் கதவைத் திற இல்லாவிட்டால்'' என்று இறுகிய முகத்துடன் மீண்டும் நிகிலா அவனை மிரட்டினாள்.

சற்றுத் தயங்கிப் பார்த்து விட்டு நிகிலா உறுதியாக இருப்பதைக் கண்டு வேறு வழியின்றிக் கதவைத் திறக்கச் சென்றான் சுகேசன்.

அப்படி அறையை விட்டு வெளியே சென்றாலும், நிகிலா அப்படி எங்கே ஓடி விட முடியும்.

கூடவே இந்த இடத்தில் இருக்கக் கூடும் என்று கண்டுபிடித்து யாரும் வரவும் முடியாது என்று அவன் நிச்சயமாக நம்பினான்.

ஏனெனில் கார் பினாமி பெயரில் இருந்ததால், கார் நம்பரை வைத்து அவனைக் கண்டுபிடிக்க முடியாது. அதோடு க்ாரோட்டி வந்த வழி மூலமும் யாரும் பின் தொடருவதற்கில்லை என்பதோடு பின் தொடரவில்லை என்பதும் நிச்சயமே!

எனவே தேளை அவள் கீழே போட்டதும், அவளை மீண்டும் பிடித்துக் கொள்ளலாம் என்று எண்ணி அவள் சொன்னபடி, சுகேசன் கதவைத் திறந்தான்.

அதன் பிறகு என்ன நடந்தது என்று அவனுக்குப் புரியாது போயிற்று.

நிகிலா கிளம்பிச் சென்று சுமார் முப்பது நிமிடங்களுக்குப் பிறகு நரேந்திரன் ஒரு ஜீப்பில் அந்த முகாமை அடைந்தான்.

யாரோ நோயாளிக்காகத் தயாரான இளம் மருத்துவர்கள் நரேந்திரனைக் கண்டதும், "என்ன சார்? அந்த 'கேம்ப்'பில் அதிகத் தேவையா? அதனால் மேடத்தை அங்கேயே விட்டு விட்டு வந்தீர்களா?" என்று கேட்டார்கள்.

நிகிலா எப்படிச் சென்றாள் என்று கேட்டதுமே, அங்குள்ளோருக்கு என்னவோ என்று தோன்றி விட்டது.

"ஏன் சார்? நீங்கள் அனுப்பிய கார்தானே? மேடம் அங்கே வரவில்லையா? அவர்களுக்கு ஆபத்தா?" என்றெல் லாம் கேட்கத் தொடங்கினர்.

"ஆபத்து ஏதும் இராது. ஆனால் அந்தக் காரைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று தன் தவிப்பை வெளிக் காட்டாமல் நரேந்திரன் விசாரித்தான்.

"நம்பர் பார்த்தேன் சார்" என்று இளம் டாக்டர் அதை எழுதிக் கொடுக்க "அந்தக் கார் எங்கள் ஊர்ப்பக்கம் பூவிளைக்காரர் கார், சார். பெரிய பண்ணையுடையது. நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்" என்றாள் நர்சாக உதவி புரிந்த பெண்!

நரேந்திரன் உடனே கிளம்பவும், கூடவே வந்து "மேடம் ரொம்பவும் தயங்கினார்கள். நாங்கள்தான் கேலி செய்து அனுப்பி வைத்தோம். உதவிக்கு நாங்களும் வரட்டுமா?" என்று கவலையுடன் கேட்டனர்.

"இல்லை. நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் இங்கே நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று விட்டு ஜீப்பைக் கிளப்பினான்.

டெலிஃபோனில் அழைத்து இங்குள்ள வேலைகளை பகிர்ந்து அளித்து விட்டு 'பூவிளை' தாசில்தார் மணியை அழைத்துத் தன் தேவையைத் தெரிவித்தான். அதன் பின் ஜீப்பை வடப்புறமாகத் திருப்பினான் நரேந்திரன்.

பெரிய பண்ணை துரைசாமியின் சொத்துக்கள் அவனுக்கு அத்துப்படி.

நிறைய வரி கட்டுவதில்லை. பல்வேறு குற்றங்கள் நடக்கின்றன என்று பண்ணை பற்றி முழு விவரம் சேகரித்து வைத்திருந்தான்.

அதனால் இப்போது நிகிலாவை எப்படியும் கண்டு பிடித்து விடலாம். ஆனால் அதற்குள் அவளுக்கு எந்தக் கெடுதலும் நேராதிருக்க வேண்டுமே!

இந்தப் புறமிருந்து பண்ணையின் முதல் சொத்து தென்னந் தோப்பில் தொடங்குகிறது. தென்னந்தோப்பைக் குறி வைத்து வாகனத்தை வேகமாகச் செலுத்தினான்.

நேரான வழியில் சென்றதால் சுகேசனுடைய காரோட்டி சென்றதை விட வெகு சீக்கிரமாகவே நரேந்திரன் தென்னந் தோப்பை அடைந்துவிட்டான்.

அங்கே கரும்சாம்பல் வண்ணக் காரைக் கண்டதும் நிகிலாவின் அருகில் வந்து விட்டதும் அவனுக்கு உறுதி யாயிற்று!

ஆனால் அவள் என்ன நிலையில் இருக்கிறாளோ?

உள்ளே ஏதோ தெளிவற்ற குரல் கேட்க, உள்ளூரக் கலங்கியவாறே அவன் அந்த சிறு வீட்டை அடைந்த போது வீட்டின் கதவு திறக்கப்பட்டு சுகேசன் மெல்ல வெளியில் வந்தான்.

அவனைப் பார்த்ததும், தன்னை மீறிய ஆவேசத்துடன் அவனைப் பிடித்துத் துவைத்து எடுத்து விட்டான் நரேந்திரன்!

அந்த அளவுக்கு அடி உதைகள்!

சுகேசன் நிமிர்ந்து பார்த்தான். அங்கே நரேந்திரன்!

பாவி! அதற்குள் எப்படி இங்கே வந்தான்?

நிகிலாவைக் கடத்தியது அவன்தான் என்று எப்படிக் கண்டுபிடித்தான்?

இப்போது அவனை அடித்தே கொன்றுவிடப் போகிறானா? அய்யோ!

உயிருக்காக சுகேசன் குலை நடுக்கம் கொண்ட அந்த வேளையில், "போதும் விடுங்கள்" என்று நிகிலாவின் குரல் மெல்லிசாக ஆனால் அமுதமாக அவன் காதில் விழுந்தது.

அவள்தான் மெல்லிய குரலில் பேசினாளா, அல்லது நரேந்திரன் கொடுத்த உதையில் அவன் காதுதான் அடைத்துக் கொண்டு விட்டதா?

மனைவியின் சொல் கேட்டு நரேந்திரன் தன்னை விடுவானா என்று சுகேசன் கலங்கியபோது, முன்னவன் அவனைச் சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்.

அவனை அறைய நரேந்திரன் மீண்டும் கையை உயர்த்தியபோது, "பரவாயில்லை. விடுங்கள். நரேன்" என்றாள் நிகிலா பழைய குரலிலேயே. "எச்சரித்து விரட்டி விடுங்கள் போதும், நாம் சீக்கிரம் போவோம்."

நரேந்திரன் எச்சரிக்கும் முன்பாக சுகேசனே, "இனி உங்கள் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கமாட்டேன்" என்று கும்பிட்டான்.

"போய்த் தொலை. ஆனால் இன்னொரு தரம் இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாய் என்று வைத்துக் கொள்

திரும்புவதற்குக் கால், பார்ப்பதற்கு கண் ஒன்றுமே இராது'' என்று அடிக்குரலில் மிரட்டி விட்டு அவனை விடுதலை செய்தான் நரேந்திரன்.

தப்பித்தேன், பிழைத்தேன் என்று மூச்சிரைக்க ஓட்டமாய் ஓடினான் சுகேசன்.

''அவனை அடிப்பதை ஏன் தடுத்தாய்?'' என்று சிறு கோபத்துடன் நரேந்திரன் கேட்டான்.

''வலிக்கிறது?'' என்று ஒரு கையால் கணவன் தோளைப் பற்றி அவன் மீது லேசாகச் சாய்ந்தாள் நிகிலா.

''அவனை அடித்தால் உனக்கென்ன'' என்று கோபமாகவே தொடங்கியவன், அவள் முகத்தைப் பார்த்து விட்டு, ''என்ன வலி உனக்கு? அவன் அடித்தானா? அவனை'' என்றான் ஆத்திரத்துடன்.

''இல்லை'' என்றாள். அவள் முனகலாக. ''அது தேள். அவனை மிரட்டத் தேளைப் பிடித்தேனா? தேள் கையில் கொட்டி விட்டது. அது வலிக்கிறது'' என்றாள் வேதனையில் குறுகியபடி.

''வாட்?'' என்று அதிர்ந்தான். நரேந்திரன். ''எங்கே? தேள் எங்கே எந்தக் கையில் கொட்டியது?'' என்று பதறினான்.

வலியால் முகம் சுளித்தபடி, நிகிலா வலது கையில் தேள் கொட்டிய இடத்தைக் காட்டினாள்.

''கையைத் தொங்கப் போடு. உயர்த்தாதே'' என்றவன், அவசரமாகப் பான்ட் பைக்குள் கையைவிட்டு கைக் குட்டையை எடுத்தான்.

அதை இரண்டாகக் கிழித்து அவளது முழங்கைக்கு மேலும் மணிக்கட்டிலுமாக இரு இடங்களில் இறுகக் கட்டினான்.

சட்டென அவளைத் தூக்கிச் சென்று ஜீப்பில் உட்கார வைத்தான். "கொஞ்சம் பொறுத்துக் கொள். இதோ சீக்கிரமாக டாக்டரிடமே காட்டி விடலாம்" என்று வண்டியைக் கிளப்பினான்.

முகாமில் இருந்த டாக்டர்கள், அவளுக்கு மிகுந்த பரிவுடன் சிகிச்சை அளித்தனர்.

"என்ன மேடம், தேள் எப்படிக் கொட்டியது?" என்று பேச்சுக் கொடுத்தனர்.

"இல்லாவிட்டால், பாம்பு கொத்தியிருக்குமே" என்று நிகிலா சோர்வுடன் கூறியதின் பொருள். நரேந்திரனைத் தவிர அங்கே வேறு யாருக்கும் புரியவில்லை.

கை முஷ்டி இறுக அவன் நிற்க "வலியில் ஏதோ சொல்லுகிறார்கள்" என்றாள் தமயந்தி. "நீங்கள் கவலைப்படாதீர்கள் சார். மேடத்துக்கு விஷம் இறங்கத் தொடங்கி விட்டது. சீக்கிரம் நன்றாகி விடுவார்கள்" என்று நரேந்திரனுக்கும் தேறுதல் சொன்னாள்.

அன்றிரவு வீடு திரும்பும் வரை, நிகிலாவை ஓய்வெடுக்க வைத்ததால், வீட்டுக்கு வந்து சேர்ந்த போது அவள் கிட்டத்தட்ட, இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டாள் எனலாம்.

இயற்கை இயல்பு நிலைக்குத் திரும்பி விட அன்றையத் தினம் வேலைகள் முடிந்து நரேந்திரன் சற்று சீக்கிரமே வீடு திரும்ப முடிந்தது.

உணவு முடிந்தபின், இருவருமாக ஹாலில் அமர்ந்து அன்றைய நிகழ்வுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

பொதுப்படையான பேச்சு. அதுவும் கூடச் சரளமாக ஓடாமல், சிறுசிறு தயக்கங்களுடன் கூடியதாக இருந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்த நாளில் இருந்து அறியாத நிலை.

நிகிலாவின் மனதில் அன்று காலையில் இருந்த உல்லாசம் இப்போது இல்லை.

துன்புற்ற மக்களைக் கண்டது. சுகேசனிடம் மாட்டிக் கொண்டு அவதிப்பட்டது என்று எத்தனையோ இருந் திருந்தும், தன் மனச் சோர்வுக்கு, அதெல்லாம் காரணம் இல்லை என்பதை நிகிலா நன்றாகவே உணர்ந்திருந்தாள்.

நரேந்திரனிடம், முழுமையான நேசம் வைத்து விட்ட அவளுக்கு கணவனும் தன்னிடம் அதே அன்பைச் செலுத்த வேண்டும் என்ற ஆசையில் மனம் துடித்தது.

ஆனால் அவளுக்காக அவன் எவ்வளவோ செய்த போதும், முன்தினம் அவளை மிகுந்த ஆசையுடன் அணைத்த போதும் அவன் மனதில் தான் மட்டுமே இருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை.

அப்படி நம்பாமல் இருப்பதற்கான காரணங்களைக் கணக்கிட்டுப் பார்த்து அவள் மனம் தவித்துக் கொண்டிருக் கையில் அவனோடு இயல்பான பேச்சு எங்கிருந்து வரும்?

அவள் மனம் இப்படி அலை பாய்ந்து கொண்டிருக்க நரேந்திரன் மனதும் சஞ்சலப்பட்டுக் கொண்டுதான் இருந்தது போலும்!

ஆனால் அவன் அதற்கு விடை காண எண்ணியவனாக, "உன்னோடு சற்றுப் பேச வேண்டும் நிகிலா உள்ளே வருகிறாயா?" என்று அழைத்தான்.

'திக்'கென்று விட்டது நிகிலாவுக்கு.

நேற்றைய இரவு ஒரு தவறு, கனவாக மறந்து விடு என்று சொல்லப் போகிறானா?

எப்படித் தாங்குவது?

உடம்பே கூடாகி விட்ட உணர்வுடன், கணவனைப் பின் தொடர்ந்து அவனது அறைக்குள் சென்றாள் அவள்.

கனத்த இதயத்துடன் அவள் காத்திருந்த போது நரேந்திரன் வேறு கேட்டான்.

"சுகேசனைக் கைது செய்ததற்காக நேற்று ஏன் அவ்வளவு கோபப்பட்டாய்?"

சுகேசன்? கைது? இவன் எதைப் பற்றிப் பேசுகிறான்?

முற்பிறவியில் நடந்தது போலத் தோன்றியதை, யோசித்து நினைவுக்குக் கொண்டு வந்து பதில் சொன்னாள். "அவரைக் கைது செய்ததற்காகக் கோபப்படவில்லை! என்னைக் கருவியாகக் கொண்டு சுகேசனைக் கைது செய்ய ஏற்பாடு செய்தீர்கள். குழந்தைப் பணியாளர்கள் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுமாறு என்னை நீங்கள் தூண்டியதன் காரணமே அதுதானே? அதுதான் என் கோபம்" என்றாள் கனத்த குரலில்.

"அதில் என்ன தப்பு?" என்று கேட்டான் அவன்.

"என்ன தப்பா?"

நிகிலா வெறித்து நோக்கவும் "உன் மூலமாக சுகேசனுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் என்று நான் நினைத்தேன் தான். காரணம் ஒன்று, அவன் உனக்குச் செய்த அநியாயத்துக்குத் தகுந்த தீர்ப்பு என்பது. அடுத்தது, அவன் செய்யும் பாதகம் முழுமையாகத் தெரிந்தால் உனக்கு அவன் மேல் உள்ள கொஞ்ச நஞ்ச ஆசையும் அடியோடு அற்றுப் போகும் என்பது. இந்த இரண்டிலுமே என்ன தப்பு? எனக்குப் புரியவில்லையே" என்று கேட்டான் நரேந்திரன்.

இந்த இரண்டும்தான் காரணமா?

"என்ன தப்பு? ஒன்றுமே இல்லையே! உங்கள் காதலியை சுகேசன் கவர்ந்தார் என்பதற்காகப் பழி வாங்குவதையும், அந்தக் காரணங்களில் சேர்த்துக் கொண்டால் அப்புறம் யார் உங்களைத் தப்புச் சொல்லப் போகிறார்கள்?" என்று ஏளனமாகக் கேட்டாள் அவள்.

"என்ன... என்ன...? என் காதலியா? இது என்ன புதுக்கதை?" என்று அவன் விசாரித்த தோரணை ஆத்திரமூட்ட.... "புதுக்கதை ஒன்றும் இல்லை. நாம் சந்தித்த முதல் நாளே, நீங்கள் சொல்லவில்லை? சுகேசனோடு ஒரு பெண் விஷயமாகப் பழைய கணக்கொன்று உங்களுக்கு இருப்பதாகச் சொன்னீர்களே! எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறதே!" என்றாள் நிகிலா.

ஏதோ தெளிவான மாதிரி, அவன் முகம் மலர்ந்தது.

"எனக்கு நன்றாக நினைவிருக்கிறதே! ஒரு பெண் விஷயமாகப் பழைய கணக்கு இருப்பது தவிர, காதலி என்று நான் சொல்லவே இல்லையே!" என்றான் விளையாட்டுக் குரலில்.

கூடவே அவள் மூக்கைப் பிடித்து ஆட்டி, "ஆக இதுதான் மண்டைக்குள் இருந்து குடைந்ததா? அவ்வப்போது நீ நெருங்கி விட்டது போலத் தோன்றும். ஆனால் உடனேயே கிலோ மீட்டர் கணக்கில் தூரப் போய் விட்ட மாதிரி ஆகிவிடும். இன்னும் சுகேசன் நினைவாக்கும் என்று எவ்வளவு கஷ்டப்பட்டு விட்டேன். தெரியுமா?" என்று குறையோடு கேட்டவன் அவளைத் தன் கையணைப்பில் நிறுத்தி, "இனிமேல் இங்கிருந்துதான் எது வேண்டுமானாலும் கேட்க வேண்டும். தெரியுமா?" என்று செல்லக் கண்டிப்புடன் உத்திரவிட்டான் நரேந்திரன்.

கணவனின் குரலிலும், அணைப்பிலுமாக நெஞ்சைக் குழப்பிய சஞ்சலங்கள் விலக, "அப்படியானால்

சொல்லுங்கள். அந்தப் பெண் யார்?'' என்று வினவினாள் நிகிலா.

ஒரு சிறு பொழுது நரேந்திரனின் முகத்தில் ஒளி மங்கியது.

அவளை அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்து ''சுரேகா என் நண்பனுடைய தங்கை அவள். சுகேசனின் பசப்பில் மயங்கி இவனை நம்பி வீட்டை விட்டு ஓடி, சொன்ன இடத்தில் இவன் இல்லாது போகவே, வீட்டுக்குத் திரும்பி வர வெட்கி, தற்கொலை செய்து கொண்டாள். அவமானம் தாளாமல் சொத்துபத்துகளை அரை விலைக்கு விற்று விட்டு நண்பன் குடும்பம் ஊரை விட்டுப் போய் விட்டது. இன்னமும் பழைய நிலைக்கு வரவில்லை. அதுதான் அவனைப் பார்க்கும் போது என் நண்பன் நினைவுதான் வருகிறது. நண்பனுக்கு என்னென்ன கனவுகள் தெரியுமா? அத்தனையும் கெடுத்து விட்டானே!'' என்றான் வருத்தத்துடன்.

பழைய நினைவில், ''தோற்று விட்டேன் என்று மறுபடியும் வீட்டுக்குத் திரும்புவது மிகவும் கஷ்டம்தான் தெரியுமா?'' என்றாள் நிகிலா.

சட்டென, அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு ''என்ன மலரும் நினைவுகளா?'' என்று நரேந்திரன் கிண்டலாகக் கேட்கவும் அவளுக்கு குபுக்கென்று சிரிப்பு வந்து விட்டது.

சிரிப்பை அடக்கிக் கொண்டு ''பாவம் உங்கள் நண்பர்!'' என்றாள்.

''இனி நன்றாகி விடுவான் என்று நினைக்கிறேன். திருமணம் நிச்சயமாகியிருக்கிறதாம். எழுதியிருந்தான்'' என்று நரேந்திரன் புன்னகையுடன் தெரிவித்தான்.

''அப்பாடி'' என்று தானும் மனதில் சுமையிறங்கி மகிழ்ந்தாள் நிகிலா.

மனைவியின் கைகளைத் தன் கைகளில் எடுத்து உதட்டில் பதித்து விட்டு "உன்னை முதல் தடவை பார்த்த போது, மனதில் ஒரு பாதிப்பு நிகிலா. உன்னைச் சாகவிடக் கூடாது என்று ஒரு பிடிவாதம். திருமணம் என்ற விடை அவ்வளவு சாதாரணமாக வந்தது எனக்கே ஆச்சரியம்தான். ஆயினும் உள்ளூர ஒரு கவலை மனதைக் குடையத்தான் செய்தது. அவன் கை விட்டான் என்று உயிரை விடும் அளவுக்குத் துணிந்திருக்கிறாளே. மனம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு விட்டதோ என்று! அவன் எவ்வளவு மட்டமானவன் என்பதை நீயாகவே கண்டுபிடிக்க நேர்ந்தால் அந்தப் பாதிப்பு அடியோடு விலகி விடும் என்று நிச்சயமும் இருந்தது. என் உள்ளுணர்வு இதுவரை தப்பு வழி காட்டியதில்லை நிகில். இப்போதோ வரமே கிடைக்க வழி செய்திருக்கிறது" என்றான் நரேந்திரன்.

ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு. ஒரு மாவட்டத்தையே நிர்வாகம் செய்கிறவன். அதுவும் முதலமைச்சரே பாராட்டுகிற அளவுக்கு, அவனுக்கும் கூட சந்தேகமா?

அதுவும், பார்க்கிற எத்தனை பேர் அவர்களைப் பொருத்தமான ஜோடி என்று பாராட்டி இருக்கிறார்கள்?


பொருத்தமான தோற்றம் இருந்து என்ன பயன்? உள்ளம் இன்னும் ஒன்றவில்லையே என்று அவள் எத்தனை முறை வருந்தியிருக்கிறாள்.

இவனானால் இன்னொரு விதமாகக் கவலைப்பட்டிருக் கிறான்.

ஓரக்கண்ணால் நோக்கி, "என்ன செய்வது? பெரிய கலெக்டர். கட்டிக் கொள் என்றால் மாட்டேன் என்றா சொல்ல முடியும்? வாழ்க்கை முழுவதும் அவரோடு சந்தோஷமாக

வாழ வேண்டும் என்று தலையில் எழுதியிருந்தால் அதை நான் ஏற்றுத்தானே ஆக வேண்டும்?'' என்று சோகம் போலச் சொன்னவளுக்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு பீறிட்வும் கூடச் சேர்ந்து நகைத்தபடி ''ஆமாம். இந்த கலெக்டர் சொல்கிறபடி யெல்லாம் நீ கேட்டுதான் ஆகவேண்டும் இப்போது'' என்று அவளை இறுக அணைத்தான், அவள் கணவன்.




கண்ணின் மணி
போன்றவளே
ரமணிசந்திரன்